# பூஜைக்கு வந்த மலரே வா...!



1

அலாரம் கதற ஆரம்பித்தது. சவுந்தர்யா புரண்டு படுத்தாள்.

அப்போதும், விட்டேனா பார் என்று கத்துவதை நிறுத்தாமல் அவளை எழுப்பி உட்கார வைத்தது. சவுந்தர்யா கண்களை திறக்காமலேயே அந்த குட்டி பிசாசை தடவி தலையில் தட்டினாள். அவள் கைபட்ட சுகத்திற்கு மகிழ்ந்து அடங்கிப் போனது.

மணி ஐந்து!

கண்களைத் திறக்கக் கூட முடியவில்லை. தூக்கம் அழுத்திற்று. மெல்ல எழுந்து வந்து முகம் கழுவினாள். ஜில்லென்ற தண்ணீர் தூக்கத்தை விரட்டி புத்துணர்ச்சியைத் தந்தாலும், கண்களின் எரிச்சல் குறையவில்லை.

எங்கே, படுக்கும்போதே இரவு பனிரெண்டுக்கு மேல் ஆகிவிட்டதே!

அதுவும், சமையலாகி எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்தி முடிக்கும்போது... ஒரு பெரிய பார்சலோடு வந்து நின்றான் அவள் அண்ணன் ராஜா!

வேறொன்றுமில்லை! அவன் மனைவி சுப்ரஜா வெகு நாட்களாக ஆட்டுக்கால் சாப்ஸ் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிறாளாம். ஓட்டலில் சுத்தபத்தமாய் செய்வதில்லை. தவிர காரத்தை அள்ளிக் கொட்டி வயிற்றை பதம் பார்த்து விடுகிறார்கள். நம் சவுந்தர்யா கைபட்டால்தான் எல்லாமே மணக்குமே! ஒருநாள் நம் வீட்டிலேயே சமைக்க வேண்டும் என்று மனைவி என்றோ ஒரு நாள் சொன்னதை கருத்தில் இறுத்தி, நேற்று வாங்கியும் வந்துவிட்டான்.

நிஜமாகவே ஆட்டுக் காலையெல்லாம் சமைத்து சவுந்தர்யாவுக்கு பழக்கமில்லை. என்னவோ அதைப் பார்த்தாலே குமட்டிக் கொண்டுதான் வந்தது. குச்சி குச்சியாய், கறுப்பாய் நெருப்பில் பொசுக்கியதால் வந்த ஒருவித வாடையோடு, பார்க்கும்போதே மூக்கிற்கு கையைக் கொண்டு போனாள்.

''ஏம்பா... ராஜா! சவுந்தர்யாவுக்கு இதெல்லாம் சமைக்க வராதே... நீ பாட்டுக்கு சொல்லாம, கொள்ளாம வாங்கிட்டு வந்துட்டே!'' தனசேகரன் மகனை கேட்டார்.

''இதென்ன பெரிய விஷயமா? சுப்ரஜாக்கிட்டே கேட்டுக்கட்டும். அவளுக்கு தெரியும். அவள் சொல்லித்



தர்றதை அப்படியே செய்யட்டும். ஏன் சவுந்தர்யா செய்வே யில்லே?''

''செ...செய்யறேண்ணா!''

மகளை பரிதாபமாய் பார்த்தார் தனசேகரன். வேறென்ன செய்ய முடியும்? தாயில்லா மகள்... கல்யாணமாகாத மகளுக்கு நேரும் கதிதான் இது! தங்கை இருக்க அண்ணனுக்கு முதலில் திருமணம் செய்வது தவறு. ஆனால், ராஜா சவுந்தர்யாவைவிட பத்து வயது மூத்தவன் என்பதால்... அவனுக்கு முதலிலேயே திருமணம் செய்துவிட வேண்டிய சூழ்நிலை! சவுந்தர்யாவிற்கு பனிரெண்டு வயதாகும்போது அம்மா இறந்து போனாள்.

அப்போது தனசேகரன்தான் சமைத்து, இரண்டு குழந்தைகளையும் பராமரித்து வந்தார். சவுந்தர்யா பெரியவளானதும் வீட்டு வேலைகளை வலிய இழுத்து செய்தாள். அப்பாவிற்கு பாரத்தை தர விரும்பவில்லை. அவர் வேலைக்கும் சென்று வந்து, வீட்டிலும் வேலை செய்ய வேண்டுமென்றால் மனுஷனுக்கு எங்கிருந்து ஓய்வு வரும்!

அதனாலேயே அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளை விரைந்து முடித்து பள்ளிக்கு ஓடுவாள் சவுந்தர்யா!

அப்போது தொட்டே... ராஜா... ஒரு துரும்பையும் இப்படி நகர்த்தி வைக்க மாட்டான். அப்படி ஒரு திமிர் பிடித்த குணம். அதிலும் படிப்பிலும் முதலிடத்தில் இருப்பதால்... அந்த கர்வம் வேறு உடன் சேர்ந்து கொண்டது.

அவனுக்கு மனைவியாய் வந்த சுப்ரஜா ராஜாவின் குணங்களோடு அப்படியே ஒத்துப் போனாள். இதைத்தான் ஜோதிடத்தில் பத்துப்பொருத்தம் என்றார்களோ, என்னவோ!

சுப்ரஜாவும் படித்தவள்... ஓரளவு வசதியான வீட்டில் நிறைய உடன்பிறப்புகளோடு வளர்ந்தவள். பாங்கில் கேஷியர் வேலை வேறு... அவள் தலையில் இரண்டு கொம்பை வளர்த்து விட்டிருந்தது. அவள் பிறந்தகத்தில் சமையலுக்கு, துவைக்க, துடைக்க என்று வேலையாட்கள் இருந்தனர். அதனால் விரல் நகத்தில் அழுக்குப் படாமல் வளர்ந்தாள்.

அதே சுகத்தை, வசதியை புகுந்த வீட்டிலும் எதிர்பார்த்தாள். ஆனால், முதன்முதலாய் இந்த வீட்டில் காலெடுத்து வைத்தபோதே... முகம் சுளித்தாள்.

'இந்த வீட்டிலா? இவ்வளவு சின்ன வீட்டிலா நான் வாழப் போகிறேன்? அம்மா, அப்பா தெரிந்தே என்னை இங்கே தள்ளிவிட்டு விட்டார்களா?'

தனியே தன்னை பெற்றவர்களை ஒருபிடி பிடித்து விட்டாள்.

'ஒரு புறாக்கூண்டில் கிளியை அடைத்து விட்டீர்களே! நீங்கள்லாம் என்ன மனுஷங்க? கொஞ்சம்கூட மனசாட்சியில்லாம, என் வாழ்க்கையோட விளையாடிட்டீங்களே!' என்று அழுதாள்.

''அடி பைத்தியக்காரி! எதுவும் புரியாம பேசாதே! இந்த வீடு உன் மாமனார் உன் புருஷனுக்கு எழுதி வச்சிருக்கார். வீடே பல லட்சத்துக்குப் போகும். தவிர, உன் புருஷன் பார்க்கிற கம்ப்யூட்டர் என்ஜினீயர் வேலைக்கு உன்னைவிட அழகான, பெரிய பணக்காரங்க வீட்லேர்ந்தெல்லாம் நீ நான்னு போட்டி போட்டுக்கிட்டு பொண்ணு தரத் தயாரா இருந்தாங்க. எப்படியோ தரகர் மூலமா பணத்தை தாராளமா வாரியிறைச்சி, உன் போட்டோவை மட்டும் காட்டச் சொல்லி... எவ்வளவோ தகிடுதத்தம் பண்ணிதான் இந்த வரனையே முடிச்சோம்.



இதெல்லாம் உனக்கெங்கே தெரியப்போகுது? மாப்பிள்ளையோட திறமைக்கு அமெரிக்காவுல எடுத்ததும் ஒன்னரை லட்சம் சம்பளம் கொடுத்து வேலை கொடுக்க தயாரா இருப்பாங்க. இதெல்லாம்... உன் எதிர்காலத்தை இன்னும் எந்தளவு மாத்தும்னு நினைச்சிப்பார்! வீடு சின்னதா இருந்தா என்ன சுப்ரஜா! இதுவும் உன் வீடு. உன் ராஜ்ஜியம். அப்புறமென்ன? மாப்பிள்ளையும் ரொம்ப அழகாயிருக்கார். இதைவிட வேற நல்ல இடம் கிடைக்கிறது கஷ்டம்!'' அப்பாவும், அம்மாவும் நீளமாய் அட்வைஸ் பண்ணினார்கள்.

சுப்ரஜா யோசிக்க ஆரம்பித்தாள்.

'என் கணவர், என் வீடு, என் ராஜ்ஜியம். அப்புறமெதற்கு பயப்பட வேண்டும்?'

சவுந்தர்யா... அந்த வீட்டிற்கு அண்ணி வந்ததும் உச்சிக் குளிர்ந்துப் போனாள்.

'அப்பாடா... ஒரு வழியாய் அம்மா போல் அண்ணி வந்தாச்சு. இனி அவங்க பார்த்துப்பாங்க. நான் நிம்மதியாய் ஆறு மணிவரை தூங்கலாம். நிறைய படிக்கலாம். ஸ்கூல் விட்டதும் சமையலறைக்குள் புகுந்து கொள்ள வேண்டிய அவசியம் இனி இல்லை. அண்ணனைப் போல் நானும் நன்றாக படிக்க முடியும். அவரைப் போல் வேலைக்குப் போய் கைநிறையச் சம்பாதிக்க முடியும். சம்பளம் வாங்கினால் பைசா கூடக் குறையாமல் அப்படியே அப்பா கையில் கொடுத்துவிட வேண்டும். அப்பா... எவ்வளவு சந்தோஷப் படுவார்?' சவுந்தர்யா விதவிதமாய் கனவு கண்டாள். ஆனால் அத்தனையும் கனவாகத்தான் போயிற்று.

வீட்டிற்கு வந்த முதல் நாளே எப்படி அண்ணி வேலை செய்ய முடியும்? அந்த நாகரிகம் கருதி சவுந்தர்யா காலையில் ஏழு மணிக்கு எழுந்து கிச்சன் பக்கம் வந்தவளை வரவேற்றான்.

"வாங்கண்ணி! உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? குரல் கொடுத்திருந்தா, நானே கொண்டு வந்து கொடுத்திருப்பேனே. நீங்க போய் ரெஸ்ட் எடுங்க. நான் சமையலை பார்த்துக்கறேன்!" என்று மரியாதை நிமித்தமாக ஒரு பேச்சிற்குதான் சொன்னான்.

சுப்ரஜா மகிழ்ந்து போனாள்.

"வெரிகுட் சவுந்தர்யா! எனக்கு கிச்சன்னாலே அலர்ஜி. எனக்கு ஒத்துவராத ஏரியா அது ஒண்ணுதான். பைதபை... நான் உங்கண்ணனைப் போல எட்டு மணிக்கெல்லாம் ஆபீஸுக்கு ஓடிட மாட்டேன். அவர் ஸ்ரீரங்கத்துல வேலை பார்க்கிறார். நான்... நடந்து போற தூரத்துலதான் எங்க பேங்க் இருக்கு. நான் ஒன்பதரைக்குப் பிறகுதான் புறப்படுவேன். ஸோ, மதியத்துக்கு டிபன் எல்லாம் செய்து கொடுத்திடாதே! எனக்கு சாப்பாடுதான் ஒத்துவரும். செய்யறதுக்கு முன்னே, என்ன செய்றதுன்னு கேட்டுட்டு செய்! எனக்கு கத்தரிக்காய், முருங்கைக் காயெல்லாம் பிடிக்காது...!" அவள் பாட்டிற்கு அடுக்கிக் கொண்டே போக சவுந்தர்யா சமையலறையிலேயே சமைந்து போனாள்.

வீட்டிற்கு வந்த மருமகளை, அதுவும் கை நிறைய சம்பாதிக்கும் படித்த பணக்காரப் பெண்ணை அதற்கு மேல் ஒரு வார்த்தைதான் கூறிவிட முடியுமா?

தனசேகரன் விக்கித்துப் போனார். மகளைக் கரிசனமாய் பார்த்தார்.



ராஜாவும் இதைக் கண்டு கொள்ளவில்லை. வெளிப்படை யாய் சொல்லவும் பயம். முதலில் தான் சொல்வதை காது கொடுத்துக் கேட்கும் மரியாதை இருந்தால் பரவாயில்லை. அதுதான் இல்லையே!

சுப்ரஜா தனக்கு மனைவியாய் வந்ததில் பெரிய அதிர்ஷ்டம் என்றே கண்மண் தெரியாமல் ஆடுபவனிடம் இதெல்லாம் எடுபடுமா என்ன?

தன் மனைவி பேங்கில் வேலை செய்பவள். அழகானவள். பெரிய இடத்துப் பெண். இது போதாதா அவனுக்கு?

சவுந்தர்யாவின் பாடுதான் திண்டாட்டமானது. உள்ளுக் குள் வெம்பினாலும் எதையும் வெளிப்படுத்தாத பொறுமை யான குணம் அவள் சிறப்பு.

அவளுக்கு எட்டரைக்கு கல்லூரிக்குப் புறப்பட வேண்டும். அதற்குள் எல்லாவற்றையும் சமைத்தாக வேண்டும். முன்பாவது காலையில் செய்த டிபனையே மதியத்துக்கும் வைத்துக் கொடுப்பாள். இப்போது டிபனையும் செய்து மதியத்துக்கும் சமைத்துக் கொடுக்க வேண்டும். சமைத்து வைத்ததை காரியரில் தானே எடுத்தாவது வைத்துக் கொள்ளலாம். ஆனால், அந்த சிறு வேலையைச் செய்யக்கூட உடம்பு வணங்காது சுப்ரஜாவிற்கு.

மகள் படும் கஷ்டம் காண சகிக்கவில்லை தந்தைக்கு.

மெதுவாக ஒரு நாள் கேட்டார்.

"ஏம்மா... நான் உன்னை கல்லூரி விடுதியிலேயே சேர்த்து விட்டுடறேன். பல்லை கடிச்சிட்டு மூணு வருஷம் அங்கிருந்தே

படிச்சிட்டு வந்திடேன். இங்கே உன்னை ஒரேயடி
பிழிஞ்செடுக்கிறாங்களேம்மா!''

''என்னப்பா பேசறீங்க? உள்ளூர்ல இருக்கிற கல்லூரி
விடுதியில தங்கிப் படிப்பதா? வேணாம்பா! இது நம்ம வீ
நம்ம குடும்பம். என் அண்ணன். என் அண்ணி! நமக்கா
தானேப்பா கஷ்டப்படறேன்? பாவம்பா... அண்ண
படிக்கறதுக்கு கல்லூரி போயிட்டு வர்றதுக்கே, சிரம
எனக்கு அலுப்பா இருக்கு. அண்ணி எப்படித்தான் காவ
வேலையில இருக்காங்களோ? ரிஸ்க்கான, கவனம
செய்யக்கூடிய வேலை. அதுவும் கஷ்டம்தானே? அவ
வசதியா வாழ்ந்து பழக்கப்பட்டவங்க. இங்கே வந்
சமைக்கணும், துவைக்கணும்னு எதிர்பார்த்தா எப்படி? இ
வேலைகளுக்கு ஆள் போட்டுக்கலாம்தான். ஆனா, வேத்
மனுஷங்க நம்ம வீட்லே வந்து சமைச்சு, அ
சாப்பிடறதெல்லாம் நமக்கு பிடிக்காத விஷயம். மனை
போட்டு அலட்டிக்காதீங்கப்பா! எனக்கு எந்த பிரச்சினையு
இல்லே?'' சவுந்தர்யா அப்பாவின் வாயை கப்பெ
அடைத்துவிட்டாள்.

அதற்குமேல் தனசேகரால் ஒன்றும் செய்ய முடியவில்லை
ஆனாலும் மகளுக்கு உதவியாக சமையலில் கூடமா
ஒத்தாசை செய்தார். சவுந்தர்யா எவ்வளவு தடுத்தும் இந்
விஷயத்தில் தந்தையை வெற்றி கொள்ள முடியவில்லை
மார்க்கெட்டிற்கு செல்வது, அதிகாலையில் எழுந்து பா
வாங்கி வருவது, காய்கறிகளை நறுக்கி வைப்பது, மிக்ஸியி
மசாலா அரைத்து தருவது என, தான் அலுவலகம் செல்வதற்
முன் கிடைத்த நேரத்தில் எந்தளவு முடியுமோ, அந்தள
செய்வார்.



''எதுக்குப்பா? இதெல்லாம் என்னால செய்ய முடியாதா?''

''அவசர அவசரமாய் காலேஜுக்கு ஓடணும். இந்த சின்னச் சின்ன வேலையை நான் செய்யறதுல எனக்கு திருப்திம்மா! நீயும், கொஞ்சம் நிதானமா புறப்படலாம். இல்லையா?''

''நீங்களும் தானேப்பா வேலைக்குப் போறீங்க? இந்த சிரமமெல்லாம் ஏன் இழுத்துப் போட்டுக்கறீங்க?''

''இதெல்லாம் உங்கம்மா செய்ய வேண்டியது. அவள் இன்னைக்கு இல்லே... அந்த சுமையெல்லாம் உன் தோள்ல ஏத்தியாச்சு. இப்பக் கூடுதலான சுமை வேற... உன்னை நான் உருப்படியா, உருக்குலையாம ஒருத்தன் கையிலே ஒப்படைக்கணும். இல்லையா?''

அப்பா சிரித்தபடி சொல்லி முடித்ததும் சவுந்தர்யாவின் இதழ்க்கடையோரம் புன்னகை நெளிந்தது.

''போங்கப்பா! நல்ல காரணம் கிடைச்சது உங்களுக்கு...''

''ஏம்மா... நான் சொல்றது உனக்கு கிண்டலா இருக்கா?''

''அய்யோ... அதுக்கில்லேப்பா... அதுக்கென்ன அவசரம் இப்போன்னுதான் கேட்டேன்...''

''கல்யாண வயசாயிட்டுதே சவுந்தர்யா! உங்கம்மா இருந்திருந்தா... இந்நேரம் நீ புருஷன் வீட்ல இருந்திருப்பே?''

''அப்பா... பிளீஸ்... இப்ப எனக்கு கல்யாணம் வேண்டாம். நான் படிக்கணும். அண்ணியை மாதிரி வேலைக்குப் போகணும்னு ரொம்ப ஆசையா இருக்குப்பா!''

''வேணாம் தாயீ! ஏதோ படிக்கணும்னு ஆசைப்பட்டே! சரி படிக்கட்டும்னு சம்மதிச்சேன். ஆனா, இந்த வேலைக்

போகணும்னு சொல்றே பாரு... அதுமட்டும் வேலை... வீட்டுக்கு உழைக்கறது போதாதுன்னு... எவனோ ஒரு... ஓட வியாபாரம் வளரணும்னு வேற போய் உழைக்கணு... வேலைக்குப் போய் சம்பாதிக்கணும்னு உனக்கென்ன... தலையெழுத்து? உங்கப்பா இன்னும் உயிரோட... இருக்கேன். அதை மனசுல வச்சுக்க!'' தனசேகரின் ... இறங்கிப் போனது.

பதறிப்போனாள் சவுந்தர்யா!

''என்னப்பா நீங்க... என்னென்னமோ பேசிக்கிட்... உங்களுக்குப் பிடிக்காததை நான் என்னைக்கு செய்திரு... கேன்? வேலைக்குப் போகணும்னு ஆசைப்பட்டேன். ஆன... வெறித்தனமாயில்லேப்பா! சொந்தக்கால்ல நிக்கணும்னு... தான்...''

''தப்பில்லே சவுந்தர்யா! ஆனா என் பொண்ணு இனி வர... காலத்திலேயாவது நிம்மதியா இருக்கணும்னு எனக்கு ஆசை... இருக்காதா? வேலைக்கும் போய்வந்து, வீட்டு வேலையு... செய்யறதுன்னா... உடம்பு என்னத்துக்காகும்? இந்... விஷயத்திலே அப்பா சொல்றதை கேளுடாம்மா! படிப்... முடிஞ்சதும் உனக்கு கல்யாணம்தான். தரகர்கிட்டே இப்பவே... உன் ஜாதகம் கொடுக்கப் போகிறேன். தங்கம் போல ஒரு... மருமகனை தேடிக் கண்டுபிடின்னு...!''

''போங்கப்பா...!'' வெட்கப்பட்டபடி நகர்ந்தாலும்... சவுந்தர்யாவின் இதயம் ஏமாற்றத்தால் வெதும்பியது.





2

குடும்ப வாழ்க்கை ஒரு காட்சிப் பொருளல்ல. அது ஒரு இனிய/பெரிய சுகமான சிக்கல்.

இதை சவுந்தர்யா அறிந்தே வைத்திருந்தாள். அதனால் அவள் எந்தப் பிரச்சினையையும் பூதக்கண்ணாடி வைத்துப் பார்க்காமல் இலகுவாகவே எடுத்துக் கொள்வாள். அதனால் பெரிதாய் வெடிக்க வேண்டிய பிரச்சினைகளெல்லாம் தண்ணீர் பட்ட பட்டாசாய் அமுங்கி போய்விடும்.

தனசேகருக்கு மகள் மீது அளவு கடந்த பாசம் இருந்தது. அதுவும் அம்மாவை அச்சுபிசகாமல் அப்படியே உருக்கொண்டு வந்திருந்தாள். ராஜாவாவது இருபத்திரெண்டு வயது வரை அன்னையின் பராமரிப்பில் வளர்ந்து விட்டான். ஆனால், சவுந்தர்யா அதில் கூட பின்தங்கிப் போனாள். தாயின் அன்பும், அனுசரணையும், பாதுகாப்பும் அவசியப்பட்ட பருவ வயதில் அவளுக்கு கிட்டவில்லை.

தனசேகரன் ரெயில்வேயில் பணிபுரிந்தார். மனைவி காமாட்சிக்கு மார்பு புற்றுநோய்! இருக்கிற நிலம், நீச்செல்லாம் விற்று வைத்தியம் பார்த்தார். ஆனால், அதற்கெல்லாம் எந்த பலனுமின்றி கண்ணை மூடிவிட்டாள் காமாட்சி!

மிச்சம் இருந்ததோ... இருக்கிற வீடு மட்டுமே! வேலையிலிருந்து ஓய்வு பெற்றபோது... அப்படியொன்றும் லட்சம் லட்சமாய் வந்து கொட்டி விடவில்லை. ஏற்கனவே காமாட்சியின் மருத்துவ செலவுக்காக போட்ட லோன், இத்யாதி, பிடித்தம் என்று எல்லாம் போக கையில் இரண்டரை லட்சம்தான் வந்தது.

சவுந்தர்யாவுக்கு என்று இதுவரை சேர்த்து வைத்ததெல்லாம் இருபத்தி ஐந்து பவுன் நகை மட்டும்தான். அதனால்... வந்த பணத்தில் இரண்டு லட்சத்தை சவுந்தர்யா பெயருக்கு வங்கியில் போட்டுவிட்டார். மீதி ஐம்பதாயிரத்தில் ராஜாவிற்கு ஒரு யமஹா பைக் வாங்கிக் கொடுத்தார். தவிர வீட்டையும் ராஜா பெயருக்கு எழுதி வைத்தார்.

ஓய்வு பெற்றபின் வீட்டில் சும்மாயிருக்க பிடிக்காமல் ஒரு அலுவலகத்தில் கணக்கராக சேர்ந்துவிட்டார். சவுந்தர்யா எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள்.

"இந்த வயசுக்கு உங்களுக்கு ஓய்வு வேணும்னுதானே, அரசாங்கமே உங்களை வீட்டுக்கு அனுப்பி வைச்சது? இப்ப மறுபடி வேலைக்குப் போனா என்ன அர்த்தம்?"

"என் பெண்ணோட கல்யாணத்துல எனக்கு அக்கறைன்னு அர்த்தம். ஏம்மா... என் பொண்ணு கல்யாணத்துக்கு இந்த அரசாங்கம் செலவெல்லாம் ஏத்துக்குமான்னு கேட்டு சொல்லு. நான் வீட்டோட இருக்கிறேன்..."

அப்பாவின் நையாண்டி பதிலுக்கு மறுபேச்சு பேச முடியாமல் சிரிப்பாள்.

"அம்மாடி... ஒரு காபி தர்றியா?" புஸ்ஸென்று மூச்சு விட்டபடி பேனை சுழலவிட்டு நேர்கீழே நாற்காலியில் அமர்ந்தார் தனசேகரன்.

"இதோ தர்றேன்ப்பா!" உள்ளிருந்து குரல் கொடுத்தவள் இரண்டு நிமிடத்தில் காபியோடு வந்தாள்.

"இந்தாங்கப்பா!" என்று கொடுத்தவள் அப்போதுதான் பார்த்தாள். அவர் காலடியில் ஒரு கவர் இருந்தது.



"என்னப்பா இது? காய்கறியா... காலையிலே வாங்கினது தான் நிறையவே இருக்கே...!"

"காய்கறி இல்லே... எடுத்துதான் பாரேன்!"

சவுந்தர்யா அப்பாவை ஆச்சரியப் பார்வை பார்த்தபடி அந்த கவரை எடுத்துப் பார்த்தாள்.

மறுகணம் சந்தோஷத்தில் கண்கள் மலர்ந்தது.

"அட... சேலை... யாருக்குப்பா?"

"தெரு கடைக்கோடியில ஒரு கிழவி இருக்கே... அதுக்குதான்... ஏம்மா... என்ன கேள்வியிது?"

"எனக்காப்பா?" ஆசையாய் கேட்டாள்.

"உனக்கே உனக்குத்தான். நாளன்னிக்கு உனக்குப் பிறந்தநாள் வருதில்லையா? அதுக்குத்தான். பிடிச்சிருக்காம்மா?"

"ரொம்ப பிடிச்சிருக்குப்பா... தாங்க்ஸ்ப்பா..."

"உன்னை பெத்தவன்ம்மா நான்! எனக்கே தாங்க்ஸா?"

"ஸாரிப்பா..." என்றவள் சற்றே யோசனையாய் கேட்டாள்.

"இந்த ரெண்டு சேலையும் எனக்கா?"

"ஆமாம்!"

"அண்ணிக்கு வாங்கலையாப்பா?"

"......?!"

"அண்ணியும் இந்த வீட்டு பொண்ணுதானே? அவங்க இருக்க... எனக்கு மட்டும் எடுத்துத் தர்றது சரியில்லேப்பா!"

"இல்லே சவுந்தர்யா! நான் கிழமைன்னா எடுத்துத் த
உனக்கு பிறந்தநாள்னா அவளுக்கும் எப்படி...?"

"குடும்பம்னா... எல்லாமே பொதுதானே!"

"இல்லேங்கலே! உங்கண்ணி கைநிறைய சம்பாதிக்
உங்க அண்ணனும் சம்பாதிக்கறான். இதுவரைக்கும் ஆ
உனக்குன்னு ஒத்தைருபா செலவு பண்ணி எதையா
வாங்கித் தந்திருப்பாங்களா? நீயும் அப்படி தாமரை இ
தண்ணீரா இருக்க பழகிக்கோம்மா!"

"தப்புப்பா... நான் பட்டும் படாம தாமரை இலையா இ
பிரியப்படலே! ஒட்டி உறவாடும் தாமரை பூவா இருக்கத்
ஆசைப்படறேன்! எனக்கு வீடு நிறைய உறவுக் கூட்டத்தே
வாழ ஆசையாயிருக்குப்பா! அண்ணி ஏனோ தெரிய
அந்தளவு நம்மளோட ஒட்டமாட்டேங்கறாங்க! ஒருவே
நாம எப்படி பழகுவோமோங்கற பயமாயிருக்கல
நாமதான் அந்த தயக்கத்தை விலக்கணும். நாமளும் ஒதுங்கி
போனா, குடும்பம் சிதறிப்போகும்பா!"

"முடிவு பண்ணிட்டே... சரி... உன் இஷ்டப்படி ஒ
சேலையை உங்க அண்ணிக்குக் கொடு! ஆபீஸ்லேர்ந்து உ
அண்ணி வந்தாச்சா?"

"இன்னும் இல்லே... வருடக் கடைசி! கணக்கெல்லா
முடிக்கணுமில்லையா? கொஞ்சம் லேட்டாதான் ஆகும்!"

"உங்க அண்ணி ரொம்ப புண்ணியம் பண்ணியிரு
கணும்!"

"எதுக்குப்பா?"

"இப்படியொரு நாத்தனார் கிடைக்க...!"



அலுப்பு தீர குளித்துவிட்டு நைட்டியில் நுழைந்துக் கொண்டாள் சுப்ரஜா!

ரிமோட்டைக் கையில் எடுத்துக் கொண்டு கட்டில் மீது சாய்ந்தமர்ந்து டி.வி.யை உயிர்ப்பித்தாள்.

"அண்ணி...!"

வாசலில் நின்றபடி குரல் கொடுத்தாள் சவுந்தர்யா!

"வா... சவுந்தர்யா!"

"அண்ணி இந்த சேலைகளைப் பாருங்க!" கவரை அவளிடம் நீட்டினாள்.

"என்ன சேலை... யாருக்கு?"

"நமக்குதான் அண்ணி! நாளன்னிக்கு எனக்குப் பிறந்த நாள் வருது. அதுக்காக அப்பா எனக்கொன்றும், உங்களுக் கொன்றும் வாங்கிட்டு வந்தார். இதுல உங்களுக்கு பிடிச்ச கலரை எடுத்துக்குங்க!"

"என்ன துணி இது? மட்டமான குவாலிட்டி போலிருக்கே?"

முகம் சுருங்கிப் போனது சவுந்தர்யாவுக்கு.

"நல்ல துணிதான் அண்ணி! ஒவ்வொன்றும் முந்நூறு ரூபாய்க்கு மேலதான் விலைப் போட்டிருக்கு!"

"முந்நூறு ரூபாய்னா... பெரிய விசயமா? சரி... இந்த நீலக்கலர்சேலையை எடுத்துக்கறேன். அப்புறம் சவுந்தர்யா... தலைய வலிக்குது. காபி வேண்டாம். நல்லா ஸ்ட்ராங்கா இஞ்சி தட்டிப் போட்டு ஒரு டீ போட்டு கொண்டு வர்றியா?"

"சரியண்ணி!"

"நைட்டுக்கு என்ன சமைக்கப் போறே? மதியத்துக்கு கொடுத்த வெண்டைக்காய் குழம்பு கொஞ்சமும் காரமில்லே எனக்கு நைட்டுக்கு சாப்பாடு வேணாம். தோசை மாவு இருக்கில்லே... தோசை போட்டுக் கொடு! தொட்டுக்க கொத்தமல்லி சட்னி இருந்தா தேவலை!"

சவுந்தர்யாவுக்கு தொண்டையை இறுக்கிப் பிடிப்பது போல் இருந்தது.

'செமஸ்டர் வேறு வருகிறது. சீக்கிரம் சமையலை முடித்துவிட்டு படிக்கலாமென்றால்... முடியாது போலிருக்கிறதே!'

பெருமூச்சொன்றை உற்பத்தி செய்துவிட்டு சமையலறைக்குள் போனாள்.

சுப்ரஜா கேட்ட இஞ்சி டீயை தயாரிக்க ஆரம்பித்தாள்.

தம்ளரோடு அறைக்குள் நுழைந்தவள் தூக்கி வாரிப் போட்டவளாய் நின்றாள்.

காரணம்...

சுப்ரஜாவும், ராஜாவும் காற்றுக் கூட நுழைய முடியாத இறுக்கத்தோடு அணைத்த நிலையில் இருந்தனர்.

காலடி சத்தம் கேட்டு கலைந்த ராஜா, அவசரமாய் விலகி, தங்கையைத் தாண்டி வெளியேறினான்.

சுப்ரஜா அவளை எரித்துவிடுபவளைப் போல் பார்த்தாள்.

"சவுந்தர்யா... நீ படிச்ச பொண்ணுதானே?"



"அண்ணி!"

"உள்ளே வரும்போது... கதவை தட்டிட்டு வரணும்ங்கற மேனர்ஸ் கூட யாரும் உனக்கு சொல்லித் தரலையா?"

"அண்ணி... கதவு திறந்தே இருந்துச்சன்னு..."

"அதுக்காக... உள்ளே நுழைஞ்சிடறதா?"

சுளீர் எனக் கன்னத்தில் அறைபட்ட வலி!

"உங்களுக்குத்தான் டீ எடுத்துக்கிட்டு வந்தேன்!" குரல் பிசிறிற்று.

"எதை எடுத்துட்டு வந்தா என்னா? மொதல்ல சேலையை காட்ட வந்தப்ப குரல் கொடுத்துட்டுதானே வந்தே! இப்ப மட்டும் என்ன?"

சுப்ரஜாவின் குரல் கோபத்தில் உயர உயர... சவுந்தர்யா அதலபாதாளத்தில் விழுந்து கொண்டிருந்தாள்.

அண்ணன் எப்போது வந்தான் என்றே அவளுக்குத் தெரியாது. முதலில் வந்தபோது சுப்ரஜா தனியாக இருந்தாள். அதனாலேயே தைரியமாய் உள்ளே நுழைந்துவிட்டாள். 'தவறு யார் மீது? கொஞ்சி குலவுவதெல்லாம் மூடிய கதவிற்குள் நடக்கக்கூடிய சங்கதி! இப்படி விவஸ்தையின்றி திறந்து போட்டுக் கொண்டு... சே! தன் தவறை மறைக்க என் மீது சேற்றை வாரி இறைக்கணுமா?'

சவுந்தர்யாவிற்கு ஓவென்று கதறி அழவேண்டும் போலிருந்தது.

அவள் முன் கண்ணீர் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் அங்கிருந்து அவசரமாய் அகன்றாள் சவுந்தர்யா!



3

வெட்டிப் போட்ட நகமாய் பிறை நிலா

ஒருக்களித்து சார்த்தப்பட்டிருந்த ஜன்னல் கதவின் இடைவெளியில் சோகையாய் வெளிச்சத்தில் முகம் காட்டியது.

சுப்ரஜா முழங்கால் வரை விலகியிருந்த நைட்டியை உதாசீனப்படுத்தி... ராஜாவின் தலையை ஐந்து விரல்களால் கோதிக் கொண்டிருந்தாள்.

மஞ்சத்தில் சாய்ந்திருந்த சுப்ரஜாவின் நெஞ்சத்தில் தலை சாய்த்துப் படுத்திருந்தான் ராஜா!

அவன் தலையிலிருந்து இறங்கிய விரல்கள் நெற்றி, மூக்கு என்று கோடிழுத்து அடர்ந்த மீசையை வருடிக் கொடுப்பது போல் செல்லமாய் பிடித்திருந்தாள்.

''ஆவ்...'' என்றலறினான் ராஜா!

அலறியதோடு நிற்காமல், வலி ஏற்படுத்திய உசுப்பலில் அவள் இடுப்பை இரு கைகளால் இறுக்கி அணைத்து கன்னத்தில் அழுத்தி முத்தமிட்டான்.

அவன் பல் பட்டதில் கன்னம் எரிந்தது.

''ராஸ்கல்... எரியுதுடா!'' சுப்ரஜா அவன் முடியைக் கொத்தாய் பிடித்து உலுக்கினாள்.

''கடிச்சி தின்னாம விட்டேனே... சந்தோஷப்படு!'' ராஜா சிரித்தபடி அவள் தலையை தன் தலையால் மோதினான்.

சுப்ரஜா அவன் மார்பு முடியை கைகளால் அளைந்து கூச்சத்தை ஏற்படுத்தினாள். அதற்குமேல் தாங்க முடியாத தாபத்தோடு அவள் மீது புரண்டான்.



''ஹைஹும்...'' சுப்ரஜா தடுத்தாள்.

''என்ன சுப்ரஜா?''

''கொஞ்சம் போனும்!''

''இப்பவா?''

''இப்பவே...''

''நாளைக்கு பேசிக்கலாமே!''

''நாளைக்கும் இதே கூத்துதான் நடக்கும்! இதே வசனம்தான் பேசுவீங்க. நாளை, மறுநாள், அதற்கடுத்த நாள்னு இழுத்தடிப்பீங்க!''

''பொறுமையை சோதிக்கறே நீ!'' ஒற்றை விரலால் கழுத்தோரம் சுருண்டிருந்த முடிகளை அலைபாய்ந்து உப்பென ஊதிவிட்டான்.

''கொஞ்ச நேரம் பொறுக்க மாட்டியா கண்ணா!'' கொஞ்சலாய் கேட்டாள்.

''ம்... சொல்லு!''

எழுந்து சப்பணமிட்டு அமர்ந்தாள்.

''பரவாயில்லே... எம்மேல சாஞ்சுக்குங்க...'' அவனை இழுத்து தன்மேல் சாய்த்துக் கொண்டாள்.

''தாரான மனசு!''

''சவுந்தர்யாவைப் பத்தி என்ன நினைக்கறீங்க?''

''இப்ப எதுக்கு அவளைப் பத்தி?''

''அவளைப் பத்திதான் பேசப் போறேன். சொல்லுங்க!''

"சட்டுன்னு கேட்டா என்ன சொல்றது?" இதுவரை தங்கையை, அவள் வாழ்க்கையை, கல்வியை, எதிர்காலத்தை இப்படி எந்த வகையிலும் யோசித்தே பார்த்தேயிராத ராஜாவினால்... உடனடியாக எந்தக் கருத்தும் சொல்ல முடியவில்லை.

"நீ பேச வந்ததை பேசி முடிச்சிடு சுப்ரஜா!"

"அவளோட போக்கு சரியில்லேங்க!"

"ஏன்... யாரையாவது லவ் பண்றாளா?"

"இருக்கலாம். ஆனா கிளியரா தெரியலே! ஆனா, அவ மனசுல வக்கிரம் இருக்கு..."

"எதை வைச்சு சொல்றே?"

"இன்னைக்கு நடந்த சம்பவத்தை அதுக்குள்ள மறந்துட்டீங்களா? என்ன படிப்பு படிக்கிறா? கொஞ்சம் கூட நாகரீகம் தெரியலே. கதவை தட்டிட்டு உள்ளே வரணும்னு தெரியுதா?"

"தப்பு... நம்மகிட்டேயும் இருக்கு சுப்ரஜா! நாம கதவை சார்த்தாம..."

"சரி... தப்பாவே இருக்கட்டும். பார்த்த நொடியிலே வெளியே போயிருக்க வேண்டாமா? அவ்வளவு நேரமும் வெறிச்சி பார்த்திட்டிருக்கா... விவஸ்தை கெட்ட ஜென்மம்!"

"இல்லே சுப்ரஜா... அவ அப்பதான் வந்திருக்கா நாமதான் கவனமா இருந்திருக்கணும்... வயசுப் பொண்ணு இருக்கிற வீட்டுல... கொஞ்சம் அடக்கி வாசிக்கணும்!"



"ஏன்... ஏன் அடக்கி வாசிக்கணும்! எனக்கென்ன வயசா ஆயிடுச்சி? நானும் சின்னப் பொண்ணுதான். எனக்கும் மனசு நிறைய ஆசையிருக்கு. என் புருசனோட நினைச்ச நேரத்துல சந்தோஷமா இருக்கணும், கொஞ்சணும், குலவணும்னு ஆசையிருக்கு. முடியுதா இந்த வீட்டுலே? ச்சே!" குரலின் சுருதியை இறக்கிக் கொண்டு கிசுகிசுப்பாய், தவிப்பாய் சொன்னாள் சுப்ரஜா.

உருகிப்போனான் கணவன்.

'என் மீதுதான் எவ்வளவு ஆசை இவளுக்கு?'

"புரிஞ்சுக்க முடியுது சுப்ரஜா! அதுக்காக தனிக்குடித்தனம் போயிடலாம்ங்கறியா?"

"தனிக்குடித்தனமா? நாம ஏன் தனிக்குடித்தனம் போகணும்? இது நம்ம வீடு... அதை நினைப்புல வைச்சுக்குங்க!"

"சரி... வேற என்னதான் சொல்ல வர்றே?"

"சவுந்தர்யாவை சீக்கிரம் கல்யாணம் பண்ணி அனுப்பிடலாம்!"

"என்ன சொல்றே நீ? அவள் சின்னப்பொண்ணு. படிச்சிட்டிருக்கா!"

"ஆமா... சின்னப்பொண்ணு! ஒண்ணுமே தெரியாத பாப்பா! அதை நான் நம்பணும். இவள் படிச்சு என்ன சாதிக்கப்போறா?- அட்லீஸ்ட் என் அளவுக்காவது உயர்ந்து வேலைக்கு போகப் போறாளா? நடக்கிற காரியமா அது?"

''அதுக்காக... அவசரப்பட்டு இப்பவே கல்யாணம் பண்ணிட முடியுமா? நல்ல மாப்பிள்ளை பார்க்க வேணாமா?''

''அதுக்கெல்லாம் சிரமப்பட வேண்டாம். கைவசம் மாப்பிள்ளை ரெடி!''

''யாரு சுப்ரஜா?''

''என் பெரியம்மா மகன்... என் அண்ணன் குமார்தான்!''

''என்னது... குமாரா?''

''அதென்ன... அவ்வளவு அலட்சியமா சொல்றீங்க? அவருக்கென்ன பணத்துல, பகட்டுல குறைச்சலா?''

''என்ன புரியாம பேசறே நீ? குமாருக்கு முப்பத்தஞ்சு வயசுக்கு மேலேயே இருக்கும். எதையும் லேட்டா புரிஞ்சுக்கிற மந்த குணம். மூளை வளர்ச்சி கம்மிங்கறதாலதானே... பணமிருந்தும் அவருக்கு யாரும் பெண் தர முன்வரலை! கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாம பேசறியே...! சவுந்தர்யாவுக்கு போயும் போயும் குமாரா? நோ... முடியாது!'' கோபமாய் பதிலளித்தான்.

இந்த உஷ்ணத்தை எதிர்பார்க்காத சுப்ரஜா அவன் நெற்றியில் தன் உதடை ஒற்றியெடுத்தாள்.

''அவசரப்பட்டா எப்படி? நான் சொல்றதை முழுசா கேட்டுட்டு அப்புறம் பேசுங்க! குமார் அண்ணன் இப்ப நார்மலாதான்இருக்கார். பெரியம்மாதான் இந்த யோசனையை சொன்னாங்க...''

''அந்த யோசனையை கொண்டுபோய் குப்பையில போடு! சவுந்தர்யாவுக்கு எங்கப்பா கல்யாணத்துக்குன்னு பாங்கில



ரெண்டு லட்ச ரூபாய் போட்டிருக்கார். அந்த பணத்துக்கு எப்பேர்பட்ட மாப்பிள்ளை பார்க்கலாம் தெரியுமா?''

''ராஜா பிளீஸ்! அவசரப்படாதீங்கன்னு சொல்றேனே! குமாருக்கு உங்க தங்கச்சியை கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டா... அந்த ரெண்டு லட்சமும் நமக்கு அன்பளிப்பா தர்றேன்னுட்டாங்க பெரியம்மா!''

''.....!?''

''பாருங்க... சவுந்தர்யா சின்ன வயசிலேர்ந்தே கஷ்டப் பட்டிருக்கா. சில சமயம் அவளைப் பார்க்கிறப்ப எனக்கே ரொம்ப பாவமாயிருக்கும். நானெல்லாம் எப்படி வளர்ந்தேன் தெரியுமா? சமையலறைப் பக்கம் எட்டிக் கூட பார்த்ததில்லே. எல்லாத்துக்கும் ஆள் போட்டு என்னை ராணி மாதிரி வளர்த்தாங்க, படிக்க வைச்சாங்க. கம்மா அப்ளை பண்ணினேன். உடனே வேலை கிடைச்சுது. பாங்கில வேலை. மறுக்க முடியல. அப்புறம் கல்யாணம். அழகான, நான் எதிர்பார்த்ததுக்கு ஒரு பர்சென்ட் கூட குறையாம கிடைச்ச கணவர். எல்லாருக்கும் கிடைச்சிடுமா ராஜா?

இந்த வீட்ல சில வசதி குறைச்சல். இருந்தாலும் சகிச்சுக்கிட்டேன் என் ராஜாவுக்காக! இது என் வீடு! அதனால குறைகள் பெரிசா தெரியலே! இங்கேயும் சமையல் அது இதுன்னு என்னை வறுத்தெடுக்காம சவுந்தர்யாவும், உங்கப்பாவும் பார்த்துக்கறாங்க! நிஜமாவே நான் ரொம்ப அதிர்ஷ்டசாலிங்க! நான் பெற்ற அதிர்ஷ்டத்தில பாதியாவது உங்க தங்கச்சியும் அடையணும் ராஜா!''

''அதிர்ஷ்டமா?''

"ஆமாம்! மனசு பக்குவமா இருந்தா... எல்லாத்தோட ஒத்துப் போயிடலாம். சவுந்தர்யாவுக்கும் பக்குவப்பட்ட மன இருக்கு. பிறந்த வீட்லதான் அவளால் எந்த வசதியு அனுபவிச்சதில்லே! புகுந்த வீட்டிலேயாவது அனுபவிக்க டுமே! என் பெரியம்மா... எங்க வீட்டைவிட வசதி! நாலு வீடு சென்னையிலே இருக்கு. ஈரோடுல மூணு வீடு இருக்கு ஏற்கனவே ஒரு கார் இருக்கு. போன வாரம் புதுசா டாடா சுமோ ஒண்ணு வாங்கியிருக்காங்க! சவுந்தர்யா அந்த வீட்டு மருமகளா போனா அவளுக்கு பல் தேய்க்கக்கூட ஒரு வேலைக்காரியை போடுவாங்க. இப்படியொரு ராஜ வாழ்க்கை தலைகீழா நின்னாலும் உங்க தங்கச்சிக்கு கிடைக்காது!"

"எல்லாம் சரி சுப்ரஜா! குமார் ஒரு மாதிரியா... குழந்தை மாதிரிபேசறான். காதோரம் கூட நரைச்சுப் போயிருக்கு!"

"முப்பத்தஞ்சு வயசு ஒரு பெரிய வயசா? எண்பது வயசு கிழவன் கூட பதினெட்டு வயசு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறான். அண்ணன் வெகுளி! மனசுல சில்மிஷமில்லாம, பால் மாதிரி குணத்தோட உங்களால ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்க முடியுமா? சின்ன வயசுல தலையில அடிபட்டு ஒரு மாதிரி இருந்தது உண்மைதான். ஆனா பணத்தைக் கொட்டி ஆபரேஷன் பண்ணி இப்ப அண்ணன் தெளிவாயிட்டாரு. வீட்டுக்கு ஒரே பிள்ளை. அத்தனை சொத்தும் அவருக்குத்தான். நம்ம கல்யாணத் தப்பவே பெரியம்மாவுக்கும், பெரியப்பாவுக்கும் சவுந்தர்யா மேல ஒரு பிடிப்பு. அது மட்டுமில்லே... குமார் அண்ணனும் அவளை பார்த்ததிலேர்ந்து கட்டினா இவளைதான்னு பிடிவாதமா இருக்கிறார். மூளை வளர்ச்சி இல்லேன்னா... இந்த



காதல் பிடிவாதமெல்லாம் எங்கேர்ந்து வரும்?" மிக மிக மென்மையாய், கனிவான வார்த்தைகளை தேடிப்பிடித்து பேசினாள் சுப்ரஜா.

ராஜா பதில் சொல்லவில்லை. யோசிக்க ஆரம்பித்திருந் தான்.

"விஷயம் அதோட முடியலே டார்லிங்! அதுக்கப்புறம்தான் நமக்கு சுக்கிர திசையே ஆரம்பமாகுது. சவுந்தர்யாவோட கல்யாண செலவு முழுக்க அவங்களே ஏத்துக்கறதால... அவளோட ரெண்டு லட்சமும் நம்மக்கிட்டேயே கொடுத்துட றாங்களாம். போதாதுக்கு ஒரு மாருதி கார் வாங்கித்தர றேன்னாங்க. நீங்க இனிமே பைக்லே... தூசியெல்லாம் முகத்தில் பட போக வேண்டாம். ஆபீசுக்கு ஜம்முனு கார்லேயே போய் இறங்கலாம். அப்புறம் நம்ம கனவு நிஜமாகும். என்னோட சேமிப்புப் பணம், உங்களோட சேமிப்புப் பணம், சவுந்தர்யா மூலமா வரப்போற ரெண்டு லட்சம், இதையெல்லாம் சேர்த்து 'கம்ப்யூட்டர் சாப்ட்வேர்' கம்பெனியை ஆரம்பிக்கலாம். அப்புறம் கொட்டுகிற பணத்தை அள்ளவே நமக்கு நேரம் சரியாயிருக்கும்!"

ராஜா இப்போது தீவிரமாய் சிந்திக்க ஆரம்பித்தான்.

ராஜாவுக்கு கனவு என்று சொல்ல முடியாது. லட்சிய வெறி என்றுதான் சொல்ல வேண்டும். சொந்தமாய் ஒரு கம்பெனி நடத்த வேண்டும். படித்து கொஞ்சம் கொஞ்சமாய் பெரிசாக்கி வைத்திருக்கிற மூளையை தனக்கே பயன்படுத்திப் பணம் பார்க்க வேண்டும். அதற்குப் பணம் வேண்டும். கம்ப்யூட்டர் என்றால் சும்மாவா? பல லட்சங்கள் வேண்டும். அவன் சேமிப்பு, சுப்ரஜா சேமிப்பு என்று பார்த்தாலும் கூட இன்னும்

குறைந்தது மூன்று, நான்கு லட்சங்களாவது தேவை! எங்கே போவது?

சுப்ரஜா சொல்லும் யோசனையும் ஒரு வகையில் சரிதான். ஒரு வகையில் என்ன... எல்லா வகையிலும் சரிதான். இந்த காலத்தில் இரண்டாயிரம் ரூபாய் கடன் கேட்டால் இருநூறு முறை யோசிக்கிறான். இருபது பேரை சாட்சிக்கு கூப்பிடுகிறான். இரண்டு லட்சம்? எங்கும் கடன் வாங்க வேண்டாம். வீடு தேடி வருகிறது பணம். இதை விடலாமா? கூடாது!

அதற்காக... சவுந்தர்யமான அந்த அழகு தேவதைக்கு போயும், போயும் குமாரா?

இதிலென்ன தவறு? அழகு மட்டும்தான் தாம்பத்யமா? எவர் வாழ்க்கையில் குறையில்லை? குறையை குறையாக நினைக்காமல் ஏற்றுக் கொண்டால் எல்லாமே சந்தோஷம்தானே? சுப்ரஜா சொல்வது போல் சவுந்தர்யாவுக்கு இப்படியொரு வாழ்க்கை, இனி தேடினாலும் கிடைக்கப் போவதில்லை.

"ராஜா... என்ன சொல்றீங்க?"

"நாளைக்கே அப்பாகிட்ட பேசிடறேன்!"

"தாங்க்யூ... தாங்க்யூ ராஜா!" இறுக்கமாய் அவனை கட்டியணைத்து அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் சுப்ரஜா!

ராஜாவும்!





4

தேர்க்கோலம், பூக்கோலம், சங்குக் கோலம் என தெரு முழுக்க ஒவ்வொரு வீட்டு வாசலிலும் விதவிதமான கோலங்கள் கண்ணைப் பறிக்கும் விதமாக ஜெகஜோதியாய் காட்சியளித்தன.

பால்கனியில் இருந்தபடி பல்விளக்கிக் கொண்டிருந்த அருண் தன் வீட்டு வாசலைப் பார்த்தான்.

குறுக்கும் நெடுக்குமாய் நான்கு கோடு இழுத்து நான்கு மூலையிலும் வளைவாக சுருட்டி விடப்பட்டிருந்தது.

பின்னால் கொலுசு சத்தம் கேட்க திரும்பினான்.

வினிதா வந்து கொண்டிருந்தாள்.

சிவப்பு நிற பாவாடை ஜாக்கெட், வெள்ளை தாவணி அவளின் மாநிறத்திற்கு பாந்தமாய் இருந்தது. ஈரம் உலராத அடர்ந்த கூந்தலின் நுனியில் சிறியதாய் கொண்டை!

ஏதோ வேலையாக மாடியேறி வந்தவள் அருண் நிற்பதைப் பார்த்ததும் தலை தன்னிச்சையாக ஹால் கெடிகாரத்தைப் பார்க்க உயர்ந்தது.

"அண்ணா... நேரமாகலை?"

"அது ஆகட்டும், இப்படி வா!"

"என்னண்ணா?"

"உங்கிட்ட ரொம்ப நாளா ஒரு கேள்வி கேக்கணும்!"

"என்ன கேள்வி?" வினிதாவின் புருவம் உயர்ந்தது.

"பயப்படாதே! உன்கிட்ட அறிவுப் பூர்வமான கேள்வி எல்லாம் கேட்டுவிட மாட்டேன்! இன்னைக்கு என்ன விசேஷம்? தெரு முழுக்க கோலமாயிருக்கே!"

"இன்னைக்கு ஆடி வெள்ளி!"

"ஓகோ! ஆமா, வினிதா நீ பத்தாவது பெயில்தானே?"

"இப்ப எதுக்கு இந்தக் கேள்வி?"

"இல்லே... பொதுவா இப்படி பத்தாவது கூட தாண்ட முடியாத அறிவு ஜீவிங்க, வீட்டு வேலைகள்ல எக்ஸ்பர்ட்டா இருப்பாங்க. நீ ஏன் அப்படியில்லே?"

"எப்படியில்லே?" முகம் சுருங்கியது.

"சமையல்லேயாவது உன் திறமையை காட்டியிருக்கலாம். அதுவும் கிடையாது. வெந்ததைதின்னு விதி வந்தால் மாழ்வோம் என்கிற கதையா, நீயும் கண்டதையும் போட்டு அரைகுறையா ஆக்கிப் போடறதை கடனேன்னு சாப்பிடறோம். சரி, அதைவிடு, நானும் ரொம்ப நாளா கவனிச்சிட்டு வர்றேன். ஆனா, என் சிறு மூளைக்கு ஒண்ணுமே எட்டலை. எதிர் வீட்ல தாமரைப்பூகோலம் பளிச்சினு தெரியுது. மூணாவது வீட்ல முயல் கோலம், சின்னக் குழந்தைக்குக் கூட புரிஞ்சுக்கும். பக்கத்து வீட்ல தேர்க்கோலம். நம்ம வீட்ல என்னம்மா இது கோலம்?"

வினிதா அண்ணனை கோபமாய் முறைத்துப் பார்த்தாள்.

"எப்பப் பார்த்தாலும் ஆடு புலி ஆட்டம் விளையாடற மாதிரி நாலு கோடு இழுத்துட்டு வந்துடறே... இதுக்கு பேரு என்ன வினிதா?" அருண் விடாமல் கேட்டான்.



"வினிதா... அம்மாடி வினிதா!" சங்கரன் குரல் கொடுத்துக் கொண்டே படியேறி வந்தார்.

அப்பா குரல் கேட்டதும் மளக்கென்று கண்ணீர் எட்டிப் பார்த்தது வினிதாவுக்கு.

"நேத்து பேப்பர் கேட்டேனே... கிடைச்சதா? அட... அண்ணனும், தங்கச்சியுமா இங்கே என்ன பண்றீங்க? என்னம்மா வினிதா அந்த பேப்பர் கிடைக்கலியா?" என்றபடி அருகில் வந்தவர் திடுக்கிட்டார்.

"என்னம்மா, அழறியா?"

"அப்பா... அண்ணனைப் பாருங்கப்பா... என்ன..."

"என்னப்பா? அவளை என்ன சொன்னே? பொட்டைப் புள்ளையை வெள்ளிக்கிழமையும் அதுவுமா கண்கலங்க வைக்கறியே?"

"நான் என்ன அவளை அழவா சொன்னேன்? இவள் போட்ட கோலத்துக்கு அர்த்தம் என்னன்னுதானே கேட்டேன்!"

"நீ போம்மா... அவளைச் சீண்டிப் பார்க்கலைன்னா... உனக்கு தூக்கமே வராதே! அவளைப் பத்தி தெரியாதா? அடுத்தடுத்து ரெண்டு அக்காக்களுக்கும் கல்யாணமாகி போய்ட்டதாலே... இவள் இந்த வீட்டுப் பொறுப்பை ஏத்துக்க வேண்டிய கட்டாயம்! செல்லமா வளர்ந்துட்டா... இனிமே தானே ஒவ்வொண்ணா கத்துக்கணும்!"

"சேச்சே... என்னப்பா நீங்களும் இதை சீரியஸா எடுத்துக்கிட்டு? நான் சும்மா விளையாட்டுக்குத்தான் அப்படி கேட்டேன். சரி, விடுங்க. எதுக்காக நேத்துப் பேப்பரை தேடிட்டு இருக்கீங்க?"

''தினத்தந்தி'யில நேத்து ஒரு விளம்பரம் கண்ல பட்டுது. மணமகள் தேவை விளம்பரம்தான். அது நம்ம வினிதாவுக்கு ஒத்துவரும்னு தோணுது! அதுக்காகத்தான் தேடிட்டு இருக்கேன்!''

எதையோ கூற வாயெடுத்தவன் சட்டென மூடிக் கொண்டான்.

'வேண்டாம்! கல்யாண விஷயம். எடுத்ததும் அபசகுனமா எதையாவது சொல்லிவிடக்கூடாது.

நடப்பது நடக்கட்டும்!' அருண் பேசாமலிருந்தான்.

''அருண்! இன்னைக்கு நல்ல நாள். கடைக்கு கொஞ்சம் லேட்டாப் போனாலும் பரவாயில்லே. மலைக்கோட்டை பிள்ளையாருக்கு ஒரு அர்ச்சனை பண்ணிட்டு போப்பா!''

''சரிப்பா... நீங்க தேடற பேப்பர் என் அறையிலதான் இருக்குனு நினைக்கிறேன்'' என்றவன் நேரமாவதை உணர்ந்து பாத்ரூமில் நுழைந்து கொண்டான்.

குளிக்கும்போதே யோசனை ஓடியது.

'வினிதா கல்யாணத்திற்கு இப்போது என்ன அவசரம்? கீதாவுக்கும், நளினிக்கும் கல்யாணம் முடிந்து ஆறு மாசம்கூட ஆகலை! அதற்குள் வினிதாவுக்கென்றால், பணத்திற்கு எங்கே போவது? இருந்த பணத்தை எல்லாம் துடைத்துப் போட்டு அவங்க ரெண்டு பேருக்கும் பண்ணிட்டார். வினிதாவின் எதிர்காலம் என் பொறுப்பு! ஒரு ரெண்டு வருசம் போனால், பிரச்சினையில்லே. எப்படியோ சேர்த்துடலாம். இப்பவே என்றால் கடன்தான் வாங்கணும். கடன் வாங்கினால், வட்டி கட்டணும். வட்டி கட்டற அளவுக்கு கடையில் பணமென்ன



மழை மாதிரியா கொட்டுது? எப்படி அப்பாவுக்கு இதை எடுத்து சொல்வது?'

எப்போது குளித்தான், எப்போது சாப்பிட்டான் என்று அவனுக்கே புரியவில்லை. அந்தளவு யோசனையின் பிடியில் ஆக்கிரமித்திருந்தான். வினிதா கூட அண்ணன் தன்மேல் கோபமாய் இருக்கிறானோ என்று நினைத்தாள்.

பஜாஜ் எம்-80-ஐ உசுப்பி மலைக்கோட்டை பிள்ளையாரைப் பார்க்கப் புறப்பட்டான்.

விதவிதமான பூக்களின் கலவை மணமும், கற்பூர ஆராதனையின் புகையும், மந்திர உச்சரிப்பும், மனதை என்னவோ செய்தது.

அருண் தேங்காய், பழத் தட்டுடன் படி இறங்கிக் கொண்டிருந்தான்.

இங்குதான் எத்தனைவிதமான மனிதர்களைப் பார்க்க முடிகிறது? அத்தனை பேரும் அள்ள அள்ளக் குறையாத பிரச்சினைகளோடு கோரிக்கை மனு கொடுக்க சிவமகனிடம் செல்கிறார்களே தவிர, 'எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். அதற்காக நன்றி சொல்லிவிட்டுப் போக வந்தேன்' என்று கூற யாராவது வருவார்களா?

'மனிதர்கள் அத்தனை பேரும் சுயநலவாதிகள், பேராசைக்காரர்கள். ஒரு பிரச்சினை முடிந்தால், அடுத்த பிரச்சினையை அவர்களே உண்டாக்கி, கடவுளிடம் ஓடி வருகிறார்கள். ஆசைகளும் தேவைகளும் குறைந்தால் ஏன் பிரச்சினை வருகிறது? ஏன் இப்போது இன்று காலைவரை

நிம்மதியாய்தானே இருந்தேன்? புதிதாய் விளிதாவில்... திருமணம் பற்றி பேச்சை எடுத்து. இதோ என்னையும் பிள்ளையாரை தாஜாப் பண்ண அனுப்பிவிட்டாரே அப்பா. தனக்குள் சிரித்தபடி வேகமாய் படியிறங்கிய போதுதான் அந்த சம்பவம் நிகழ்ந்தது.

படியேறிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் மேல் மோதிக் கொண்டான் அருண். அவன் கையிலிருந்த அர்ச்சனைத் தட்டு கீழே விழுந்தது. தேங்காய் படியில் குதித்து குதித்து ஓடியது. குங்குமமும் விபூதியும் அந்தப் பெண்ணின் மீது சிதறியது.

எதிர்பாராத இந்தத் தாக்குதலில் மிரண்ட அந்தப் பெண் வைத்திருந்த எண்ணெய்க் கிண்ணம் தடுமாறி அவன் சட்டையை அபிஷேகம் செய்தது.

புத்தம் புதிய வெள்ளை நிற டி-ஷர்ட். முழுக்க எண்ணெய் பட்டு பொலிவிழந்து போனதை சகித்துக் கொள்ள முடியாத அருண் உக்கிரமாய் அவளைப் பார்த்தான்.

"கண்ணு தெரியாத கபோதியா நீ? சனியன், வெள்ளை சட்டை முழுக்க பாழாக்கிட்டியே!" கத்தினான்.

வெள்ளிக்கிழமையும் அதுவுமாய், கடவுள் சன்னிதானத்தில் கபோதி, சனியன் என்று ஒரு அழகான இளைஞன் வாயால் அர்ச்சனை வாங்கியது... இதயத்தை கிழித்தது.

கூட்டம் சற்றுநேரம் நின்று வேடிக்கைப் பார்த்தது வேறு அவமானமாய் இருந்தது.

கண்களில் முத்துக்கள் கோர்க்க, உதடுகள் துடிக்க... அவளுக்கே கேட்காத சத்தத்தில், "மன்னிச்சிடுங்க" என்று கூறிவிட்டு வந்த வழியே இறங்கி ஓடினாள் சவுந்தர்யா.



புத்தகத்தைப் பிரித்தால்... அவன் முகம்தான் தெரிந்தது.

'சே... எவ்வளவு அவமானமான விஷயம்? நான் ஏன் அப்படி ஓடி வந்தேன்? தவறு யார் மீது? என் மீதல்லவோ அவன்தானே வேகமாய் ஓடிவந்து மோதினான்? அப்படி இருக்க என்னை ஏன் திட்டினான். அவனாக வந்து மோதி பழியை ஏன் என் மீது போட்டான்? ஒரு பெண் மீது வந்து இடித்ததற்காக அங்குள்ளவர்கள் தர்ம அடி கொடுத்து விடுவார்கள் என்றா? அப்போதே... அங்கேயே இது ஏன் எனக்குத் தோன்றாமல் போய்விட்டது?

பாவி... நாளும் கிழமையுமாய் என்னை எப்படியெல்லாம் திட்டிவிட்டான்? பளாரென்று அவனை இரண்டு அறை அறைவதை விட்டு நான் ஏன் பயந்து ஓடிவந்தேன்? சே...!'

சம்பவம் நடந்து இரண்டு நாளாகியும் அவளால் மறக்க முடியவில்லை. அவனை மறுபடி பார்த்தால் கடித்து குதற வேண்டும் போல் ஒரு ஆவேசம் எழுந்தது சவுந்தர்யாவுக்கு.

"அப்பா!" அலமாரியை தட்டி சுத்தப்படுத்திக் கொண்டிருந்த தனசேகர் ஆச்சரியமாய் திரும்பினார்.

ராஜாவா அழைத்தது?

"என்னப்பா?"

"இந்த வேலையை அப்புறம் பார்த்துக்கலாம். உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்?"

"என்ன விஷயம் ராஜா?" தனசேகர் இதயம் தடதடக்க பார்த்தார்.

"எல்லாம் சவுந்தர்யாவோட கல்யாண விஷயம்தான்

குபீரென முகம் மலர்ந்தார் தனசேகர்.

'பரவாயில்லையே! ஒரு அண்ணனுக்குரிய பொறுப்பு வந்து விட்டதே!'

"நல்ல விஷயம்தான். கேக்கவே சந்தோஷமா இருக்கு. ஆனா அவன் படிப்பு இன்னும் முடியலே... அதுக்குள்ளே..."

"அவன் படிச்சு வேலைக்கா போகப் போறா? இன்னொரு வீட்டுக்கு மருமகளாதானே அனுப்பப் போறோம். நாம கனவிலேயும் நினைக்கப் பார்க்காத ஒரு இடம் சவுந்தர்யாவுக்கு வந்திருக்கு!"

"சொல்லுப்பா அவளையும் கரையேத்திட்டா... நிம்மதியா இருப்பேன். படிப்பென்ன பெரிய படிப்பு? அவகிட்டே இருக்கிற புத்திசாலித்தனம், பொறுமை இதெல்லாம் அவள் வயசு பொண்ணுங்க கிட்டேயே பார்க்க முடியாது!"

"அப்பா... நம்ம சுப்ராஜாவோட பெரியம்மா பையன் குமார் இருக்காரே..." ராஜா விளக்கமாய் சொல்லச் சொல்ல... முகம் பொலிவிழந்து போனது தனசேகருக்கு.

"என்னப்பா சொல்றீங்க?"

அடுத்த அறையிலிருந்து அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த சவுந்தர்யா... புத்தகம் கையிலிருந்து நழுவியது கூடத் தெரியாமல் திக்பிரமை பிடித்து நின்றிருந்தாள்.

தனசேகர் மகனை ஏறிட்டார்.

"வேணாம்பா... என் பொண்ணுக்கு நான் கல்யாணம்தான் பண்ணனும்னு நெனைச்சேன். கருமாதிய அல்ல!"

"அப்பா...!"



"ராஜா! தங்கச்சி கல்யாணத்தைப் பத்தி கவலைப்பட்டு பேசறியேன்னு கொஞ்ச நேரம் சந்தோசப்பட்டேன். நான் முட்டாள்னு உணர்த்திட்டே!"

"என்ன பேசறீங்க? அவமேல எனக்கு அக்கறை இல்லாமலா இப்படியொரு வரனை கொண்டு வந்தேன்?"

"இப்படியொரு வரனை கொண்டு வந்ததால்தானே உனக்கு அவமேல எவ்வளவு அக்கறைன்னு புரிஞ்சது?"

"முடிவா என்ன சொல்றீங்க?"

"என்னப்பா மிரட்றியா? இது என் பொண்ணோட கல்யாணம். பொம்மை கல்யாணமில்லே... அந்த பொம்மைக்கு கட்டித்தர..."

"மாமா... என்ன பேசறோம்னு புரிஞ்சிதான் பேசறீங்களா? ஏன் எங்க அண்ணனுக்கு என்ன குறைச்சல்?" சுப்ராஜா அவர்முன் வந்து கேட்டாள்.

"இல்லேம்மா... உங்க அண்ணனுக்கு ஒரு குறைச்சலும் இல்லே! பிரச்சினைகளை சுமந்து, சுமந்து சவுந்தர்யா ஒருநாள் பைத்தியம் பிடிச்சி அலைவா! அப்பவேணா, உங்க அண்ணனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன் போதுமா?" தனசேகர் ஆத்திரத்தில் கத்தினார்.

அந்த கோபத்தை சுப்ராஜா எதிர்பார்க்கவில்லை.



5

மனிதன் சூழ்நிலைகளுக்காகப் படைக்கப்படவில்லை. சூழ்நிலைகளே மனிதனுக்காகப் படைக்கப்பட்டவை. சூழ்நிலைகள் மனிதனை தலைகீழாகப் புரட்டி அடியோடு மாற்றுகின்றன. ஒரே கணத்தில் உறவுகளை வெறுத்து ஒதுக்கச் செய்கின்றன.

அன்றைய சம்பவத்திற்குப் பின் அந்த வீடு தலைகீழாய் மாறிப் போயிற்று. கொஞ்ச நஞ்சமிருந்த கலகலப்பும் காணாமல் போயிருந்தது.

ராஜாவும், சுப்ரஜாவும் யாரிடமும் பேசுவதில்லை. தனசேகரும் வீம்பாகவே இருந்தார்.

யாரும், யாரை நம்பியும் இருக்கவில்லை என்கிறபோது, இவர்கள் பேசினால் என்ன, பேசாமலிருந்தால் எனக்கென்ன? என்றே கவலைப்படாமலிருந்தார்.

ஆனால் சவுந்தர்யாவினால் அப்படி கவலைப்படாமலிருக்க முடியவில்லை. வலியச் சென்று பேச முயன்ற அவளிடம் முகத்திலடித்தாற் போல் பேசி அனுப்பினாள் சுப்ரஜா.

''எதுக்கும்மா வர்றே? போ... உன் அழகுக்கும் அந்தஸ்துக்கும் டாடா, பிர்லா வீட்லேர்ந்தெல்லாம் வரன் வரும்னு உங்கப்பா தலைகனம் பிடிச்சி ஆடறார். ஏதோ நல்லது பண்ணணும்னு நினைச்ச எனக்கு இதுவும் வேணும். இதுக்கு மேலேயும் வேணும். எந்த முகத்தை வைச்சுக்கிட்டு எங்கிட்ட பேச வர்றே? வேணாந்தாயே... ஆளைவிடு!'' பட்டென்று இரு கைகளையும் சேர்த்து கூப்பினாள் சுப்ரஜா.



சவுந்தர்யாவின் கண்கள் பனித்தன.

''அண்ணி... அப்பா தெரியாம பேசிட்டார். அதையெல்லாம் மனசுல வைச்சுக்காதீங்க!''

''அப்ப... உனக்கு இந்த கல்யாணத்திலே இஷ்டமிருக்கா?''

''அய்யோ... அதில்லே அண்ணி!''

பதறியபடி அவள் சொன்ன பதில் சுப்ரஜாவை இன்னும் கோபப்படுத்திற்று.

''இதோ பாரு சவுந்தர்யா! தேவையில்லாம கண்டவங்க விசயத்திலே மூக்கை நுழைச்சது தப்புதான். பட்டவரைக்கும் போதும். இவ்வளவு ஆனபிறகு, அதுவும் எங்க அண்ணனை பைத்தியம்னு சொன்ன பிறகும் ஒட்டி உறவாட என்னால முடியாது. இனிமே எங்களுக்காக நீ சமைக்க வேணாம்...''

''அ...ண்...ணி...!'' அதிர்ந்தாள் சவுந்தர்யா.

சொன்னபடியே கணவன் மனைவி இருவரும் அந்த வீட்டில் சாப்பிடுவதில்லை. காலையில் இருவரும் விரைவாகவே புறப்பட்டு ஓட்டலில் டிபன்முடித்து, பகலுக்கும் ஓட்டலிலிருந்து வரவழைத்து சாப்பிட்டனர். இரவுக்கு வரும்போதே பார்சல் எதையாவது வாங்கிக் கொண்டோ அல்லது தனக்கு தெரிந்தளவில் சாதம், ரசம், சாம்பார் பொரியல் என்று தங்களுக்கு சமைத்துக் கொள்வாள் சுப்ரஜா.

தனசேகருக்கு இந்த ஒதுங்கல் நிம்மதியைத் தந்தது.

'என் மகளுக்கு கொஞ்சமாவது ரெஸ்ட் கிடைக்கிறதே. அ போதும்!' என்று.

அப்படி அப்பாவைப் போல் சவுந்தர்யாவினால் இருக்க முடியவில்லை.

ஏற்கனவே அண்ணனும், அண்ணியும் தன்னிடம் மனம் விட்டுப் பாசமாய் பேசுவதில்லையே என்று வேதனையில் இருந்தவளுக்கு, இப்படி ஒரேயடியாய் பேச்சை முறித்துக் கொண்டதோடு மட்டுமின்றி, வீட்டில் சாப்பிடாதது அவளை இன்னும் வேதனைப்படுத்திற்று.

அவளால் தாங்க முடியவில்லை.

''அப்பா... நீங்களும் சும்மாயிருந்தால் என்ன அர்த்தம்? அவங்க ஓட்டலில் சாப்பிடறாங்கப்பா!''

''அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?''

''இந்த வீட்டுக்கு பெரியவர் நீங்க! நீங்கதான் எடுத்துச் சொல்லணும்!''

''வேணாம்மா... உன் நன்மைக்காக சொல்றேன். விட்ரு. இப்படி இருக்கறதுதான் நமக்கும் நல்லது!''

''என்னப்பா நல்லது? அண்ணிக்கு சரியாவே சமைக்கத் தெரியலே! அண்ணன் பாவம் எப்படியோ சாப்பிடறார்!''

''அதெல்லாம் அவனுக்கு தேவாமிர்தமாதான் இருக்கும். போம்மா! அடுத்தவங்களைப் பத்திக் கவலைப்படறதை விட்டுட்டு... உனைப்பத்திக் கவலைப்படு... ஒழுங்கா சாப்பிடறியா, இல்லையா? கண்ணெல்லாம் உள்ளடங்கிப் போய் இருக்கு?''

''உங்க மகளைப்பத்தி கவலைப்படறீங்களே! அது போலத்தான் எனக்கு என் அண்ணனைப் பத்தியும், அண்ணியைப் பத்தியும் கவலை ஏற்படுது...''



''சவுந்தர்யா?'' மகளை வியப்பாய் ஏறிட்டார்.

''நம்ம குடும்பம் ரொம்ப சின்னதுப்பா! என்ன பாவம் பண்ணினேனோ... அம்மாவை சின்ன வயசுலேயே பறி கொடுத்திட்டேன். எனக்குன்னு இருக்கறது நீங்களும், அண்ணனும்தானே? ரெண்டு பேரும் எனக்கு ரெண்டு கண்கள் மாதிரி! ஒரு கண்ணை வலுக்கட்டாயமா பொத்திக்கிட்டு, ஒரு கண்ணால இந்த உலகத்தை பார்னு சொன்னா எப்படிப்பா? இந்த உறவு அடுத்த பிறவியிலும் தொடரும்னு என்ன நிச்சயம்? ஏற்கனவே அனாதை மாதிரி ஒரு உணர்வு எனக்குள் இருக்கு. இப்ப அண்ணனோட பாராமுகம்... மனசை ரொம்ப கஷ்டப்படுத்திச்சுப்பா!'' பொங்கிவந்த கண்ணீர் முத்துக்களை நாசூக்காய் துடைத்தபடி சொல்லி முடித்தாள் சவுந்தர்யா.

''சவுந்தர்யா...!''

''எனக்காக... எனக்காகவாவது அவங்ககிட்டே சமாதானமா பேசுங்கப்பா... பிளீஸ்...!'' அதற்குமேல் முடியாமல் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

மகளின் கண்ணீர் தனசேகரை ஒரு படி கீழிறங்கி வர வைத்தது.

அலுவலகம் விட்டு வந்ததும் ராஜா குளித்து முடித்து கையில் ஒரு கேரியரோடு ஓட்டலுக்குப் புறப்பட்டான்.

''ராஜா!'' தனசேகர்அழைத்தார்.

ராஜா நின்றான். என்ன? என்று கூடக் கேட்கவில்லை.

''எங்கேப்பா போறே?''

''ஏன்... பார்த்தா தெரியலே?''

"தெரியுது... அதனாலதான் கேட்கிறேன்."

"ஓட்டலுக்கு...!"

"ஏன்டா இப்படி பிடிவாதம் பிடிக்கறே? வீடு, குடும்பம்னு இருந்தா நாலு பிரச்சினை இருக்கத்தான் செய்யும். அதுக்காக வீட்டைவிட்டு ஓட்டல் சாப்பாடு சாப்பிடறதா?"

"வீடு, குடும்பம்னு உங்களுக்கு ஞாபகமிருந்தா சரி! இந்த வீட்டுக்கு நல்லது பண்ண நினைச்சவங்க மேலதான் சாணியை பூசிட்டீங்களே..."

"வேணாம் ராஜா... விட்ரு! நடந்ததை மறந்துடு. அந்த கல்யாண விசயத்தைப் பற்றி இப்ப பேச வேணாம்!"

"இப்பன்னு இல்லே... இனி எப்பவுமே அவளோட கல்யாண விசயம் பத்தி பேச மாட்டேன். போதுமா?" ராஜா அலட்சியமாய் கூறினான்.

தனசேகருக்கு சுருசுருவென கோபம் ஏறியது. சவுந்தர்யாவின் முகம் பார்த்து அடக்கிக் கொண்டார். சுப்ரஜா தன் அறை வாசலிலேயே நின்றபடி கணவன் பேசுவதை பார்த்து மனதிற்குள் மெச்சிக் கொண்டிருந்தாள்.

"சரி... கேரியரை தூரப் போட்டுட்டு வா! சாப்பிடலாம். சவுந்தர்யா உங்களுக்காக சமைச்சு வைச்சிருக்கா!"

ராஜா ஒரு கணம் மனைவியை ஏறிட்டு அமைதியானான்.

"வா... ராஜா!"

"சாப்பிட வரணும் அவ்வளவுதானே?"

"ஆமாம்!"



"அப்ப... நான்கேட்கிற உதவிய நீங்க எனக்கு செய்யணும்!"

"என்ன உதவி?" புருவம் கம்பளிப்பூச்சாய் நெளிந்தது.

"நான்... தனியா கம்ப்யூட்டர் சாப்ட்வேர் கம்பெனி ஆரம்பிக்கப் போறேன்..."

"....."

"சுப்ரஜாவும் பணம் போடறா! அப்படி இப்படின்னு பார்த்தாலும் குறைஞ்சபட்சம் இன்னும் மூன்றரை லட்சம் தேவைப்படுது!"

".....?!"

"சவுந்தர்யா பேர்ல பாங்கில ரெண்டு லட்சம் போட்டிருக்கீங்க இல்லே! அதை எடுத்துத் தரணும். அவளுக்கு படிப்பு முடிஞ்ச பிறகுதானே கல்யாணம் பண்ணப் போறீங்க? அதுக்குள்ளே அந்தப் பணத்தை நான் திருப்பித் தந்திடறேன்" ராஜா அவன் பாட்டுக்கு சொல்லிக் கொண்டே போனான்.

தனசேகரின் தாடை நரம்புகள் புடைத்தன.

"என்ன சொல்றீங்க? நாங்க இந்த வீட்லே சாப்பிடணும்னா, இந்த பணத்தை நீங்க தரணும்!"

தனசேகரன் டேபிள் மீதிருந்த கேரியரை எடுத்து ராஜாவின் கையில் கொடுத்தார்.

"ஓட்டலை மூடிடப் போறாங்க... சீக்கிரம் போப்பா!"

"அப்பா...!" சவுந்தர்யா அலறினாள்.

"வாயை மூடு! எதையாவது பேசினியோ தொலைச்சு(டு)வேன்!"

"முதல் முறையாய் சவுந்தர்யாவை அடிக்க கை ஓங்கினார்.

ராஜா ஆவேசமாய் வெளியே சென்றான்.

அந்த வீடு பழையபடி மவுனப் போர்வையை போர்த்திக் கொண்டது.

சவுந்தர்யா இந்தப் பிரச்சினைகளால் படிப்பில் கூட கவனம் செலுத்த முடியாமல் திண்டாடினாள்.

ஒரு நாள் ஒரு சிறிய கவரோடு வீட்டிற்கு வந்தார் தனசேகர்.

அந்த கவரை சாமி படத்திற்கருகே வைத்து வணங்கி மகளை அழைத்தார்.

"சவுந்தர்யா...!"

"என்னப்பா?"

"இந்தா!"

"என்னப்பா இது?"

"உன்னோட ரெண்டு லட்சம்!"

"ரெண்டு லட்சமா?"

"ஒரு புது லாரி! செகன்ட்ஹான்ட்ல விலைக்கு வந்தது. வாங்கிட்டேன். அதோட லைசன்ஸ் புக்தான் இது!"

"லாரி... லைசன்ஸ்... ஒண்ணுமே புரியலையேப்பா!"

"அம்மாடி... பணம் பாங்கில இருந்தாலும் பயம், வீட்லே இருந்தாலும் பயம். மூலை முடுக்கெல்லாம் வாயைக்கட்டி, வயித்தைக் கட்டி சேர்த்து வைச்சு போட்ட பணத்தையெல்லாம்



பைனாஸ் கம்பெனிங்க முழுங்கி ஏப்பம் விட்டு ஏமாத்தறாங்க. அதனாலே... அரசாங்க வங்கி மேல கூட நம்பிக்கை வரமாட்டேங்குது. நாட்டு நடப்பு அப்படி. என் நண்பர் ஒருவர் யோசனை சொன்னார். லாரிய வாங்கி வாடகைக்கு விட்டோம்னா... நல்ல பணமாம்!

இந்த லாரிய நான் வாடகைக்கு விடப்போறேன். அதுக்கான ஏற்பாடும் பண்ணிட்டேன். பார்த்துட்டே இரு! உங்க அண்ணனும், அண்ணியும் ஆச்சரியப்படற அளவுக்கு உன்னை எப்பேர்ப்பட்ட இடத்துல கல்யாணம் பண்ணிக் கொடுக்கறேன் பார்! அதைப் பார்த்து அவங்க ரெண்டுபேரும் அசந்து போகணும். என்னம்மா அப்படிப் பாக்கறே?"

"அசந்துதான் போயிட்டேன்... அதான்!" தொண்டைக்குள் எதுவோ வந்து அடைத்துக் கொண்டது சவுந்தர்யாவுக்கு!



6

"எத்தனை முறை சோப்புப் போட்டாலும் இந்த எண்ணெய்க் கறை விடவேயில்லைண்ணா!" வினிதா அவனின் சட்டையை அருணிடம் கொண்டு வந்து காட்டினாள்.

அதை வாங்கிப் பார்த்தான்.

"ப்ச்... புது சட்டை! போச்சு... இனிமே போடவே முடியாது! எல்லாம் அந்தச் சனியனால வந்தது!"

"என்னமோ வேணுமின்னே உங்க மேலே வந்து மோதின மாதிரி பேசறியேண்ணா... பாவம் அந்தப் பொண்ணு!"

"பாவமோ, புடலங்காயோ, அவளைப் பத்தி பேசாதே எரிச்சலாயிருக்கு!"

"நான் பேசவேண்ணாலும் உங்களால அவளை மறக்க முடியாதே!"

"ஏன்?"

"இந்த சட்டையைப் பார்க்கும் போதெல்லாம் உங்களுக்கு அவள் ஞாபகம்தானே வரும். அப்ப என்ன பண்ணு வீங்களாம்?" வினிதா கிண்டலாய்க் கேட்டாள்.

"அவளை நான் ஏன் நினைக்கப் போகிறேன்?" என்று அருண் வீம்பாக பேசினாலும் நிஜமாகவே அவள் முகம்தான் கண்களில் நிறைந்திருந்தது.

அலங்க, மலங்க விழித்த அந்த கண்கள்! ப்பா... எவ்வளவு பெரிய கண்கள்? அதிலும் குத்தீட்டிகளாய் விடைத்து நின்ற அடர்ந்த இமைகள்... அசப்பில் மயில்தோகை விரித்தாடுவது போல என்னவொரு அழகு?

பாவம்... அதிகமாய் திட்டி விட்டேனோ? அவள் கண்கள் கூடக் கலங்கிவிட்டது. நானும் தானே வேகமாய் படியிறங்கினேன். நிதானமாக போயிருக்கலாம். அர்ச்சனை தட்டிலிருந்த அவ்வளவு குங்குமமும் அவள் உடை மீது கொட்டி விட்டதே! குங்குமக் கறையைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவளுக்கும் என் நினைவு எழுமா?

"நான் சொன்னது சரியாப் போச்சுதானே? உங்களுக்கு அந்தப் பொண்ணு ஞாபகம் அடிக்கடி வரும்!"

"ஏய்... என்ன சொல்றே?"

"பின்னே போட்டிருந்த நல்ல சட்டையை கழட்டிட்டு இந்த கறைபடிஞ்ச சட்டையை மாட்டிக்கிட்டு எங்கேயோ வெறிச்சுப் பார்த்துக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்?" வினிதா குறும்பாய்



கண் சிமிட்டிக் கேட்ட போதுதான் தன்னை குனிந்துப் பார்த்தான்.

திடுக்கிட்டான்.

நிஜம்தான்!

அந்த சட்டையைத்தான் அணிந்திருந்தான். எப்போது? எப்படி?

சங்கடத்துடன் தலைகவிழ்ந்து "ஏய்... முதல்ல சூடா ஒரு காபி எடுத்துட்டு வா!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

அருண் பட்டப்படிப்பு படித்தவன். விதவிதமாய் உடை அணிவதில் விருப்பம் அதிகம். படித்து முடித்ததும் கம்பெனி கம்பெனியாய் வேலை கேட்டு ஏறி அலைவதில் அவனுக்கு விருப்பமில்லை. சொந்தமாய், திருச்சி மெயின் பஜாரிலேயே ஒரு ஸ்பேர் பார்ட்ஸ் கடையை துவக்கினான்.

ஓகோ என்று வியாபாரம் பிய்த்துக் கொண்டு போகாவிட்டாலும் ஓரளவு நல்ல வருமானம் வரக்கூடிய அளவில் போய்க் கொண்டிருந்தது.

அருணின் கல்லூரி நண்பர்களில் பலரும் இன்று பிஸினஸ் லைனில் இறங்கிக் கொடி கட்டிப் பறந்து கொண்டிருந்தனர். அதில் நெருங்கிய நண்பன் நாகராஜன். நடத்தி வந்த ரப்பர் பான்ட் பிஸினஸில் லாபம் கொழித்து செழிப்புடன் இருக்கிறான். சொந்த ஊர் தூத்துக்குடி! அவனும் அருணை தன்னுடன் பார்ட்னராக வந்து சேர்ந்துவிடு என்று அழைத்த கொண்டே இருக்கிறான்.

அருணுக்கும் அவனோடு பார்ட்னராக சேர்ந்து ஆசையிருந்தது. அதற்காக கால அவகாசத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தான்.

வினிதாவுக்கு மூத்த இரு சகோதரிகளை ஈஸ்வர கிடையாது பணம் புகுந்த வீட்டுக்கு அனுப்பி வைத்த வினிதாவின் கல்யாண சுமை அருணின் தோ ஏற்றப்பட்டது. ஏற்றுக் கொண்டான். அவளை நல்லதொ இடத்தில் திருமணம் முடித்து அனுப்பி வைத்தபிறகுதா தாசராஜனோடு தீவிரமாய் பிஸினஸில் ஈடுபடுவது என முடிவு செய்திருந்தான். அதன்பிறகுதான் தனக்கு கல்யாண காய்ச்சி எல்லாம் என்பதில் தீர்மானமாய் இருந்தான்.

இந்நிலையில் வினிதாவின் திருமணத்தையும் சட்டுபு டென்று முடித்து அனுப்பிவிட வேண்டும் என்று அவசர பட்டு, தரகரிடம் ஜாதகம் கொடுத்திருந்தார் ஈஸ்வரன்.

நாட்கள் ஓடின. மாதங்கள் பிறந்தன.

அன்று...

இரவு சாப்பாட்டிற்குப் பின் அருணை தன்னறைக்கு அழைத்துச் சென்றார் அப்பா.

"என்னப்பா... என்னவோ முக்கியமான விசயம் பேசணும்னு கூப்பிட்டுட்டு ரொம்ப யோசனையா உக்கார்ந்திட்டிருக்கீங்க?" அருண் ஆச்சரியமாய் அப்பா எதிரில் சேரை இழுத்துப்போட்டு அமர்ந்தான்.

"அருண்..."

"சொல்லுங்கப்பா!"

CPL 536577



"நம்ம வினிதாவுக்கு இப்ப நல்ல வரன் வந்திட்டிருக்கு அதைப் பத்தி பேசறதுக்காகத்தான்...!"

"அப்பா சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. வினிதாவுக்கு அப்படியென்ன வயசாயிடுச்சு? இன்னும் வீட்டு வேலையே சரியா செய்யத் தெரியலே... ஒரு வருஷம், ரெண்டு வருஷம் போகட்டுமேப்பா!"

536577

"இல்ல அருண்! எனக்கிருக்கிற ஆஸ்த்துமா நோய் என்னை எப்ப, எந்த நேரத்திலே உயிரை பிடுங்கிட்டுப் போகுமோ... தெரியாது. நான் உயிரோட இருக்கறதுக்குள்ளே... உங்க ரெண்டு பேருக்கும் ஒரு வழி பண்ணிட்டேன்னா... கடமை முடிஞ்சிடும்!"

894.8113 MAN

"ஏம்பா... இப்படியெல்லாம் பேசறீங்க? வினிதா பாட்டி ஆகறதையெல்லாம் நீங்க பார்க்கத்தான் போறீங்க!"

"அதுக்கு... அவளுக்கு கல்யாணமாகணுமே அருண்!"

"அப்பா... உங்களுக்குத் தெரியாதது ஒண்ணுமில்லே வினிதாவை நல்ல இடத்துல கல்யாணம் பண்ணணும். அ வரனுக்கேத்த மாதிரி... நாமும் நல்ல சீர் பண்ணணு அவளுக்கு நகை முதற்கொண்டு கல்யாணச் செலவு வரைக் பணம் சேர்க்கணும். சேர்த்துக்கிட்டுதான் இருக்கேன். ஆ இப்பவே பண்ற அளவுக்கு எங்கிட்டே பணமில்லேப் கடன்தான் வாங்கணும்!"

"ஏன் கடன் வாங்கணும்? இதோ பாருப்பா அ வினிதாவுக்கு கல்யாணம் ஆகணும்னா, அதுக்கு மு உனக்கு கல்யாணம் ஆகணும்!"

"அப்பா... என்ன சொல்றீங்க? எனக்கு கல்யா அப்பாவை ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

3 FEB 2002

"ஆமாம்ப்பா! உன் படிப்பு, தகுதி, சொந்த வேலை... பார்த்தாக்கூட போட்டி போட்டுக்கிட்டு பொண்ணு கொடுப்பாங்க! வரப்போற மருமகள் குறைஞ்சது முப்பது பவுனாவது போட்டுட்டு வருவா!தவிர, வரதட்சணை, சீர்... கணிசமா கைக்கு வந்துடும். அதை அப்படியே வினிதாவுக்கு போட்டு..."

"நிறுத்துங்கப்பா...!" அருண் கோபமாய் கத்தினான்.

"இதென்ன கல்யாணம்னு நினைச்சீங்களா, கடைத்தெரு வியாபாரம்னு நினைச்சீங்களா?"

"அ...ரு...ண்!"

"வீட்டுக்கு வரப்போறவளையும் மகளா நினையுங்க! அவளுக்கு ஆசை ஆசையாய் பெத்தவங்க பார்த்துப் பார்த்து செஞ்சு போட்டு அனுப்பற நகையை அபகரிச்சு வினிதாவுக்கு போடணும்ங்கறது எப்பேர்பட்ட அரக்கத்தனம்? இங்கே பாருங்கப்பா... இந்த வீட்டுக்கு வரப்போற உங்க மருமகளுக்கு எல்லாவிதத்திலும் ஆம்பளையா, நல்ல புருஷனா நடந்துக்கவே ஆசைப்படறேன். வினிதாவுக்கு அண்ணனா அவளுக்கு உரியதை நான் செய்வேன். அந்த பயம் உங்களுக்கு வேண்டாம். இப்போதைக்கு என் கல்யாணத்தைப் பத்தி பேசாதீங்க... அது வேஸ்ட்!"

அருணின் ஆணி அடித்தாற் போன்ற பேச்சால் சற்று கலவரப்பட்ட ஈஸ்வரன் உடனே சகஜத்திற்கு வந்தார்.

"சரி... அருண்! நீ சொல்றதும் நியாயம்தான்! பெத்த புள்ளைங்க விஷயத்திலே... சுயநலம் கண்ணை மறைக்கும்ங்கறது நீ அறியாததல்ல! இப்ப இதுக்குமேலே எதையும் பேச



வேண்டாம். நீ போய்ப் படு... ஆனா, நான் சொன்ன யோசனையை நீ மறுபடி..."

அருண் அப்பாவை சலனமின்றி ஒரு பார்வை பார்த்துவிட்டு மாடியேறிப் போனான்.

அவன் மனம் கொதித்தது.

'சே... எவ்வளவு சுயநலம்? யார் வீட்டுப் பொண்ணோ, கொண்டு வர்ற பணத்தில் தன் மகளை கரையேற்றிவிட துடிக்கிறார். அந்தப் பெண்ணுக்கு நகையணிய ஆசையிருக்காதா?'

அப்பா... வினிதா கல்யாணத்துக்கு ஏன் இப்படி அவசரப்படுகிறார்? அவளுக்கு முன்னால் நான் பண்ணிக் கொள்ளணுமாம். என்ன யோசனை இது? பணத்துக்காக அவசர அவசரமாய் என் திருமணம் நடக்கணுமா? திருமணம் என்றால் எவ்வளவு விஷயமிருக்கிறது? முதலில் அழகான பெண்! என் மனதிற்குப் பிடிச்சிருக்கணும்... பார்த்த முதல் பார்வையிலேயே... என்னை கவரணும்... கோவிலில் வந்து மோதினாளே... அவளை மாதிரி! யோசனை இப்படிப் போய், அப்படிப் போய்... கடைசியில் அவள் மீதே வந்து நிற்க, அருண் சந்தோசமாய் கண்களை மூடிக் கொண்டான்.

கடைக்குப் புறப்பட படி இறங்கி வந்தவன் அப்போதுதான் கவனித்தான்.

ஹால் சோபாவில் அப்பாவுடன் தரகர் குமாரசுவாமியும் அமர்ந்திருந்தார்.

'என்ன... காலங்கார்த்தால வந்துட்டாரா? வினிதாவுக்கு கட்டு கட்டா வரன் கொண்டுவந்து அப்பா மூளையை சலவைப் பண்ணிட்டிருக்காரா?'

"அருண்... இங்கே வாப்பா!"

"நேரமாச்சப்பா!" அங்கிருந்து உடனே ஓடிவிட வேண்டும் போல இருந்தது.

"அஞ்சு நிமிசம்தான்... இப்படி வந்து உக்காரு!" அப்பா அழைக்கவும் மறுக்க முடியாமல் அமர்ந்தான்.

"குமாரசுவாமி... குப்பரா ஒரு வரன் கொண்டு வந்திருக்கார்... பாரேன்!"

"அப்பா... நான்தான் நேத்தே சொல்லிட்டேனே! வினிதாவுக்கு... கொஞ்ச நாள் ஆகட்டும்!"

"இது வினிதாவுக்கு இல்லே! உனக்கு!"

"எனக்கா?" சுருசுருவென்று கோபம் ஏறியது.

"ஆமாம்பா... ஒரே பொண்ணு! கூடப் பொறந்தது ஒரு அண்ணன் மட்டுந்தான். நகை, சீர், செனத்தி எல்லாம் தாராளமாய் செய்யறாங்களாம்..."

"அப்பா... பிளீஸ்... போதும்! நான் சொன்னா சொன்னது தான்! எனக்கு பிஸினஸ் கனவு இருக்கு. இதை நிஜமாக்கிட்ட பிறகுதான் என் கல்யாணமெல்லாம். இதிலே எந்த மாற்றமும் இல்லே! தயவு செஞ்சு இனியொரு முறை இந்தப் பேச்சை எடுக்காதீங்க!" இறைந்து பேசினான்.

"பொண்ணு அழகாயிருக்கு அருண்! இந்த போட்டோவை பாரேன்!"

ஈஸ்வரன் நீட்டிய போட்டோவை தொட்டுக் கூட பார்க்காமல் எழுந்து வெளியே போய்விட்டான்.



பெருமூச்சை வெளியிட்டார் ஈஸ்வரன்.

'இந்தப் பையன்... எதுக்கும் மசியமாட்டேங்கிறானே' கவலையாய் யோசித்தார்.

"சரி... அந்த போட்டோவை கொடுங்க! இந்த வரனை முதன்முதலா உங்ககிட்டேதான் காண்பிச்சேன்! உங்க பையனுக்கு கொடுப்பினை இல்லே!"

"இல்லை குமாரசுவாமி! இந்த போட்டோவும், ஜாதகமும் என்கிட்டேயே இருக்கட்டும். அருண் நல்ல மூடுல இருக்கப்ப நான் மறுபடி பேசிப் பார்க்கிறேன்! எனக்கு இந்த சம்பந்தத்தை விட மனசில்லே!"

ஈஸ்வரன் மறுபடி அந்த போட்டோவைப் பார்த்தார்.

பல் தெரியாத புன்னகையோடு பளிச்சென்று இருந்தாள் சவுந்தர்யா!



7

பத்து நாள் இன்பச் சுற்றுலா சென்றிருந்தனர் ராஜாவும் சுப்ரஜாவும், வீடு வெறிச்சென்றிருந்தது.

சவுந்தர்யா பெருமூச்சுவிட்டாள். கவனம் பாடப் புத்தகத்தில் பதியவில்லை.

அந்த வீட்டில் முன்பைவிட விரிசல் அதிகமாகியிருந்தது. அப்பா அந்த இரண்டு லட்சத்தை எடுத்து லாரி வாங்கி விட்டிருந்தது ராஜாவை அவமானப்படுத்தியது போலிருந்தது.

விசயம் அறிந்தபின் அவன் என்ன ஏது என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. அவன் தீவிரமாய் காரியத்தில் இறங்கினான்.

இருந்தாற் போலிருந்து திடீரென்று மனைவியுடன், ... கொடைக்கானல், மைசூர் என்று புறப்பட்டுப் போனா... போகு முன்புகூட ஒரு வார்த்தை சவுந்தர்யாவிடம் ... சொல்லிக் கொண்டு போகவில்லை. அந்த வருத்தம் ... அவளை அரித்துத் தின்றது.

"வாங்க... வாங்க..." என்றபடி தனசேகர் யாருடனோ... வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

இப்போதெல்லாம் தனசேகர் உற்சாகமாகவே இருக்கிறா... வாரியின் மூலம் கிடைக்கும் வாடகைப் பணம் கணிசமா... சேர்ந்து கொண்டிருந்தது. பின் சந்தோஷத்திற்கு கேட்கவா வேண்டும்?

"அம்மாடி சவுந்தர்யா... காபி கொண்டுவாம்மா! இப்படி உக்காருங்க சார்!"

குமாரசாமி அமர்ந்தார்.

"உம்ம பொண்ணு போட்டோவை விடவும் நேர்ல இன்னும் சவுந்தர்யமா இருக்கா... பேரைப் போலவே... அவளுக்கு ஏத்த மாதிரி ஒரு வரன் கொண்டு வந்திருக்கேன்."

தனசேகர் பூரித்துப் போனார்.

"உம்ம பொண்ணோட ஜாதகத்தை முதன்முதலா ஒரு வரன்கிட்ட கொடுத்தேன். அவங்களுக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு. என்ன... பையன் கல்யாணத்தைக் கொஞ்சம் ஒத்திப்போடச் சொல்றான். என்னமோ பிஸினஸ் பண்ணப் போறானாம். அதுவும் நல்லதுக்குத் தானே? அதுக்குள்ளே உம்ம பொண்ணோட படிப்பும் முடியட்டும். இந்தாங்க... இதுதான் அந்த பையனோட போட்டோ... பேரு அருண்...



வாம்மா... முதல்ல நீதான் பார்க்கணும்... பிடிச்சிருக்கா சொல்லு!"

பேசியதெல்லாம் காதில் விழ... மவுனமாய் நின்றிருந்தாள் சவுந்தர்யா.

தனசேகர் அந்த போட்டோவை மகளிடம் நீட்டினார்.

"அப்பா... இப்ப எதுக்கு கல்யாணம்? கொஞ்ச நாள் போகட்டுமே!"

"இப்பவே கல்யாணம் பண்ணி மாமியார் வீட்டுக்கு அனுப்பிடறேன்னா சொன்னேன்? எல்லாம் படிப்பு முடிஞ்ச பிறகுதான்! நல்ல வரன் வரும்போது... அதை தட்டி கழிக்கக் கூடாது பாரு... பிடிச்சிருந்தா சொல்லு!"

சவுந்தர்யா அந்த போட்டோவை வாங்கிப் பார்த்ததும் திகைத்துப் போனாள்.

"இவனா?"

"என்னம்மா சொல்றே?"

"உங்க இஷ்டம்ப்பா!" அதை சொல்லும்போதே... கால் தரையில் படவில்லை! பறப்பது போலிருந்தது.

சவுந்தர்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'எப்படி இது சாத்தியம்? ஒருவேளை கடவுள் போட்ட முடிச்சு என்கிறார்களே... அது நிஜம்தானோ? அதனால்தான் அவனை... ச்சே... என்ன இது மரியாதை இல்லாமல்... அவரை கோவிலில் எதிரும் புதிருமாக மோத வைத்தான்?

அவளுக்கு அன்றிலிருந்து தூக்கம் பறிபோய் இரவில் ராப்பேய் போல கொட்ட கொட்ட விழித்திருந்தாள்

தூங்காமலே கனவு கண்டாள். கனவில் அருண் அவ... இடையை வலிக்காமல் அணைத்து முத்தமிட்டா... சமையலில் கவனம் பிசகியது. உப்பை குறைத்தாள். காரத்தை அள்ளிக் கொட்டினாள். பால் பொங்கி வழிந்தது.

காதல் நோயால் பீடிக்கப்பட்ட ஒரு யுவதி எந்தளவு அம்னீஷியா பேஷன்ட் போல், சினிமாவிலும், கதை புத்தகங்களிலும் சித்தரித்திருப்பார்களோ, அதில் இம்மியும் பிசகாது நடந்து கொண்டாள் சவுந்தர்யா.

தரகர் இரண்டு மூன்று முறை ஈசுவரன் வீட்டிற்கு நடையாய் நடந்தார். ஈசுவரன் அருணுக்குத் தெரியாமல் வாக்குக் கொடுத்தார். வினிதாவின் திருமணத்தை எந்தளவு முடியுமோ அந்தளவு சீக்கிரம் முடித்துவிட்டு அருண் திருமணத்தை நடத்தி விடலாம். பெண்ணின் போட்டோவை பார்த்தால் மறுப்பு சொல்ல நா எழாது. எப்படியும் அவன் சம்மதிக்க வைத்து விடலாம். பெண்ணோட பெயரில் ஒரு லாரி கூட ஓடுகிறதாமே! இது போதுமே! சிறுகக்கட்டி பெருக வாழலாம். லாரியை வாடகைக்கு விட்டால் எக்கச்சக்கமாய் வருமானம் குவியுமே! நாளைக்கே அருண் பத்து லாரிக்கு சொந்தக்காரனாகி விட மாட்டானா?

ஈசுவரன் நாக்கில் எச்சில் வழிய கணக்குப் போட்டார்.

உற்சாகமாய் வந்திறங்கினார்கள் ராஜாவும் சுப்ரஜாவும். அவர்கள் நடவடிக்கையே வித்தியாசமாய் இருந்தது. அவர்களைத் தேடி யார் யாரோ வந்தார்கள். சுப்ரஜாவின் பெற்றோர் கூட வந்தனர். அவள் அறைக்குள்ளேயே பேச்சு வார்த்தை நடந்ததால் விபரம் தெரிய வாய்ப்பில்லாமல் போனது.



அன்று... ஞாயிற்றுக்கிழமை!

என்றுமில்லாத அதிசயமாய் ராஜா வாசலுக்கும், உள்ளுக்குமாய் அடிக்கடி நடை பயின்றான்.

யாருடைய வருகைக்கோ காத்திருப்பது போல் அந்த நடை உணர்த்தியது.

அரை மணி நேரம் அவனை அவஸ்தைப்பட வைத்து விட்டு காரில் வந்திறங்கினார் ஐம்பது வயது மதிக்கத்தக்க மனிதர். வரும்போதே... நிலப்படியிலிருந்து அங்குலம் அங்குலமாக பார்வையால் வீட்டை அளந்தபடி வந்தது தனசேகருக்கு எரிச்சலைத் தந்தது.

''யாரும்மா இவன்? ஒட்டகம் மாதிரி கழுத்தை நீட்டி நீட்டி பார்க்கிறான்?''

''உஷ்... சத்தமா பேசாதீங்கப்பா! யாராயிருந்தா நமக்கென்ன? அண்ணனுக்கு தெரிஞ்சவங்க போல... கார்ல வந்திருக்கார்!''

''கார் என்ன கார்? அதைவிட பெரிய வண்டி நம்மக்கிட்டே இருக்கு. ஒரே வருடத்துல நாம கூடத்தான் கார் வாங்கலாம்!''

''சரி... வாங்கலாம்தான். அதுக்கேன் கோபப்படறீங்க வாங்க நம்ம ரூமுக்குப் போயிடலாம்!'' அப்பாவை உள்ளே அழைத்துச் சென்றாள் சவுந்தர்யா!

கால்மணி நேரம் கழித்து அவர் அறைக்குள் நுழைந்தார் ராஜா, சுப்ரஜா மற்றும் அந்த மனிதர்.

தனசேகர் எதுவும் புரியாமல் மகளைப் பார்க்க, அவ... நெற்றி சுருங்க அப்பாவைப் பார்த்தாள்.

அனால், ராஜா அவர் இருப்பதையே கவனியாதவன் போல அந்த நபரிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"இது பத்துக்கு பதினாலடி ரூம்... என் அறையைவிட கொஞ்சம் சின்னதுதான். கொல்லைப் புறமெல்லாம் உங்களுக்கு அவசியமிருக்காது. அதையெல்லாம் சேர்த்து கட்டினா அமர்க்களமாயிருக்கும்...!"

அந்த நபர் முகத்தில் திருப்தி இருந்தது.

"ஓக்கே மிஸ்டர் ராஜா!" என்று அவன் கையைப் பற்றி குலுக்கினார்.

அந்த நபர் போகும்வரை காத்திருந்த தனசேகர் பொறுமையிழந்தார்.

அவரை வழியனுப்பி விட்டு தன்னறைக்கு போன ராஜாவை கைநீட்டி தடுத்தார்.

"டேய்... நில்லுடா!"

"என்ன?"

"என்ன இதெல்லாம்?"

"எதெல்லாம்?"

"எவனோ வர்றான்... வீடெல்லாம் சுத்திப் பார்க்கறான்... என்னென்னவோ பேசறே... என்ன நடக்குது இங்கே?"

"எது நடக்கணுமோ, அதுதான் நடக்குது!" அமைதியாய் கூறினான்.

"......"



"நானும், சுப்ரஜாவும் அமெரிக்காவுலப் போய் செட்டிலாகப் போறோம். எங்களுக்கு அங்கே வேலை கிடைச்சிருக்கு!"

"எ...ன்...ன...?" தனசேகர் உறைந்து போனார். இதயத்தில் என்னவோ மோதும் சத்தம்.

சவுந்தர்யா கூட அதிர்வாய் அண்ணனைப் பார்த்தாள்.

"கிடைச்சா... போயிடணுமா? யாரைக் கேட்டு இந்த முடிவுக்கு வந்தே?"

"யாரைக் கேக்கணும்?"

"ஏன்... என்கிட்டே ஒரு வார்த்தைக் கேக்கணும்னு தோணலியா?"

"எப்படித் தோணும்? லாரி வாங்கினப்ப எங்ககிட்டே பர்மிஷன் கேட்டுட்டா வாங்கினீங்க? நான் அந்த பணத்தை கேட்டேன்னு அவசர அவசரமா வாங்கினீங்களே... அப்ப எனக்கு எப்படி இருந்துச்சு தெரியுமா?"

"அது அவளோட பணம். அதுதான்அவளோட எதிர்காலம். என்னமோ, உனக்கு அப்படியே ஒண்ணுமே தராம நடுத்தெருவில் நிக்கவைச்சுட்ட மாதிரியில்லே பேசறே? உனக்குன்னு இந்த வீட்டை எழுதித் தந்தேனே?"

"இல்லேன்னு சொல்லலே... வீட்டு பேர்ல கடன் வாங்கக் கூடாதுன்னுதான்... அந்த ரெண்டு லட்சத்தை கேட்டேன். ஆனா, இப்ப எங்களுக்கு அதைவிட அதிகமா பணம் தேவைப்படுது. அமெரிக்கா போறோமில்லையா அதனால..."

"அதனால...?"

"இந்த வீட்டை வித்துடலாம்னு முடிவு பண்ணிட்டேன்"

"ஐயோ... என்ன காரியம் பண்றே பாவி!" அலறிவிட்ட தனசேகர்.

"ஏன், என்ன தப்பு?"

"என்ன தப்புன்னா கேக்கறே? ஏன்டா கேக்கறது ஆளில்லேன்னு நினைச்சிட்டியா? எவ்வளவு தைரிய இருந்தா இப்படியெல்லாம் பேசுவே!"

"அப்பா... அமைதியா இருங்கப்பா... நிதானமா பேசுங்க" சவுந்தர்யா அப்பாவின் கையைப் பற்றி இழுத்தாள்.

"விடும்மா... என்ன நிதானம் வேண்டிக் கிடக்கு? கொஞ்ச விட்டா, நம்மளை நடுத்தெருவிலே நிக்க வைச்சிடுவான்!"

"அப்பா... நீங்க அதிகமா பேசறீங்க. உங்களுக் சவுந்தர்யா எதிர்காலத்துல எவ்வளவு முக்கியமோ, அ மாதிரி எங்களுக்கும் எங்க எதிர்காலம் முக்கியம். இது எ வீடு. இதை விக்க யாருடைய அனுமதியும் எனக்கு தேவையில்லே! நான் இந்த வீட்டை இப்ப வந்தாரே அவருக் வித்தாச்சு. அட்வான்ஸ் பணமும் கைநீட்டி வாங்கியாச் வேணுமின்னா... உங்களுக்காக ஒரு ஆறு மாசம் டை வாங்கித் தர்றேன். அதுவரைக்கும் இங்கே இருக்கலாம். அதுக்குள்ளே ஒரு வாடகை வீட்டை ஏற்பாடு பண்ணிக் முடியாதா என்ன?" அலட்சியமாய் பேசினான் ராஜா!

ஆனால் தனசேகரால் பதில் பேச முடியவில்லை. அதி அதிர்ச்சி அவர்மூளையின் முக்கிய ரத்தக்குழாயை வெடிக் வைத்தது. வாயிலும், மூக்கிலும் ரத்தம் கொட்ட சரிந் விழுந்தார்.



"அப்பா...!" என்றலறிய சவுந்தர்யாவின் குரல் தெருவெங்கும் எதிரொலித்தது.



8

அதிர்ஷ்டம் ரயிலில் வருமுன்பே துரதிர்ஷ்டம் தந்தியில் வரும் என்பார்கள்.

சவுந்தர்யாவின் நிலைமை அப்படித்தான் ஆகிப்போனது. இப்படி எல்லாம் நடக்கும் என்று அவள் கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லை.

ராஜா வீட்டை விற்பான் என்றோ, அப்பா உயிரை விடுவார் என்றோ யார்தான் எதிர்பார்த்தார்கள்?

நொறுங்கிப் போனாள் சவுந்தர்யா.

'அப்பா... எனக்காக, என் எதிர்காலத்துக்காக அண்ணனை பகைச்சீங்க... ஆனா, ஆனா இப்ப... எனக்கு யாருப்பா இருக்காங்க? என்னை அனாதையா விட்டுட்டு போயிட்டீங் களே... இனி எப்படி வந்து என்னை காப்பாத்தப் போறீங்க? அண்ணனும் அண்ணியும் அமெரிக்கா போயிட்டா... நான் எங்கேப்பா போறது? அய்யோ... எனக்கு எதுவும் புரியலியே... நான் என்ன பண்ணப் போறேன்? மாய்ந்து மாய்ந்து அழுதும் கண்ணீர் வற்றவில்லை.

மூன்று நாட்களாக எதுவும் சாப்பிடவில்லை. சாப்பிடவும் தோன்றவில்லை. பசி எடுத்தால் தானே?

ராஜாவோ, சுப்ரஜாவோ கூட அவளை சாப்பிடச் சொல்லவில்லை. தனசேகரை அடக்கம் செய்ததோடு அவர்கள்

துக்கம் முடிந்து போனது. அவர்கள் வரைக்கும் ஒட்டல்
சாப்பிட்டு விட்டு வந்தனர்.

நான்காவது நாள்தான் ராஜாவுக்கு தங்கையைப் பார்த்தது
கரித்தது. காய்ந்த சருகாய் சுவற்றில் சாய்ந்தமர்ந்திருந்தவளை
கண்டு நெகிழ்ந்தான். வரும்போது சாப்பாடு பொட்டலத்துடன்
வந்து அவள் முன் வைத்தான்.

"நடந்தது நடந்துபோச்சு. சாப்பிடாம இருந்தா... அப்பா
வந்துடப் போறாரா? சாப்பிடு!"

"வேணாம்ணா... எனக்குப் பசிக்கலே!"

"எல்லாம் பசிக்கும் சாப்பிடு! உன்னை அழாதேன்னு
சொல்ல மாட்டேன். அழுதாதான் துக்கம் குறையும்.
அதுக்காவது உடம்புல தெம்பு வேண்டாமா? எழுந்து முகம்
கழுவிட்டு வந்து சாப்பிடு!" சுப்ராஜா கூறினாள்.

'பரவாயில்லேயே... இவளுக்கு இந்தளவாவது
அனுசரணையா பேசத் தெரிகிறதே!' சவுந்தர்யா மெல்ல
எழுந்தாள்.

அருண் கொஞ்சமும் விருப்பமின்றி தான் தலையாட்டி
வைத்தான். ஈஸ்வரன் மாப்பிள்ளை வீட்டுக்காரர்களை
வரச்சொல்லிவிட்டு, அதன்பிறகே மகனிடம் "வினிதாவை
பெண் கேட்டு வரப்போகிறார்கள், நீ எங்கேயும்
போய்விடாதே...!" என்றபோது அருணால் மறுவார்த்தை பேச
முடியவில்லை.

முதன்முதலாய் வினிதாவை பெண் பார்க்க வருகிறார்கள்.
அபசகுனமாய் எதையும் பேசவில்லை அவன். வருபவர்கள்



பெரிய இடம் என்பதால் அதிகம் எதிர்பார்ப்பார்களோ என்கிற
பயம் அருணை வாட்டியது.

'இந்த அப்பாவுக்குக் கொஞ்சம் கூட முன்யோசனையே
இல்லை! பொண்ணை பிடித்து விட்டது என்று நாள் குறித்து
விட்டால் என்ன செய்வது? அதுவும் வருகிறவர்களிடம்
இரண்டு வருடம் கழித்து திருமணம் நடத்தலாம்' என்றால்
ஒப்புக் கொள்வார்களா என்ன?

கடைசியில் அருண் பயந்தது போல்தான் நடந்தது.
வினிதாவை பார்த்த மாத்திரத்தில் மிகவும் பிடித்துப்போக
உடனே நிச்சயத்திற்கு நாள் குறிக்க ஆரம்பித்தனர்.

மாப்பிள்ளை நல்ல உத்தியோகத்தில் எட்டாயிரம் சம்பளம்
வாங்கியதால் தாராளமாய் கேட்டனர். ஈஸ்வரன் அப்படி
இப்படி என்று ஏற்றி இறக்கி முப்பது பவுன் நகை, சீர்,
மாப்பிள்ளை உடை, தவிர கையில் ஐம்பதாயிரம் என்று
சம்மதிக்க வைத்தார். வந்தவர்களும் தலையாட்டி
சென்றுவிட்டனர்.

அருண் அப்பாவை பிடிபிடியென்று பிடித்துக் கொண்டான்.

"என்னப்பா... நீங்க பாட்டுக்கு திடீர்னு இப்படி ஏற்பாடு
பண்ணி, முப்பது பவுன், ஐம்பதாயிரம்னா நான் எங்கே
போவேன்?"

"நல்ல காரியத்தை தள்ளிப் போடக்கூடாது அருண்.
வந்தவங்க நல்லஇடம். அவங்க தகுதிக்கு நாம போடறது
செய்யறதெல்லாம் ரொம்ப கம்மி! ரெண்டு வருசம் கழிச்சி
இப்படியொரு வரன் கிடைக்கும்னு சொல்ல முடியுமா? யார்
யாருக்குத் தலையில என்னென்ன எழுதி வைச்சிருக்கோ,
அதுப்படிதான் நடக்கும்."

''அதெல்லாம் சரிதாம்பா... பணத்துக்கு ...
பண்ணுவேன்? அதை சொல்லுங்க!''

''எல்லாத்துக்கும் வழி இருக்கு. பதட்டப்படாதே அரு...

''என்ன வழி?''

''நீ எப்படியாவது முப்பது பவுனுக்கு ஏற்பாடு பண்ணு...
மீதியை நான் பார்த்துக்கறேன்...''

''எப்படி?''

''எனக்கு நெருங்கிய நண்பர் ஒருத்தர் இருக்கார். ...
மருதாச்சலம். ஸ்ரீரங்கத்துல ஜவுளிக்கடை வச்சிருக்கா...
எனக்காக எந்த உதவியும் செய்யத் தயாரா இருக்கா...
அவர்கிட்டே எழுபத்தஞ்சாயிரம் ரூபாய் கடன் வாங்...
போறேன்!''

''என்னப்பா சொல்றீங்க? அந்தக் கடனை எப்...
அடைப்பீங்க?''

''வட்டியில்லாமதான் அந்த கடன் தருவார். அதனா...
பிரச்சினை இல்லே! ஒரு வருசம் கழிச்சி அந்த பணத்...
திருப்பிடறேன்னு சொல்லுவேன்!''

''சம்மதிப்பாரா?''

''கண்டிப்பா...''

''சரி... ஒரு வருசம் கழிச்சி எப்படி திருப்பி தர்றது?''

'இந்த வீட்டுக்கு வர்ற லட்சுமி மூலமா...' சொல்லவில்லை...
சிரித்துக் கொண்டார்.



''அந்தக் கவலை உனக்கெதுக்கு அருண்? நீ போய்மத்த ஏற்பாடுகளைக் கவனி!''

அருண் அப்பாவை விநோதமாய் பார்த்தபடி அகன்றான்.

'எப்படியோ... போகட்டும். அவராச்சு... அந்த கடனாச்சு. இந்த முப்பது பவுனுக்கு குறைஞ்சது ஒரு லட்சமாவது புரட்டணுமே... என்ன செய்யலாம்?' கவலையாய் யோசிக்க ஆரம்பித்தான்.

நாகராஜனிடம் வாங்கிய ஐம்பதாயிரத்தோடு தன் சேமிப்பு பணத்தையும் சேர்த்து நகைகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டான் அருண்.

ஈஸ்வரனும் மருதாச்சலத்திடம் கேட்டு ஏற்பாடு செய்துவிட்டார். மருதாச்சலம் இன்று இந்தளவு செல்வ செழிப்பில் இருக்கிறார் என்றால், அது ஈஸ்வரனின் தந்தை ஆபத்து அவசரத்திற்கு கொடுத்து உதவிய பணத்தால்தான்! அந்த நன்றியை அவர் மறக்கவில்லை. அதனால்தான் ஈஸ்வரன் பண உதவி கேட்டதும் மறுக்காமல் தர ஒப்புக் கொண்டார். எழுபத்தைந்தாயிரத்தை ஒரு வாரத்தில் தருவதாக வாக்குக் கொடுத்தார்.

சொன்னபடி கொடுக்கவும் தவறவில்லை! பை நிறைய பணத்துடன் மனம் நிறைய சந்தோஷத்துடன் வீடு நோக்கிப் புறப்பட்டார் ஈஸ்வரன்.

இரவு எட்டை தாண்டிவிட்டது. பஸ் ஸ்டாண்ட் நோக்கி விரைந்து நடையை எட்டிப் போட்டார். அந்த குறுக்கு சாலையில் ஜன நடமாட்டமே இல்லை. நாலைந்து சாலை விளக்குகள் இருந்தும் ஒன்று மட்டுமே சோகையாய் எரிந்துக் கொண்டிருக்க, ஒன்று கண்சிமிட்டிக் கொண்டிருக்க, மற்ற இரண்டும் மீளாதுயிலில் ஆழ்ந்திருந்தது.

மஞ்சள் நிற துணிப்பையில் வைத்திருந்த பணத்தை கையிடுக்கில் வைத்து வேட்டியை தூக்கி செருகிக் கொண்டு விரைவாய் நடக்க வசதியாக.

சாலை வளைவில் ஒரு லாரி வேகமாக வந்து கொண்டிருந்தது.

யாரோ எறிந்த கல்லால் அடிபட்ட நாய் ஒன்று வாலை சுருட்டிக் கொண்டு காலை நொண்டியபடி அலறிக் கொண்டு வந்தது.

நாய்க்காக பரிதாபப்பட்டபடி வந்துக் கொண்டிருந்த ஈஸ்வரன் சாலையை கடக்க முற்படுவதற்கும், லாரி அவர் அருகில் வருவதற்கும் சரியாக இருந்தது.

கடைசி விநாடியில் பார்த்து, பதறி ஓட முற்படுகையில் நாயின் மீதே தடுமாறி விழுந்தார்.

அடுத்த கணம் லாரியின் சக்கரத்தின் அடியில் சக்கையாய் அடிபட்டு கிடந்தார். பக்கத்திலேயே நாயும்!

சடர்ன் பிரேக் போட்டு நடுநடுங்கியபடி இறங்கிய டிரைவர் அவரருகே வந்து பார்த்தான்.

குடல் நசுங்கி... அந்த கணமே உயிர் விட்டிருந்தார் ஈஸ்வரன்.

பயந்துப்போன டிரைவர் அருகே கிடந்த பையை எடுத்து பார்த்தான். உள்ளே கட்டு கட்டாய் பணம்!

சடுதியில் அந்த ஐடியா தோன்ற... சுற்றுமுற்றும் பார்த்தான். யாருமில்லை. அந்த பணத்தோடு எழுந்து விரைந்து ஓடி மறைந்தான்.



ஈஸ்வரன் அனாதையாய் கிடந்தார்.

அவரை நசுக்கியிருந்த லாரியின் நெற்றியில் 'சவுந்தர்யா' என்று எழுதியிருந்தது.



9

"அண்ணா...!" மெல்ல தயங்கியபடி அழைத்தாள் சவுந்தர்யா.

"என்ன?" குரலில் எரிச்சலா, கோபமா அல்லது அலுவலகம் புறப்படும் டென்சனோ தெரியவில்லை. இயல்பாயில்லை.

"அண்ணா... இன்னைக்கு ஒருநாள் ஆபீஸுக்கு லீவு போட்டீங்கன்னா..."

"என்னது லீவா? எதுக்கு?"

"இன்னைக்கு நம்ம கேஸ் கோர்ட்டுக்கு வருது... போகணும்..."

"நம்ம கேஸா? உன் கேஸ்னு சொல்லு. அதுக்கென்ன போயிட்டு வாயேன்!"

"ஏற்கனவே நாலுமுறை வாய்தா வாங்கியாச்சு. இப்பவும் போகலேன்னா... பயமாயிருக்குண்ணா... இதுவரைக்கும் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட்டெல்லாம் சினிமாவுல மட்டும் தான் பார்த்திருக்கேன். அங்கே அவ்வளவு பேர் முன்னால போக பயமா இருக்கு அண்ணா!" சவுந்தர்யாவின் குரல் நெகிழ்ந்தது.

"அதுக்கு நானென்ன பண்ண முடியும்? நான் மட்டுமென்ன கோர்ட், அது இதுன்னு போயிருக்கேனா? கவுரவமானவங்க

போற இடமா அது? ஆளைவிடு. நான் பாஸ்போர்ட் ஆபீஸ் வரைக்கும் போயிட்டு வரணும். எனக்கு தலைக்கு மேல் வேலை இருக்கு...''

''அண்ணா... இன்னைக்கு ஒரு நாள் மட்டும் பிளீஸ்ண்ணா...'' கண்கள் துளிர்த்தது.

''நீ பெரிய தைரியசாலின்னு தானே உங்கப்பா பெரிய வண்டியா வாங்கி கொடுத்துட்டு போயிருக்கார். இவ்வளவு கோழையா இருந்தா... அவரோட ஆத்மா சாந்தியடை யாதும்மா... போ... உன் பிரச்சினை நீதான் அதை ஃபேஸ் பண்ணணும். எவ்வளவு நாளைக்கு நாங்க உன்னோட இருக்கப் போறோம். ஒரு மாசமோ, அதிகபட்சம் ரெண்டு மாசமோ. அவ்வளவு நாள்தான் இருக்கப் போறோம். அதுக்கப்புறம் நீ தனியாதானே டீல் பண்ணியாகணும்!''

சவுந்தர்யாவுக்கு கரகரவென கண்ணீர் வழிந்தது. பிரச்சினைக்கு மேல் பிரச்சினையாக உருவெடுத்து வந்த அழுத்தியதில் மூச்சுவிடக்கூட முடியாமல் திணறிப் போனாள்.

லாரியில் அடிபட்டு ஈஸ்வரன் இறந்ததும் அந்த செய்தி அருணுக்கு போகவும் உச்ச அதிர்ச்சியில் இடிந்து போனான். வினிதா மயங்கிச் சரிந்தாள்.

சக்கரத்தடியில் நாயோடு தன்னை பெற்று வளர்த்த தந்தை ரத்த சகதியாய் சிதைந்து போயிருந்ததைக் கண்டு நெஞ்சு குமுறினான். அவர் கொண்டுவந்த எழுபத்தைந்தாயிரமும் காணவில்லை, டிரைவரும் காணவில்லை. துவண்டு போனான் அருண்.



ஆகவேண்டிய காரியங்களைச் செய்து முடித்தான். ஈஸ்வரனின் அஸ்தியை ஆற்றில் கரைத்த கையோடு வாரி உரிமையாளர் மீது கேஸ் போட்டான்.

அப்பா உயிருக்கு நஷ்டாடு, மற்றும் டிரைவர் அபேஸ் செய்து ஓடிப்போன பணம் மொத்தத்திற்கும் நான்கு லட்சம் கேட்டு கேஸ் போட்டான்.

சவுந்தர்யா பயந்து போனாள்.

நான்கு லட்சமா? அவ்வளவு பணத்திற்கு எங்கே போவது?

சிட்டியிலேயே பிரபலமான பிரபாகரன் வக்கீலை பிடித்தாள். நிச்சயம் கேஸ் ஜெயிக்காது என்று அவருக்குத் தெரியும். டிரைவர் காணாமல் போனது ஒன்றே போதுமே! தவறு யார் மீது என்று! ஆனாலும் பண ஆசை யாரை விட்டது. கேஸ் இயரிங் வரும்போதெல்லாம் வாய்தா வாங்கினார்.

முத்துச்சிப்பியைக் கூட கத்தியில்லாமல் திறந்து விடலாம். ஆனால் வக்கீலின் வாயை பணமின்றி திறக்க முடியுமா என்ன?

அவருக்கு தரவேண்டிய பீஸிற்காக சவுந்தர்யாவின் நகைகள் ஒவ்வொன்றாய் பணமாக உருமாறின.

எத்தனை நாள்தான் வாய்தா வாங்கிக் கொண்டிருக்க முடியும்? அதே சமயம் கேஸை எப்படி எதிர்கொள்வது? பணம் பாட்டிற்கு தண்ணீராய் கரைந்துக் கொண்டிருக்கிறது. எதிர்கட்சிக்காரனோ நான்கு லட்சம் நஷ்டாடு கேட்கிறான். எப்படித் தரமுடியும்? இருப்பதோ லாரி மட்டும்தான். அதை இப்போது விற்றால் ஒன்னரை லட்சம் வருவதே அதிகம். அப்படியே வந்தால்கூட அதை எதிர்பார்ட்டிக்கு தரமுடியாது. கொடுத்துவிட்டால் நடுத்தெருவில்தான் நிற்க முடியும்.

அண்ணன் மனம் ... முடியும் ...
அவனுக்கு இதயமே இல்லை எனும்போது அங்கு ...
எதிர்பார்க்க முடியாது. பேசாமல் சுப்ரஜா அண்ணனிடம் ...
பைத்தியக்கார அண்ணனை மணந்துக் கொண்டு ...
பிரச்சினையை தீர்க்கலாமா?'

நினைத்தபோதே இதயம் வலித்தது. அந்த மாப்பிள்ளை வேண்டாமென்று அப்பா மல்லுக்கட்டி சண்டை போ... நினைவிற்கு வந்தது. கூடவே அருணின் முகம் நினை... எழும்பியது.

'அவ்வளவுதானா? எனக்கு கொடுத்து வை... அவ்வளவு தானா? அப்பா இறந்தபிறகு அந்த தரகரும் இ... பக்கம் எட்டிப் பார்ப்பதில்லை.

நினைப்பதெல்லாம், எதிர்பார்ப்பதெல்லாம் நட... விட்டால் கடவுளுக்கு மரியாதை ஏது? கஷ்டத்தில்தா... மனிதன் கடவுளை நினைக்கிறான். அதனால்தான் எப்போ... தன்னை இவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டுமெ... துன்பங்களை வாரியிறைக்கிறானோ?

சவுந்தர்யா பெருமூச்சு விட்டாள்.

''அண்ணா... இன்னைக்கு ஒருநாள்மட்டும் கூடவந்... எனக்கு தைரியமாயிருக்கும்ண்ணா... எதெதையோ ம... வைச்சுக்கிட்டு என்னை பழிவாங்காதீங்கண்ணா!''

''பார்த்தீங்களா உங்க தங்கச்சி பேசற பேச்சை? நீ... பழிவாங்கறீங்களாம். இந்த பழி மட்டும்தான் சுமத்த... உங்கப்பா! அதை நீ சொல்லி சந்தோஷப்படுத்திட்டே! வாரி... வாங்கும்போது, நீயும் உங்கப்பாவும் கமுக்கமா இ...



காரியத்தை முடிச்சீங்க இல்லே! வாரிசை மீறவச்சு விட்ட பணம் ஆயிரம் ஆயிரமா வந்ததே... அப்ப சூச்ச விட்டீங்களா? சந்தோஷத்தை மட்டும் நீங்க அனுபவிக்கணும். கஷ்டம்னா... நாங்க கூட வரணுமா? இதோ பாருமா... தனசேகரோட மகன்ங்கறதால உங்க அண்ணனுக்கு யாரும் மரியாதை தரலே! எங்கப்பா பொன்னுரங்கத்தோட மருமகன்றதாலதான் அவருக்கு கவுரவம். ஏற்கனவே வாரி, ஆக்ஸிடன்ட், கோர்ட், கேஸ்னு வெளியில ஒருமாதிரி பேசிக்கறாங்க. இது போதாதுன்னு என் புருஷனை கோர்ட்டுக்கு கூப்பிட்டு இருக்கிற கொஞ்ச நஞ்ச கவுரவத்தையும் காத்துல பறக்கவிட ஆசைப்படறியா? இதை நான் அனுமதிக்க மாட்டேன். நீங்க என்ன பராக்கு பார்த்துக்கிட்டு நிக்கறீங்க? கிளம்புங்க நேரமாகுது!'' நீளமாய் பேசி முடித்தாள் சுப்ரஜா.

அவமானத்தில் சிறுத்துப் போய் தலைகவிழ்ந்து கண்ணீர் உகுத்தாள் சவுந்தர்யா.

ராஜா சுப்ரஜாவின் சொல்லிற்கு கட்டுப்பட்டு வெளியேறினான்.

**வீ**ட்டை விற்று முழுப் பணமும் வாங்கிவிட்டான் ராஜா. அவர்கள் அமெரிக்காச் செல்ல இன்னும் நாலைந்து நாட்களே இருந்தன.

சவுந்தர்யாவுக்கு தண்ணீர் கூட இறங்கவில்லை. இனி எங்கே எப்படி இருக்கப் போகிறோம்? எதுவுமே பிடிபடவில்லை. தங்கையைப் பற்றி ராஜாவும் யோசித்துப் பார்க்கவில்லை. ஆனால், உடனே அவளை நடுத்தெருவில் நிறுத்தாதபடி ஒரு காரியம் செய்திருந்தான். வீட்டை

வித்யாவிடம் தங்கைக்காக நான்கு மாதம் அவகாசம் கேட்டிருந்தான். அதுவரை அவன் அந்த வீட்டில் இருக்கலாம்.

பாசம் கண்ண பார்த்துதான் வரும். அதை நன்றாக புரிந்து கொண்டிருந்தாள் சவுந்தர்யா.

இவ்வளவு துயரத்திலும் தனக்கு தற்கொலை எண்ணமே எழவில்லையே... எப்படி? என்று ஆச்சரியப்பட்டாள்.

இனியொரு வாழ்க்கை தனக்கில்லை என்றானபின், யாருக்குமே உதிக்கும் அந்த எண்ணம் ஏன் உதிக்கவில்லை? அப்படியென்றால் நான் கோழையில்லையா? எல்லாவற்றையும் எதிர்நோக்கும் தைரியம் இருக்கிறதா? சவுந்தர்யாவுக்கு தன்னைப் பற்றியே முழுதாக கணித்துக் கொள்ள முடியவில்லை.

அன்று...!

அமெரிக்கா புறப்படும் நாள்!

ராஜாவும் சுப்ராஜாவும் பரபரப்பாக காணப்பட்டனர். வீடு நிறைய ராஜாவின் சில நண்பர்களும், சுப்ராஜாவின் உறவினர்களுமாக சூழ்ந்திருந்தனர்.

சவுந்தர்யா பொங்கிய கண்ணீரை மறைக்க சிரமப்பட்டாள்.

இந்த உலகில் இப்போது உள்ள ஒரே சொந்தமும் இன்னும் சிறிது நேரத்தில் கடல் தாண்டி கடந்து போகப் போகிறது. அதன்பின் அவள் யாருமற்ற அனாதையாகி விடப் போகிறாள்.

"இந்தாம்மா... இதைக் கொண்டு போய் கார் டிக்கியிலே வைச்சுட்டு வா!" சுப்ராஜாவின் அம்மா சவுந்தர்யாவை தொட்டு கூப்பிட்டாள்.



நன்றாக பேக் செய்யப்பட்ட அட்டைப்பெட்டியில் ஊறுகாய், பொடி வகையறாக்கள் அடங்கியது.

சவுந்தர்யா அதை எடுத்துச் சென்று டிக்கியில் வைத்தாள்.

சூட்கேஸ் லெதர்பேக் என்று ஒவ்வொன்றாய் கொடுத்தனுப்பினர். அத்தனையும் சலிக்காமல் கொண்டு போய் காரில் வைத்தாள்.

நேரம் நெருங்க, நெருங்க சுப்ராஜா பிரிவு தாங்க முடியாமல் அவள் தாயாரின் தோளில் சாய்ந்து அழுதாள்.

சவுந்தர்யாவுக்கு அண்ணனிடம் இரண்டு வார்த்தை பேச வேண்டும் போல் ஆர்வம் எழுந்தது. ஆனால், அவன் அந்தக் கூட்டத்தை விட்டு இப்படி அப்படி நகரவில்லை. அவர்களிடம் நெகிழ்ச்சியுடன் விடைபெற்றுக் கொண்டிருந்தான்.

"சரி... சரி... நேரமாச்சு... பிளைட்டை மிஸ் பண்ணிடாம நேரத்துக்கு போய் சேர வேண்டாமா கிளம்புங்க!" பொன்னுரங்கம் கூறினார்.

அங்கே சற்றுநேரம் இறுக்கமான மவுனம் நிலவியது.

"சுப்ராஜா... வாரத்திற்கொருமுறை போன் பண்ணுடி என் கண்ணு! தவறாம லெட்டர் போடு!" அம்மா கண்களை துடைத்தபடி சொன்னாள்.

"பேசறேம்மா! கண்டிப்பா லெட்டர் போடறேன்!"

"அத்தை உடம்பை பார்த்துக்குங்க! சுகர் அதிகமாயிருக்குன்னு டாக்டர் சொன்னதை நினைவுல வச்சுக்குங்க. மாமா உங்களுக்கு என்ன தேவைப்பட்டாலும் உடனே ஒரு போன் அடியுங்க... வாங்கி அனுப்பிடறேன்!" ராஜா கரிசனமாய் சொன்னான்.

"ஹி... ஹி... சரிங்க மாப்பிள்ளை!"

"அப்ப நாங்க புறப்படறோம்!"

அவர்கள் பின்னேயே அத்தனை பேரும் செல்ல, சவுந்... பின்தங்கி நின்றாள்.

காரில் ஏறப்போன ராஜா ஏதோ நினைத்தவ... பாக்கெட்டில் கையை விட்டபடி தங்கையிடம் வந்தான்.

"வரட்டுமா சவுந்தர்யா?"

"ம்..." அவளுக்குப் பேச்சு வரவில்லை. தலையை மட்... ஆட்டினாள். கண்கள் கண்ணீரில் தழும்பின.

"அப்பா உன்கூட இருக்கார்ன்ற தைரியத்துலதான் நா... அமெரிக்கா போக ஏற்பாடு செய்தோம். இப்ப உன்னை தனி... விட்டுட்டு போக மனசில்லேதான்! ஆனா, என்ன பண்... சவுந்தர்யா? சில விஷயங்கள் நம்மை மீறி நடந்திடுது. ஏ... உதவி தேவைப்பட்டாலும் லெட்டர் எழுது... ஓக்... வரட்டுமா? இந்தா இதை வச்சுக்க!" அவள் கையில் சில ரூப... நோட்டுக்களை வைத்து அழுத்திவிட்டு போனான்.

காரில் ஏறி அமர... புறப்பட்டது. அதன்பின் வந்திரு... கூட்டமும் கல்லெறிந்த காக்கா கூட்டமாய் காணாமல் போ... சவுந்தர்யா மட்டுமே எஞ்சியிருந்தாள்.

அழக்கூட முடியாத வேதனை நெஞ்சில் கனம... அடைத்துக் கொண்டிருந்தது. உள்ளங்கையை பிரித்... பார்த்தாள். இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டு!

விரக்தியாய் சிரித்தாள்! அண்ணன் தங்கை மே... கொண்டுள்ள பாசத்தின் விலை... இவ்வளவுதான்.



அதன்பின் வந்த நாட்களில் விரைவாக காரியத்தில் இறங்கினாள்.

எத்தனை நாள் இந்த வீட்டிலிருக்க முடியும்? விசாரித்து வேறு வீட்டோ, ஹாஸ்டலோ பார்க்க வேண்டும். கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்தியாக வேண்டும். உடனடியாக ஒரு வேலை தேடியாக வேண்டும். முக்கியமாய் இந்த லாரியை விற்று... கோர்ட் பிரச்சினையை தீர்த்துவிட வேண்டும். லாரி என்றைக்கு வாங்கினோமோ அன்றிலிருந்து பிரச்சினைதான். அந்த லாரியும் வேண்டாம், பணமும் வேண்டாம். போதும் தான்பட்ட வேதனை!

லாரியை அடிமாட்டு விலைக்கு கேட்டார்கள்.

அப்படி இப்படியென்று ஒரு லட்சத்து எழுபதாயிரத்துக்கு விலை போனது.

அப்பாடா... என்று நிம்மதியாய் மூச்சுவிட்ட போதுதான் அவன் வந்து நின்றான்.

அருண்!

அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

'இவன் எங்கே இங்கே? ஒருவேளை நாகர் அனுப்பி இருப்பாரோ?' கேள்வி எழ உள்ளே குப்பென்று பூ மலர்ந்தது.

அவனும் கூட அவளை அங்கு எதிர்பார்க்கவில்லை.

"வா...வாங்க!"

"இங்கே சவுந்தர்யாங்கறது..."

"நான்தான்... முதல்ல உள்ளே வாங்க!"

அந்தப் பெயருக்கு சொந்தக்காரி அவள்தான் என்றறிந்த... கொஞ்ச நஞ்சம் அவள் மீதிருந்த பற்றுதலும் விலகிப் போ... கடுகடுவென பார்த்தான்.

"உன்னே வந்து விருந்து சாப்பிட வரலே! என்னதா... நினைச்சிட்டிருக்கீங்க... உங்க மனசுல?"

அதிர்ந்து போனாள் சவுந்தர்யா.

"ஏ... என்ன சொல்றீங்க?"

"நீங்க பாட்டுக்கு கோர்ட்டுக்கு வராம வாய்தா வாங்கி... கேஸை இழுத்தடிச்சா என்ன அர்த்தம்? ஒரு அப்பாவி உயி... பலிவாங்கிட்டு இப்படி மகாராணி மாதிரி வீட்டுக்குள்ளே... இருந்துக்கிட்டு கஷ்டப்படுத்தறியே... நீயெல்லாம் ஒ... பொண்ணா?"

சவுந்தர்யாவுக்கு ஏதோ புரியத் தொடங்க... அசூ... நின்றிருந்தாள்.

"எங்களுக்கிருந்த ஒரே ஆதாரம் எங்கப்பாதான். எ... தங்கச்சி கல்யாணத்துக்காக கடன்பட்டு கொண்டு வ... பணத்தையும் டிரைவர் திருடிக்கிட்டு ஓடிட்டான். அவனே... கல்யாணம் நின்னுபோச்சு! நியாயமா எங்களுக்... சேரவேண்டிய பணத்தை கொடுத்திருந்தா... அவள் கழுத்... தாலி ஏறும். ஆனா, இப்போ... அவளோட வயித்தெரிச்... உங்களை சும்மாவிடாது."

சவுந்தர்யாவினால் தாங்க முடியவில்லை. அருண்... தந்தைதான் தன் லாரியில் அடிபட்டு இறந்தவர் என்ப... அவளுக்கு புது செய்தி. எங்கே... அவன் கோர்ட்டுக்... போனால்தானே? கேஸை இழுத்தடித்ததில் கோபப்பட்டு வ...



கத்துகிறான். நியாயமான கோபம்தான். ஆனால், அவன் வாயால் தன்னை தூற்றுவதை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. கத்தியால் இதயத்தைப் பிளப்பது போலிருந்தது.

'பாவம்... அவன் தன் தந்தையையும் பறிகொடுத்துவிட்டு, தங்கையின் வாழ்க்கையையும் சீர்படுத்த முடியாமல் தத்தளித்து கொண்டிருக்கிறான். அவனுக்கு எந்த வகையிலாவது உதவ வேண்டியது தன் கடமை!

"நீங்களும் ஒரு பொண்ணுதானே? இன்னொரு பொண்ணோட எதிர்காலத்தை கொஞ்சம் நினைச்சிப் பாருங்க! என்னால வக்கீலுக்கு பீஸை கொட்டிக் கொடுத்திட்டிருக்க முடியலை. தயவு செய்து கோர்ட்டுக்கு வாங்க பிளீஸ்...!"

கையெடுத்து கும்பிட்டவன் திரும்பி போக முற்பட்டான்.

"ஒரு நிமிஷம் பிளீஸ்..." சவுந்தர்யா தடுத்தாள்.

"என்ன?"

"இந்த கேஸை வாபஸ் வாங்கிடுங்க..."

"வாபஸா?"

"நாம சமாதானமா போயிடலாம். தவிர, நீங்க கேக்குற அளவுக்கு பணம் தர என்கிட்டே வசதியில்லே! என்னால ஒண்ணே முக்கால் லட்சத்தை தவிர அதுக்கு மேலே ஒத்தை ரூபாக்கூட தரமுடியாது!"

"என்ன பிச்சை போட நீங்களா? கூப்பிடுங்க உங்க வீட்டு பெரியவங்களை... நான் அவங்ககிட்டே பேசிக்கறேன்."

"நிலைமை புரியாம பேசறீங்க சார்! இப்ப சொன்னீங்களே... இன்னொரு பொண்ணோட எதிர்காலத்தை நினைச்சி

பாருங்கன்னு... அதை நினைச்சிப் பார்த்துதான் செய்[illegible] இதுக்கு மேலே என்னால எதையும் செய்ய முடியாது. [illegible] ஒரு பெண்தான். அதையும் நீங்க நினைச்சுப் பார்க்[illegible] கண்கள் கலங்கியது.

அந்த கண்ணீரும் பேச்சின் தடுமாற்றமும் அவ[illegible] என்னவோ செய்ய... தலையாட்டினான்.

"சரி... நான் கேஸை வாபஸ் வாங்கிடறேன். நீங்க எப்[illegible] பணம் தாறீங்க?" அப்படியும் கறாராய் பேசினான்.

"இன்னைக்கே... இப்பவே... வாங்க... வாசல்ல [illegible] தரக்கூடாது. அட்லீஸ்ட் கூடத்துக்காவது வரலாமில்லையா[illegible]

அருண் உள்ளே வந்தான்.

ஒரு தோல் பையில் பணத்தை பத்திரப்படுத்தி அவ[illegible] தந்தான்.

"சரியா இருக்கான்னு பார்த்துக்குங்க!"

"நான் உங்களை நம்பறேன்!"

அருண் அதற்குமேல் ஒரு வார்த்தை பேசாமல் வெளியே[illegible]னான். அவன் வரைக்கும் அவள் எதிரிதானே?



10

சடசடவென்று பெய்து பூமியை துளை[illegible] குமிழ் குமிழாய் பொங்கி உடைந்து போ[illegible] மழைநீரை ஜன்னல் வழியே ரசித்[illegible] கொண்டிருந்தாள் சவுந்தர்யா!

இடம் சென்னை.



ஜன்னலுக்கு சொந்தமான கட்டிடம் ஒரு லேடீஸ் ஹாஸ்டலின் எக்மோரில் இருந்தது.

சவுந்தர்யா சென்னை வந்து இரண்டு மாதமாகிவிட்டது.

திருச்சியில் எந்தவித ஆதரவும், பிடிமானமும் இன்றி இருப்பது அவளுக்கே அபத்தமாயிருந்தது. இருக்க இடத்திற்கும், வயிற்றுப் பாட்டிற்கும் உழைத்தாக வேண்டிய கட்டாயம் கல்லூரிப் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டபின் அந்த கல்வி தகுதிக்கு எந்த வேலையைத் தேடுவது? அப்பாவுக்கு அவளை வேலைக்கு அனுப்புவதில் துளியும் விருப்பமில்லாததால்தான் கம்ப்யூட்டர் பயிலவும், அட்லீஸ்ட் டைப்பிங் கிளாஸ் போகவும் கூட தடைவிதித்தார்.

'ஆனால், இன்று எல்லாமே தலைகீழாய் மாறிவிட்டதப்பா! நான் அவசியம் வேலைக்குபோயாகணும்! என் எதிர்கால நலனுக்கென வாங்கிய லாரி... எதிர்காலமே இல்லாமல் ஆக்கிவிட்டது. ஆசை ஆசையாய் உங்கள் மகளுக்கு பார்த்தீர்களே ஒரு மாப்பிள்ளை... அவர் வாயால் என்னை சாபம் விட்டு பேசக் கூடாததெல்லாம் பேசிவிட்டுப் போய்விட்டார். கடைசியில் உங்கள் ஆசை எதுவுமே நிறைவேறவில்லையேப்பா!'

'நான் என்ன பாவம்பா பண்ணினேன்? அம்மாவை இழந்து, உங்களையும் பறிகொடுத்து, அண்ணனையும் உயிரோடு பிரிந்து, நான் நேசித்த அருணையும் பிரிந்து... ஏனப்பா இப்படியெல்லாம் நடக்கிறது? உங்கள் மகளை ஊரார் கண்பட்டு விடக்கூடாதே என்று வீட்டுக்குள்ளேயே வைத்து கொண்டாடினீர்கள். ஆனால், அப்பா... இப்ப நான் என்ன வேலை செய்கிறேன் தெரியுமா? வீதிவீதியா அலையற

வேலைப்பா! எனக்கு என் நிலைமையை நினைக்க துளி வருத்தமில்லே! உங்களை நினைச்சாதான் அழுகையா வரு உங்க பொண்ணு படற அவஸ்தையை பார்த்து உ ஆத்மாவும் அழுவுமேப்பா! அதை நினைச்சிதான் கலங் போகிறேன்...!'

"என்ன சவுந்தர்யா... அழறியா என்ன?'' கோமதி அவ தோளில் கைவைத்து அசைக்கவும் யதார்த்த சூழ்நிலை மீண்டு வந்தாள்.

"இ...இல்லேயே... மழை சாரல் முகத்துல பட்டுச்சு அதான்!'' சமாளித்தபடி கன்னத்தில் வழிந்த கண்ணீ துடைத்துக் கொண்டாள்.

"உன்னைவிட நாலு வயசு மூத்தவள் நான்! எத்தனையே துன்ப துயரங்களை அனுபவிச்சவள்... இதே மழைய ஜன்னல்ல நின்னு ரசிச்சிருக்கேன்... எனக்கும் முகத்து உன்னைப் போல சாரல் பட்டிருக்கு! உன் வயசை கடந் வந்திருக்கேன். பரவாயில்லை சவுந்தர்யா! சந்தோஷம் மட்டுமில்லே. துக்கத்தையும் அனுபவிக்கிறதிலும் ஒரு சுக இருக்கத்தான் செய்கிறது. உன்னைப் பார்க்கும் போதெல்லா எனக்கு கழுதையோட ஞாபகம்தான் வருது!'' கோம சிரித்தபடி சொல்லவும் திகைத்துப் போனாள் சவுந்தர்யா.

"கழுதையா?''

"ம்... கழுதையோட பண்பு பொறுமைன்னு சொல்வாங் முதுகு கொள்ளாத சுமையிருந்தாலும் அது வாய் திறந் பேசாது... இப்ப சொல்லு... நான் சொன்னது சரிதானே?''

பதில் சொல்லாமல் அவளின் சாதுர்ய பேச்சை ரசித் சிரித்தாள்.



"சரி... நேரமாகுதே... குளிச்சிட்டு கிளம்பு!''

"மழை வேற கொட்டுதே! தெரு தெருவா எப்படி அலையப் போறோமோ?''

"குடைன்னு ஒன்னை எதுக்கு கண்டுபிடிச்சிருக்கான்? இந்த மழைக்கெல்லாம் பயந்தா எதுவும் நடக்காது. புயலே அடிச்சாலும் வேலை பார்த்தாகணும்!'' என்றாள் கோமதி.

"சவுந்தர்யா குளிப்பதற்காக துணிகளை எடுத்துக் கொண்டு நடந்தாள்.

போகும் அவளை பரிதாபமாய் பார்த்தாள் கோமதி.

'பாவம்! எப்படி வளர்ந்த பொண்ணு... எப்படியோ இருக்க வேண்டியவள்... இப்படி இங்கே வந்து அல்லாடுது!' பெருமூச்சு விட்டாள்.

கோமதி சவுந்தர்யாவின் தூரத்து உறவுக்கார பெண்தான்! எவனையோ நம்பி ஊரைவிட்டு ஓடி, அவன் ஆசைதீர அனுபவித்து ஏமாற்றி ஓடிப்போக, திரும்பவும் தாய் வீட்டிற்கு வந்தவளை வாசலோடு நிறுத்தி விரட்டியடித்தனர். தன் விதியை நொந்தபடி சென்னைக்கு வந்து வேலை தேடி கடைசியில் ஐ.எம்.ஆர்.பி. என்ற மார்க்கெட்டிங் நிறுவனத்தில் வேலை கிடைத்தது. சேரில் பேனுக்கு கீழ் அமர்ந்து செய்யும் வேலையல்ல... தெருத்தெருவாய் பொருட்களின் தரம் பற்றிய மக்களின் கருத்து, அவர்கள் அதிகமாய் உபயோகிக்கும் டூத்பேஸ்ட், முகபவுடர், டி.வி. மட்டுமல்ல... பிடித்த நடிகர், பிடித்த பாட்டு இவைப் பற்றியெல்லாம் கூட கருத்தாய்வு நடத்தித் தரவேண்டும். விரட்டியடித்த பெற்றோர்கள் முன் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வைராக்கியம் மட்டுமல்ல, வயிற்று பசியும் அவளை தீவிரமாய் அந்தப் பணியில்

ஏற்றிட்டு வேட்டி, சட்டைகள், மரப்பெட்டி... அந்தக் காலத்து [illegible] இருபது நாளைக்கு, ஒரு பாலிதீன் கவரில்... [illegible] இருக்கிறது?

வியப்புடன் அதை பிரித்தான்.

ஒரு பெண்ணின் ஜாதகம்.

ஓ! அப்பா தனக்காக ஒரு வரன் பார்த்து நிச்சயித்து வைத்தது. படித்தான்.

பெயர் வசுந்தரா, வயது 19, அஸ்வினி நட்சத்திரம், மேஷ ராசி... படித்துக் கொண்டே வந்தவன் பின்புறம் திருப்பிப் பார்த்தான். போட்டோ காகிதத்தோடு பின் செய்யப்பட்டிருந்தது.

அந்த போட்டோவைப் பார்த்ததும்... விழிகள் தெறித்து விழுந்து விடுமோ என்பது போல் அதிர்ந்தான்.

"இவளா? இவளையா அப்பா எனக்கு பெண் பார்த்தார்?"

ஆச்சரியமும், அதிர்ச்சியும் போட்டி போட, அந்த போட்டோவையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் பஜார் வீதியில் அருண் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்து கொண்டிருந்தார் குமாரசுவாமி.

அவரைப் பார்த்துப் பேச வேண்டும் என்று சில நாட்களாகவே நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் வீட்டு விலாசம் தெரியாததால் முடியாமல் போனது.

அவரை நோக்கி விரைந்து நெருங்கினான்.



"ஸார்... வணக்கம்!"

"அடடே... அருண் தம்பி எங்கே இந்தப் பக்கம் [illegible] இருக்கீங்களே?" ஆச்சரியமாய் விசாரித்தார்.

"நல்லவருக்கேன் ஸார் உங்களைப் பார்த்து... நிறையப் பேசணும். பக்கத்துல இருக்கிற ஹோட்டலுக்குப் போயி ஒரு காபி சாப்பிட்டுக்கிட்டே பேசலாமா?"

"தாராளமா பேச அப்பாவோட கூட [illegible]... இப்ப நீயே பேச கூப்பிட்டு [illegible]!"

ஹோட்டலுக்குள் நுழைந்தனர்.

"உங்கப்பாவுக்கு இப்படியொரு துர்மரணம் நடக்குமுன்னு நான் நினைக்கக் கூடப் பார்க்கலே அருண்!"

"அப்பாவோட இழப்பு... எதிர்பாராத ஒன்னுதான்... ஆனா, அவர் ஆசைப்பட்டபடி [illegible] இடத்துல சம்பந்தம் பேசி முடிக்கிறேன். நீங்க [illegible] வரன்தான் [illegible] சொல்லிட்டாங்க. இன்னும் [illegible]"

"ரொம்ப சந்தோஷம்ப்பா! உங்கப்பாவோட ஆத்மா நிச்சயம் சந்தோஷப்படும்!"

"இது மட்டுமில்லே ஸார் எங்கப்பா ஆத்மா சாந்தியடைய [illegible] இன்னொரு சம்பவமும் நடக்கணும். [illegible] பண்ணிக்கப் போறேன் ஸார்"

"பேஷ்... பேஷ்! கேக்கவே சந்தோஷமா இருக்கு. சொல்லிட்டே... சொல்லிட்டியே... ஆமா ஒரு வார்த்தை கூட [illegible] எந்த பொண்ணை வரன் கொண்டு வந்திருக்கே பா?"

"எதுக்கு சார்? அதான் ஏற்கனவே ஒரு வரன் வெ... வந்தீங்களே... அதையே முடிச்சிடலாம்!"

"நீ யாரை சொல்றே அருண்?"

"பேரு சவுந்தர்யா... இதே ஊருதான்! எனக்கு இந்த... சம்மதம் சார்! அவங்க வீட்டு பெரியவங்களை பார்த்து... ஏற்பாடு செஞ்சீங்கன்னா நல்லது!"

"அருண்... அந்த வரன் வேண்டாம். உனக்கு நான் வே...

"இல்ல சார்! எனக்கு இந்த பொண்ணுதான் வேணும்!"

குமாரசுவாமி பெருமூச்சு விட்டார்.

"அது முடியாத காரியம் அருண்! இப்ப அந்த பொண்... இந்த ஊர்லேயே இல்லே..."

"என்ன சொல்றீங்க?" புருவம் உயர்த்தினான்.

"ஆமாம்பா! அந்த பொண்ணோட அப்பா... இற... போய்ட்டார் - அவளை பாதுகாக்க வேண்டிய அண்ணன்... அமெரிக்கா போய் செட்டிலாயிட்டான். பாவம் இ... பொண்ணு! தனிமரமா நின்னு போச்சி! போதாதது... அண்ணன்காரன் வீட்டையும் வித்துட்டான். இரு... இடமில்லே! இருந்த ஒரே சொத்தான லாரியை வி... கடனையெல்லாம் அடைச்சிட்டு ஊரைவிட்டே போய்... அந்த பொண்ணு! பாவம்... அது தலையில எழுதினது அ... யாரால மாத்த முடியும்?"

இடிந்து போனான் அருண்!

'சே! அவள் இவ்வளவு துயரங்களையும் அனுபவித்... போதாதென்று நான் வேறு எப்படியெல்லாம் பேசிவே...





லாரியை விற்ற பணம் அத்தனையும் நானல்லவா சட்டக்காரன் போல் வசூலித்து வந்தேன்? எவ்வளவு கொடுமைக்காரன் நான்?'

"அந்த பொண்ணு கூட இப்ப கல்யாணமே வேண்டாம்னு சொல்லிக்கிட்டிருந்தா... ஆனா உன் போட்டோவை காட்டினதும் உடனே சரின்னுட்டா..."

"நிஜமாவா? என் போட்டோவை அவள் பார்த்திருக்காளா?"

"நிஜம்தான் அருண்!"

'ஓ! அதனால்தான் அத்தனை முறை கேவலமாக இருத்திருந்தவள்... என்னைப் பார்த்தும் சமாதானம் செய்து... பணத்தை கொடுத்து... சே... எனக்கு எதுவும் தெரியாமல் போய் விட்டதே! மனதில் நானிருந்திருக்கிறேன். அதனால்தான் நான் அவ்வளவு பேசியும் தலைகுனிந்து தாங்கிக் கொண்டிருக்கிறாள். பாவம்... தனியே கஷ்டப்பட்டவளை, நான் வேறு பணத்தைப் பிடுங்கி ஊரைவிட்டே ஓடச் செய்திருக்கிறேன்! சவுந்தர்யா... என்னை மன்னித்துவிடு. என் அப்பாவை பறிகொடுத்த வேதனையில் உன்னை காயப்படுத்திவிட்டேன். லாரி டிரைவர் செய்த தவறுக்கு உன்னை தண்டித்துவிட்டேன்.

அந்தப் பணம் உன்னுடையது. உன்னிடத்தில் இருப்பதுதான் சரி! நீ எங்கிருக்கிறாய் சவுந்தர்யா? நீ எனக்கு வேண்டும். எங்கப்பா எனக்காக தேடித்தந்த செல்வம் நீ! என் வீட்டு மகாலட்சுமி நீதான்! பூஜைக்கு வந்த மலர் நீ! உன்னை இனியும் வாட விடமாட்டேன் சவுந்தர்யா! உன்னை எப்பாடுபட்டாவது தேடிக் கண்டுபிடிப்பேன்! எனக்கு நீ வேண்டும்... கண்டிப்பாக வேண்டும்!"

"[illegible] அருண்? அடுத்த வாரம் நான் [illegible]
[illegible] கொண்டு வர்றேன். உனக்கு [illegible]"

"[illegible] முடிவு பண்ணிட்டேன் [illegible]
[illegible]" அருண் தீர்மானமாய் சொன்னான்.



11

முழுதாய் ஒன்னரை [illegible] ஓடிப்போனது. சவுந்தர்யாவைப் பற்றி [illegible] தகவலும் இல்லை. நாளாக ஆக... [illegible] பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் [illegible] அதிகமாகிக் கொண்டே சென்றது. ஏதோ [illegible] நப்பாசையில் திருச்சியையும் சல்லடை போட்டுத் தேடிவிட்டான்! பலன்தான் இல்லை.

வினிதாவையும் திருமணம் முடித்து அனுப்பி[illegible] தனிமை அவனை வாட்டியது. எந்நேரமும் சவுந்தர்யா[illegible] நினைவாகவே இருந்தான். கடையையும் சரிவர பா[illegible] முடியாமல் கவனம் சிதறியது. ஒருநாள் நாகராஜன் அவ[illegible] பார்க்க வந்தான். வந்தவன் அருணின் தோற்றம் க[illegible] திடுக்கிட்டுப் போனான்.

"அருண்... சபரிமலைக்கு மாலைப் போட்டிருக்[illegible] என்ன?"

"சேச்சே... ஏன் அப்படி கேக்கறே?"

"ஒருவேளை திருச்சியில பிளேடுக்கு ரொம்ப டிமாண்[illegible]"

"இப்படியெல்லாம் பிளேடு போடாதே! ஏற்கனவே [illegible] ரொம்ப நொந்து போயிருக்கேன்!" சலித்துக் கொண்டான்.



"அப்ப ஏன் இந்த தாடி?"

"ம்... விடுடா! பிஸினஸ் எப்படி இருக்கு?"

"அது கிடக்கட்டும். மொதல்ல இதுக்கு பதில்சொல்லு! என்னாச்சு? இன்னமும் அப்பாவை நினைச்சிட்டிருக்கியா?" அக்கறையாய் கேட்டான் நாகராஜன்.

நீண்டதொரு பெருமூச்சை வெளியிட்ட அருண் சவுந்தர்யா பற்றி சொல்லி முடித்தான்.

"என்னாலதான் அவள் ஊரைவிட்டே போயிட்டா! இப்ப அவ எங்கேயிருக்காளோ, என்ன பண்றாளோ? நினைச்சாலே பயமா இருக்கு!"

"ஒண்ணும் ஆகியிருக்காது... சவுந்தர்யா சவுக்கியமா இருப்பா. கவலைப்படாதே!"

"இல்லே நாகராஜன்! வினிதாவுக்கு ஒரு பொறுப்புள்ள அண்ணனா நானிருந்தேன். அவளுக்கு அப்படிப்பட்ட அண்ணன் இல்லே! பாவம்... தனியா எத்தனையோ பிரச்சினைகளை சமந்திருக்கா! நான் எதுவும் தெரியாம மோசமா பேசி அவளை காயப்படுத்திட்டேன்."

"இதப்பாரு அருண்! நீ தெரிஞ்சு எதையும் செய்யாதப்ப ஏன் வருத்தப்படறே?"

"தெரியாம செஞ்சாலும்... சவுந்தர்யா மனசை காயப்படுத்திட்டேனே... ஐயோ சவுந்தர்யா!" டேபிள் மீது கவிழ்ந்து முதுகு குலுங்கினான் அருண்.

பதறிய நாகராஜன் அவன் முகத்தை நிமிர்த்தினான்.

"டேய் முட்டாள்! இப்ப எதுக்கு இப்படி அழறே? ...
இரு! சவுந்தர்யாவோட போட்டோ இருக்கு இல்லே... ...
பத்திரிகை, டி.வி.யிலே ஒரு விளம்பரம் கொடுத்து...
உன்னைத் தேடி வரமாட்டாளா?"

"அதெல்லாம் ரிஸ்க்! ஒருவேளை அவளுக்கு கல்யா...
ஆகியிருந்தா? பிரச்சினையாயிடும். ஏன் நாகரா...
அவளுக்கு கல்யாணம் ஆகியிருக்கும்னு நினைக்கிறி...
பரிதாபமாய் கேட்டான் அருண்.

நாகராஜன் பலமாய் சிரித்தான்.

"டேய் ராஸ்கல்! அவள் உனக்குன்னு பிறந்தி... எவனாவது கிட்டே நெருங்க முடியுமா? கமான் மாப்பிள்... ரிலாக்ஸ்!இந்த மேட்டரை கொஞ்சம் ஒத்திப்போடு! இ... திருச்சிக்கு ஏன் வந்தேன் தெரியுமா? சென்னையிலே ... எஸ்டேட் பிஸினஸ் பண்ற ஐடியா இருக்கு! நீயும் நானும்... சேர்ந்து செய்யப் போறோம். ஸோ... இங்கே உள்ள ... காயலான் கடையை இழுத்து மூடிட்டு உடனே என்னோ... கிளம்பறே! சென்னைக்கு போறோம். அலைஞ்சு திரிஞ்சு... ஆபீஸை வாடகைக்கு எடுக்கிறோம். நீதான் பொறுப்... ஆபீஸை பார்த்துக்கனும். ஒரு மாசம் சென்னையில்... எல்லா வேலையும் முடிச்சபிறகு, நீதிருச்சிக்கு மொத்... டாட்டா காட்டிட்டு அங்கேயே செட்டிலாய்டறே! நானும்... பாண்ட் கம்பெனியை சென்னைக்கு மாத்திக்கி... வந்திடறேன்! அப்புறம்..."

"நிறுத்துப்பா! நானே சவுந்தர்யா கிடைக்கலே... வருத்தத்துல இருக்கேன். இந்த நேரத்துல பிஸின... பார்த்துக்கன்னு சொல்றியே!"



"அதையே நினைச்சிட்டிருக்காம... மனசை உருப்படியான வழியிலே திசை திருப்பு! கிளம்பு... பெட்டியை எடு" நாகராஜனே அவன் பெட்டியை எடுத்து உடைகளை அடுக்கி வைக்க... செய்வதறியாது நின்றிருந்தான் அருண்!

அருண் அரை மனதோடுதான் சென்னைக்கு புறப்பட்டு வந்தான். சவுந்தர்யாவின் நினைவுகள் அவனை அரித்துக் கொண்டிருந்ததால்... எதிலும் ஈடுபாடு கொள்ள முடியவில்லை. அருகில் இருக்கும்வரை எந்த ஒன்றின் மீதும் அதன் அருமையோ, அவசியமோ தெரிவதில்லை. கைவிட்டுப் போனபின் தானே, அத்தியாவசியம் புரிகிறது?

அருணுக்கே ஆச்சரியமாக இருந்தது.

சவுந்தர்யாவை முதன்முதலாக சந்தித்ததே ஆரோக்கியமற்ற சூழலில்! சண்டையில்! அப்போதிருந்து அவள் மீது ஒரு கோபம் அடர்த்தியாய் நெஞ்சில் சூழ்ந்து கொண்டது. அதற்கடுத்து சந்தித்ததும் ஒரு மோசமான சூழ்நிலையில்தான். அப்போதும் சண்டைதான் போட்டான். இதுவரை ஒரு வார்த்தை அன்பாய் பேசி இருப்பானா? அப்படியிருக்க... அவள் மீது பொங்கியெழுந்து தன்னையே மூழ்கடித்துக் கொண்டிருக்கும் இந்த காதல் எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? என்னையே ஏமாற்றி... இதுநாள் வரை எனக்குள்ளேயே மறைந்திருந்ததா? அவள் எதிரில் இருந்தபோது வெளிப்படாமல், இப்போது தோன்றி... உயிர் வரை வலி ஏற்படுத்த வேண்டுமா? என்ன விநோதமான உணர்வு இது?

"என்ன அருண்...இந்த இடம் பிடிச்சிருக்கா?" அருகே வந்துவிட்டான் நாகராஜன்.

"ஆக... என்ன... என்ன கேட்டே?"

"ஓஹோ... ஐயா... வேற எங்கேயோ போயிட்ட
போல..." கேலியாய் சிரித்தான்.

"என்ன... கிண்டலா இருக்கா?"

"பைத்தியக்காரத்தனமா இருக்கு... முழுக்க மு
மாறிட்டே அருண்! இயல்பா இரு அருண்! இப்படியே வெ
பார்த்துக்கிட்டு இருக்கிறதுல என்ன லாபம்? உ
உரிமையான பொருள் உனக்குத்தான் வந்துசேரும்! க
படைக்கும்போதே... ஒவ்வொரு அரிசியிலேயும் பேர் எ
வச்சாராம்! அதைதான் சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறோ
அதுதான் விதி! புரியுதா மொதல்ல... இந்த தா
வழிச்செறிஞ்சுட்டு வா! இந்த மெட்ராஸ்ல கொஞ்சம் தாடி
வச்சிக்கிட்டு... எதையோ சிந்திச்சபடி ரோட்ல நட
போனாலே... பொம்பளைங்க சாமியார்னு நினை
போசக்குனு கால்ல விழுந்துடுவாங்க! உன்னைப் பார்த்தா
அப்படித்தான் இருக்கு. அப்புறம் ரியல் எஸ்டேட் பிசின
விட்டுட்டு ஆசிரமந்தான் நடத்தணும். இதைவிட அ
பணத்தை அள்ளலாம்ங்கறது வேற விஷயம். இருந்தா
வேண்டாமே!"

அருண் வாய்விட்டுச் சிரித்தான்.

"அப்பாடா... சிரிச்சிட்டியா? ஒக்கே... முதல்லே ஷே
பண்ணிட்டு. குளிச்சிட்டு வா! சித்ரா டிபன் ரெடி பண்ணி

சித்ரா, நாகராஜனின் தங்கை! திருமணமாகி கணவ
இங்கு வந்து செட்டிலாகிவிட்டாள். திருவான்மியூ
திருவள்ளுவர் நகரில் அழகான வீடு! கடல் காற்று மோ



மொட்டை மாடியிலிருந்து அலைகள் கட்டிப் புரண்டபடி வரும் அழகை பார்த்து ரசிக்கலாம். ரசனையோடு கட்டப்பட்டிருந்த வீடு! சித்ராவின் கணவர் அசோக் லேலண்டில் மானேஜராக இருக்கிறார். அருணை அழைத்துக் கொண்டு நேரே தங்கச்சி வீட்டிற்கே வந்துவிட்டான். அலுவல் வேலைகளை ஒரு மாதம் வரை தங்கி செய்து முடிக்க இதைவிட நல்ல இடம் வேறு எது? சித்ராவும், அவள் கணவரும் இயல்பாக பழகிய விதம், அந்நிய வீட்டில் தங்கியிருக்கிறோமே... என்கிற சங்கடத்தை ஏற்படுத்தவில்லை.

நுங்கம்பாக்கத்தில் அவர்கள் எதிர்பார்த்ததையும் விட மேலாக அலுவலகத்திற்கு இடம் கிடைத்தது. அந்த சந்தோஷத்தோடு ஆட்டோவில் திரும்பி வந்து கொண்டிருந்த போதுதான் அருணின் கண்களில் அவள் தென்பட்டாள்.

ஜெமினி மேம்பாலத்திலிருந்து ராயப்பேட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்த ஆட்டோவிற்கு எதிர்ப்புறம் வந்த மாநகரப் பேருந்தின் சன்னலோர இருக்கையில், காற்றில் மோதி முகத்தில் சில்மிஷம் செய்த முடிக்கற்றைகளை ஒதுக்கிய சவுந்தர்யாவின் முகம், ஒரு கணம், ஒரே கணம்தான் தென்பட்டது. அருண் பார்த்துவிட்டான். குபீரென ரத்தம் மொத்தமும் தலைக்குப் பாய்ந்தது போல் பரவசப்பட்டுப் போனான்.

"நாகராஜ்... அதோ... அதோ சவுந்தர்யா!" கிட்டத்தட்ட அலறினான்.

"எங்கே? ஆட்டோ... அப்படி ஓரமா நிறுத்துப்பா!"

"அதோ, அந்த பஸ்லேதான்... நான் பார்த்தேன்!" கடந்து போன பஸ்ஸை கட்டிக் காட்டினான்.

"அது எப்படி அருண்... அவ்வளவு கரெக்டா செ...
வேகமா போற பஸ்லே முகம் தெளிவா தெரியாது. ஒரு...
அவளைப் போல சாயல்ல உள்ள வேற பெண்ணா...
இருக்கலாமில்லையா? நீ அவளோட நினைவா...
இருக்கிறதாலே அப்படி தெரிய சான்ஸ் இருக்கு!"

"நோ... நோ... யூ ஆர் ராங்! நிச்சயமா அது ...
சவுந்தர்யாதான்!"

"சரி... அப்படின்னா சந்தோஷம்தான்! அவள் இ...
ஊர்லதான் இருக்கிறான்னு தெரிஞ்சுபோச்சு! ஈசி...
கண்டுபிடிச்சிடலாம்!"

"இப்படியே அந்த பஸ்சை பாலோ பண்ண முடியாதா?"

"எதிர்ப்புறம் போற பஸ்ஸை பிடிக்கறது கஷ்...
இங்கேயே ஆட்டோவை திருப்பினா இடைஞ்ச...
போலீஸ்காரன் வந்து கொத்தா சட்டையை பிடிச்சுப்பா...
கிளம்பு... ஆட்டோ எடுப்பா!"

ஆட்டோ கிளம்பியது.

அருண் ஆயாசமாக சேரில் சாய்ந்து கொண்டான்.

ஒரு கணம்தான் பார்த்தான் என்றாலும்... அவள் மு...
அவன் மனதில் தெளிவாய் பதிந்திருந்தது.

களைத்து... சிறிது கறுத்துப் போயிருந்தது முகம்.

அருண் பாக்கெட்டில் இருந்த சவுந்தர்யா...
போட்டோவை எடுத்தான்.

கன்னத்தில் குழி விழ பற்கள் தெரியாத புன்னகை! அழ...
கண்கள். மயில் தோகைபோல் இமைகள். வளைந்த ...





புருவம்... நேர்த்தியான மூக்கு! குவிந்த சின்ன உதடுகள் இயற்கையாகவே கன்னக்கதுப்பு சிவப்பை வாங்கியிருந்தது. சவுந்தர்யமான தேவதை. பெயருக்கேற்ற அழகு! அருண் போட்டோவை தன் நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டான். கனத்தது இதயம்.

'மறுபடி என் கண்களில் தென்படுவாயா தங்கமே!'

அந்த அதிசயம் அடுத்த வாரமே நிகழ்ந்தது!

அலுவலகத்திற்கு தேவையான பர்னிச்சர்கள் வாங்க அருணும், நாகராஜனும், பூக்கடையிலுள்ள அந்த பெரிய கடையில் ஒவ்வொரு பொருளையும் பார்த்துப் பார்த்து தேர்வு செய்தனர்.

வெளியில் மழை பயங்கரமாய் கொட்டிக் கொண்டிருந்தது.

பெரிய கடைஅது! முழுக்க ஏசியால் குளிர்ந்திருந்தது ஹால்! கண்ணாடி தடுப்பு போட்டிருந்தார்கள். இங்கிருந்து பார்க்க ரோடும், மனிதர்களும் அப்பட்டமாய் தெரிந்தார்கள். கடைக்கு நேர் எதிரே பஸ் ஸ்டாண்ட்! மழைக்கு நடுங்கி ஒடுங்கியபடி பஸ் வரவிற்காக காத்திருந்த பயணிகள். கடைக்காரர் வருவித்து தந்த டீயை உறிஞ்சிக் கொண்டிருந்த அருணின் விழிகள் அதிர்ச்சியோடு உற்றுப் பார்த்தது.

'அவள்தானா?'

பஸ் ஸ்டாண்டில் பலதரப்பட்ட மனிதர்கள் மத்தியில் நனைந்த கோழிக்குஞ்சாய் நின்றிருந்த அந்த இளம்பெண்ணை உற்றுப் பார்த்தான். ஐம்பது வயது மனிதரின் பின்னால் நின்றிருந்தவள் ஏதோ பஸ் வரவும் முன்னேறி வந்து நின்றாள்.

அருணுக்கு ஷாக்கடித்தது.

அவன்தான்... அவனேதான்!

உணவை வைத்துவிட்டு விருட்டென எழுந்து ஓடின

நாகராஜன் அவனை புரியாத அதிர்ச்சியோடு தொடர்ந்தான். அருண் வாசலுக்கு வருவதற்குள் ஒரு கிளம்பியது.

சவுந்தர்யா நின்றிருந்த இடம் காலியாய் இருந்தது.

"நாகராஜ்... நீ பார்த்துக்க... நான் நேரே வீட்டு வந்திடறேன்" விளக்கமாய் சொல்ல நேரமின்றி ஆட்டோவை பிடித்து அந்த பஸ்ஸை பாலோ செய்தான்.

ஆனால், சவுந்தர்யா அந்த பஸ்ஸிலேயே ஏறவில்லை.

இடது பக்கமிருந்த ஒரு டிபார்ட்மென்ட் ஸ்டோர் எதையோ வாங்கப் போயிருந்த கோமதிக்காக காத்திரு சவுந்தர்யா... அவள் வரத் தாமதமானதைக் கண்டு அவளு அந்த கடைக்குச் சென்றிருந்தாள்.

அங்கு விதிகூட கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்தது.

"என்ன அருண்... பாதியிலேயே எழுந்திட்டே?" நாகரா நண்பனை வியப்பாய் ஏறிட்டான்.

"போதும்... பசிக்கலை!"

கை கழுவச் சென்றவனை கவலையாய் பார்த்த கொண்டிருந்தான்.

"ஏன்னா... அவர் ஒரு மாதிரியா இருக்கார்?" சித் கேட்டாள்.

"முக்கியமான பொருள் ஒண்ணை தொலைச்சிட்டான். அ கிடைக்கிற வரைக்கும் இப்படித்தான் இருப்பான்!"



"என்ன பொருள் அது?"

"கிடைச்சதும் காட்டறேன்... ரசம் விடு!"

"அப்படியென்ன... என்கிட்டே சொல்லக்கூடாத ரகசியம்?"

"ரகசியம்னு புரியுதுல்லே? எந்த அறிவாளியாவது பொம்பளைக் கிட்டே ரகசியத்தை சொல்வானா?"

"அப்ப... என்னை என்ன ஓட்டை வாய்னா சொல்றே?"

"சில விஷயங்களை பளிச்சினு சொல்லக் கூடாது சித்ரா!" நக்கலாய் சிரித்தான் நாகராஜன்.

அருண் கொஞ்சம் இளைத்தும் விட்டான்.

கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத மாதிரி, மின்னலாய் காணாமல் போன சவுந்தர்யாவை நினைத்து நினைத்தே உருகிப் போனான்.

'பாவம்... மழையில் நனைந்து, குளிரில் நடுங்கி நின்றிருந்தாளே! எங்கேனும் வேலைக்குப் போகிறாளோ? வேலைக்குப் போய்தான் சாப்பிட்டாக வேண்டிய கட்டாயத்தில் தான் என் கண்ணம்மா இப்படி வெயிலிலும், மழையிலும் கரைந்து கொண்டிருக்கிறாளோ? காய்ச்சல் வந்தால் எப்படி தாங்கிக் கொள்வாள்? உடனிருந்து யார் பார்த்துக் கொள்வார்? ஐயோ... சவுந்தர்யா!' ஊமையாய் அழுதான். துடித்தான். சவுந்தர்யாவுக்கு வந்ததோ, இல்லையோ அருணுக்கு காய்ச்சல் வந்தது.

கிட்டத்தட்ட அனைத்து வேலைகளும் முடிவடைந்து விட்டன. இன்னும் இரண்டு நாட்களில் திருச்சிக்குப் புறப்பட வேண்டும். போய்... அங்குள்ள கடையை விற்பதா, அல்லது

நம்பிக்கையான ஒரு நபரிடம் ஒப்படைத்துவிட்டு வந்தவன் ஏதோவொன்று அங்கு சென்ற சூழலுக்கேற்ப முடிவெடுத்து விட்டு ஒரே வாரத்தில் சென்னைக்குத் திரும்ப வேண்டும்.

இன்னும் பத்து நாளில் அலுவலகத் திறப்பு விழா. அருண்தான் அலுவலகப் பொறுப்பு முழுக்கக் கவனிக்க வேண்டும். அவனுக்கு மிகப்பெரிய ஆறுதல்... சவுந்தர்யா இதே சென்னையில்தான் இருக்கிறாள் என்பதுதான். எப்படியும் அவளைப் பார்த்துவிடலாம் என்கிற நம்பிக்கை அதிகமாகவே இருந்தது.

நாகராஜனும், அருணும் மேல்மாடியில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சித்ரா பரிமாறிக் கொண்டிருந்தாள்.

அந்த நேரம் பார்த்துதான் காலிங்பெல் சத்தம் கேட்டது.

சித்ரா அவசரமாய் படியிறங்கி வந்தாள். அதற்குள் மேலும் இரண்டு முறை காலிங்பெல் அலற எரிச்சலாய் கத்தினாள்.

"வந்துட்டேன்..." என்றபடி கதவைத் திறந்தாள்.

ஒரு இளம்பெண் நின்றிருந்தாள். தோளில் ஒரு பையும், கையில் பைலுமாய், நெற்றிப் பொட்டில் வியர்வையுமாய் நின்றிருப்பவளைப் பார்த்ததும் எரிச்சல் அதிகமாகியது.

"யார் நீங்க? என்ன வேணும்?"

"மேடம்... ஐயம் சவுந்தர்யா! ஐ.எம்.ஆர்.பி.யிலேர்ந்து வர்றேன். நீங்க எந்த கம்பெனி டி.வி. வாங்கியிருக்கீங்க அதைப்பத்தி சொன்னீங்கன்னா உதவியா இருக்கும்!"

"ஏங்க, கொஞ்சமாச்சும் அறிவிருக்கா? சாப்பிடற நேரத்தில இப்படியெல்லாம் தொந்தரவு செய்றீங்களே!"



"ஸாரி மேடம்! தொந்தரவுக்கு மன்னிக்கணும். இது ஒரு அஞ்சு நிமிஷ வேலைதான்! டி.வி.யை பத்தி, எந்த சேனலை விரும்பிப் பார்க்கறீங்க? எந்த நிகழ்ச்சியை தொடர்ந்து பார்க்கறீங்கன்னு... நான் கேக்கற கேள்விக்கு மட்டும் பதில் சொன்னா போதும்!"

"நேரமில்லீங்க... அடுத்த வீட்டுலே போய்க் கேளுங்க!"

"நீங்க சாப்பிட்டு முடிச்சிட்டே வாங்க... நான் அதுவரைக்கும் காத்திருக்கேன்!"

"விடமாட்டீங்க போலிருக்கே! வெளியே இருங்க... பத்து நிமிஷம் கழிச்சி வர்றேன்!" சித்ரா கதவை சாத்திவிட்டு மாடிக்கு வந்தாள்.

"யாரு சித்ரா?" நாகராஜன் கேட்டான்.

CPL

சித்ராவும் சொன்னாள்.

"நீங்க உட்கார்ந்து சாப்பிடுங்க சிஸ்டர்! நான் சாப்பிட்டு முடிச்சாச்சு... நான் போய் பதில் சொல்லி அனுப்பிட்டு வர்றேன்!" அருண் எழுந்தான்.

"டேய்... டேய்... போய் உன் வேலையைப் பாருடா! பொம்பளை வந்திருக்கான்னு தெரிஞ்சதும் பதில் சொல்ல பறக்கறான் பாரு..." நாகராஜன் கிண்டலடிக்கவும் அருண் செல்லமாய் முறைத்துவிட்டு கை கழுவியபின் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

சித்ரா நிதானமாகவே சாப்பிட்டாள். பத்து நிமிடம் அரை மணியாயிற்று... முக்கால் மணி நேரமாயிற்று.

பொறுமையிழந்த சவுந்தர்யா காலிங்பெல்லை அழுத்தினாள்.

கோபம் பொத்துக் கொண்டுவர, சீற்றத்தோடு படியிறங்கிப் போனான்.

கதவைத் திறந்தவள் அதே வேகத்தோடு கத்தினாள்.

"நிம்மதியா சாப்பிடக் கூட விடமாட்டீங்களா?"

"மேடம்... ரொம்ப நேரமா காத்திருக்கேன். ப நிமிஷத்துலே வர்றேன்னுட்டு..."

"அது என் இஷ்டம்! நானா உன்னை காத்திருக்க சொன்னேன்? இதப்பார்... என்னால எந்த பதிலும் சொல்ல முடியாது... கிளம்பு!"

சவுந்தர்யாவுக்கு முகத்திலடிப்பது போலிருந்தது.

"உங்களால சொல்ல முடியலேனா... வீட்டுலே வேற யாரையாவது...!"

"இங்கே பாரு... நிஜமாவே நீ டி.வி.யை பத்தி சர்வே எடுக்க வந்தியா? வேற எதுக்காகவோ? எனக்கு சந்தேகமா இருக்கு. முதல்ல இடத்தை காலிபண்ணு!" பட்டென்று கதவை அறைந்து சாத்தினாள் சித்ரா!

சவுந்தர்யாவுக்கு கண்கள் குளமாக... அவசரமாய் அங்கிருந்து அகன்றாள்.

கதவு அறைந்து சாத்தப்படும் சத்தம் கேட்டு அருண் பால்கனிக்கு வந்து எட்டிப் பார்த்தான்!

கண்களை துடைத்தபடி ஒரு பெண் விரைவாய் நடப்பதைப் பார்த்தவனின் கண்கள் விரிந்தன.

அந்தப் பெண்ணின் பின்புறம் சவுந்தர்யா போல் இருக்க துணுக்குற்றான்.



தெருமுனைக்குச் சென்று ரோட்டை கிராஸ் செய்து பக்கவாட்டில் திரும்பியபோதுதான் அவள் சவுந்தர்யா என்று ஊர்ஜிதமாயிற்று.

ஒரே பாய்ச்சலாய் இறங்கி ஓடினான்.

தெரு ஆள் அரவமற்று சத்தமாய் இருந்தது. அவன் ஒவ்வொரு தெருவாய் தேடினான்.

சவுந்தர்யா கிடைக்கவேயில்லை.



12

ஆறு மாதங்கள்... ஆறு யுகங்களாக கழிந்தன.

அருண் நடமாடினான். பேசினான். குளித்தான், சாப்பிட்டான், வேலை பார்த்தான். அத்தனையும் கவிட்ச் போட்டது போல் இயந்திரத்தனமாய்தான். அதில் உயிர் இல்லை. அவனின் உயிர் சவுந்தர்யாவிடம் இருந்தது. அவள்தான் இங்கில்லையே.

அவள் சென்னையில் இருக்கிறாள், எப்படியும் சந்தித்துவிடலாம் என்கிற நம்பிக்கையோடு இருந்தவனின் எண்ணத்தில் மண் விழுந்தது.

அன்று சித்ரா வீட்டிற்கு சவுந்தர்யா வந்து சென்றும் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமல் போனது போல் சவுந்தர்யாவை தவறவிட்டான். யாரை வலைவீசி தேடிக் கொண்டிருந்தானோ, அந்த மானே அவன் கூடாரம் தேடிவந்தும்... பிடிக்க முடியவில்லை. அப்படியும் அருண் மனம் தளரவிடவில்லை. சித்ராவிடம் வந்தவளைப் பற்றி தூண்டித் துருவி விசாரித்தான்.

அவன் பெயரையும், வேலை செய்யும் நிறுவன... பற்றியும் நினைவிற்கு கொண்டுவந்து சொல்ல ... நேரங்கள் தேவைப்பட்டது சித்ராவிற்கு. பெயர் ... மானதும் பரபரத்துப் போனான் அருண்!

டெலிபோன் டைரக்டரியில் அந்த நிறுவன... முகவரியையும், போன் நம்பரையும் கண்டுபிடித்து ... டயல் செய்தான்.

போனை எடுத்தது கவுசிக்!

இவனைப் பற்றியும் கொஞ்சம் சொல்லியாக வேண்... கவுசிக் - எப்போதும் பசியோடிருக்கும் நல்லபாம்பு! ... நிறுவனத்தின் மானேஜராக இருப்பவன். ஆளும் பா... அழகாய் இருப்பான்! திருமணமாகாதவன். என்றாலும் தி... சாந்திமுகூர்த்த அனுபவம் உண்டு! அவன் பார்... பெண்களுக்கெல்லாம் மனதிற்குள் மார்க் போடுவான். அ... அறுபதிற்கு மேல் மார்க் வாங்கும் பெண்களுக்கு ம... வட்டம் போடுவான். அவனிடம் ஆளையே கவிழ்த்தி வி... பேச்சுத் திறமையும் இருந்ததால்... விட்டில் பூச்சிகள், வேக... வந்து விழுந்து மடிந்து போயின. அவன் நிக... பெண்களை, ஒரு சிலரைத் தவிர தொடாமல் விட்டதேயில்...

கவுசிக் சவுந்தர்யாவுக்கு போட்ட மார்க் தொண்ணூ... அவன் இதுவரை வேறு எந்த பெண்ணுக்கும் அவ்வளவு ம... போட்டதில்லை. முதன்முதலாய் அவளைப் பார்த்தபோ... அசந்து போய்விட்டான். அவளை ஒரே ஒருமுறை தொ... பார்த்து சக்கி எறியும் எண்ணம் அவனுக்கில்லை. கழுத்... மஞ்சளாய் ஒரு கயிறை கட்டி மஞ்சத்தில் தினம் தினம் ரு... பார்க்க விரும்பினான். ஒருநாள் நாகரீகமாய் ... எண்ணத்தையும் அவளிடம் வெளியிட்டான்.



அதிர்ந்து போனாலும் நிதானம் இழக்கவில்லை சவுந்தர்யா!

அவளைப் பொறுத்தவரையில் திருமணம் என்கிற சடங்கு இனி தன் வாழ்வில் கிடையாது. முதன்முதலாய் அவள் மனதில் அனுமதியின்றி, நுழைந்தவன் அருண்! அதன்பின் எதேச்சையாக தரகர் மூலம் அவன் ஜாதகமே வீடு தேடிவந்ததும், அப்பா அவனை தன் மருமகனாக்கிக் கொள்ள இசைந்ததும், தெய்வச் செயல்! அதன்பின், காதலனாய் இருந்தவன் கணவனாய் அவள் மனதில் ஆக்கிரமிப்பு செய்தான். கனவில் அவளிடம் கொஞ்சி, குலவிய நாட்கள்தான் எத்தனை எத்தனை? விதி வலியதுதான்! அவர்கள் இருவரையும் எதிராளிகளைப் போல் கோர்ட் வரை சென்று சண்டை போட வைத்து பிரித்து வைத்தாலும்... அருண் அவள் இதயத்தை விட்டு இன்னும் அகலவில்லை.

அதைத்தான் கவுசிக்கிடம் சொன்னாள்.

"மன்னிச்சிடுங்க சார்! எனக்கும், அருண் என்பவருக்கும் நிச்சயமாகி விட்டது! இதைப்பற்றி இனிமேல் பேச வேண்டாம்" என்றாள்.

கவுசிக்கிற்கு முகத்திலடிப்பது போலிருந்தது.

அத்துடன் அவன் அதைப்பற்றி பேசுவதை தொடரவில்லை என்றாலும், அவளை ஒருமுறையாவது தொட்டுவிட வேண்டும் என்கிற வெறி மட்டும் தணியவே இல்லை!

அதையும் நாசுக்காய் கேட்டுப் பார்த்தான். "சீ..." என்று காறித் துப்பினாள் சவுந்தர்யா!

ஒருமுறை யாருமில்லாத தருணத்தில் தனிமையைப் பயன்படுத்தி அவளிடம் தகாத முறையில் நடக்கப் பார்த்தான்

தப்பித்து வந்துவிட்டாள். யாரிடம் சொல்லவும் அந்த
எப்படியெனினும் இதில் அசிங்கம் தனக்குத்தானே
கோமதியிடம் கூட சொல்லவில்லை. பல்லைக்
கொண்டு பணிபுரிந்தாள். அதேசமயம் பேப்பரில் 'ஆ
தேவை' பகுதியில் தேர்ந்தெடுத்த சில நிறுவனங்க
விண்ணப்பித்தாள். அதில் ஒரு நிறுவனம் அவளை தேர்
தேர்விற்கு அழைத்திருந்தது. இன்னும் ஓரிரு நா
இருந்தது இன்டர்வியூவிற்கு. கடைசியாய் அந்த நிறுவ
பணிபுரிந்தது சித்ரா வீட்டிற்கு வந்தாளே... அன்றோடு
சித்ரா பேசிய பேச்சு வேறு அவளுக்கு வேதனையைத்
அன்றைக்கே தன் ராஜினாமா கடிதத்தை கொடுத்து
சென்றாள். ராஜினாமாவை ஏற்றுக் கொண்ட நிறுவ
அப்போதே அவளுக்கு சேர வேண்டிய சம்பளத்தை கொ
அனுப்பியது.

கவுசிக் கொதித்துப் போனான். இப்படி ஒட்டு மொத்த
அவள் ஆபீஸிற்கே 'குட்பை' சொல்வாள் என்று அ
நினைத்தே பார்த்திராத ஒன்று!

அதனால்தான் அருண் போன் செய்தபோது
பூசணிக்காயையும் சோற்றில் மறைத்தான்.

அதுவும் அவன் பெயர் அருண் என்றதும் ஈயத்தைக் கா
காதில் ஊற்றியது போலானான். இவனால்தானே சவுந்த
என்னை வேண்டாமென்று மறுத்தாள்?

"ஸாரி சார்! சவுந்தர்யா என்கிற பெயரில் இங்கே யா
வேலை பார்க்கவில்லை" என்று ஒரே போடாய் போ
விட்டான். அதில் ஒரு திருப்தி கவுசிக்கிற்கு.

அருணின் நிலைதான் கஷ்டமாயிருந்தது



"அங்கே வேலை பார்க்கலைன்னு சொல்றாங்களேடா என்னடா பண்றது?" பரிதாபமாய் கேட்டான்.

அவனைப் பார்க்கவே கஷ்டமாயிருந்தது நாகராஜனுக்கு.

"கவலைப்படாதே அருண்! கண்டுபிடிச்சிடலாம். சித்ரா, நல்லா ஞாபகப்படுத்தி சொல்... அந்த கம்பெனி பேர் அதேதானா?"

"நல்லா நினைவிற்கு. நான் சொன்னது கரெக்ட்தான். ஒருவேளை அவள்தான் பொய் சொல்லியிருக்காளோ, என்னவோ?"

"எதுக்குங்க... எதுக்காக அவள் பொய் சொல்லணும்? சவுந்தர்யா ரொம்ப நல்ல பெண்!" அந்த சூழ்நிலையிலும் அருணுக்கு கோபம் வந்தது.

"ரிலாக்ஸ் அருண்! இத்தனை முறை உன் கண்ல அகப்பட்ட சவுந்தர்யா இன்னொருமுறை அகப்பட மாட்டாளா என்ன? உன்னோட அன்பு காந்தம் போல... அவளை எங்கேயிருந்தாலும்... உன்கிட்டே கொண்டு வந்து சேர்த்திடும்! கவலைப்படாதே!" நாகராஜனின் வார்த்தைகள் அருணிற்கு தெம்பூட்டின!

அந்த ஒரு வார்த்தைதான் அருணை இந்த பூமியில் மனிதனாய் நடமாட வைத்துக் கொண்டிருந்தது. எப்படியோ மனதை ஒருநிலைப்படுத்தி வேலையில் கவனம் செலுத்தினான். ரியல் எஸ்டேட் பிஸினஸ் ஓரளவு எதிர்பார்த்ததை விடவும் சிறப்பான முறையில் முன்னேறி விட்டது. பத்திரிகை, தொலைக்காட்சி விளம்பரமின்றி பிரபலமாகி மக்களின் நம்பிக்கைகுரிய ஸ்தாபனமாக விளங்கியது. இதன் முழு பெருமையும் அருணையே சாரும்.

நாகராஜன் அருணை நினைத்து மகிழ்ந்தான். அதே சவுந்தர்யாவை நினைத்து நினைத்தே பாதி இளைத்து நண்பனைப் பார்த்து வருத்தப்பட்டான். கார அவனுக்கு சவுந்தர்யா மீது கோபம் ஏற்பட்டது. அவன் இதயத்திலிருந்து வழித்தெறிந்து வி பிஸினஸில் இன்னும் அதிகமாக ஈடுபாடு கொ அதனால் லாபம் அதிகரிக்கும் என்று கணக்கு போட் அதோடு சும்மாவிருந்து விடவில்லை. போட்டோ அருண் முன் நின்றான்.

"அருண்... இதையெல்லாம் பார்! உனக்கு எந்தப் பிடிச்சிருக்கு... சொல்லு?!"

"எதுக்குப்பா... உனக்குத்தான் கல்யாணமாய்டுச்சே"

"மடையா... கல்யாணம் உனக்கு!"

நண்பனை வெறித்துப் பார்த்த அருண் தன் பர்ஸிலி சவுந்தர்யாவின் போட்டோவை எடுத்துக் காண்பித்தான்.

"இதோ... இந்தப் பெண்தான் பிடிச்சிருக்கு. எனக்கு ஜென்மத்துல கல்யாண பிராப்தம் இருந்தால் சவுந்தர்யாவோட மட்டும்தான்!" தீர்மானமாய் உரைத்தா

"ஷிட்! பைத்தியம் பிடிச்சிருக்குடா உனக்கு! நீயெல் திருந்தவே போறதில்லே! சப்போஸ் நீ சவுந்தர்யா சந்திக்கறேன்னே வச்சிக்கலாம். பட், அவளுக்கு உ கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லேன்னு சொல்லி என்ன பண்ணுவே?"

"அப்படி ஒரு கேள்விக்கே இடமில்லே! ஏன்னா, அவ என்னை கல்யாணம் பண்ணிக்க விருப்பம்னு ஏற்க சொல்லிட்டா...!"



"ஒருவேளை இப்ப மனசு மாறியிருக்கலாமில்லையா?"

"இருக்காது... நிச்சயமாயிருக்காது."

"பொம்பளைங்க மனசு சட்டுனு மாறிடும் அருண்!"

"எல்லாரையும் ஒரே மாதிரி எடை போட்றாதே! வில்லை வளைச்சிடலாம். வானவில்லை வளைச்சிட முடியாது."

"நீ சொன்னதுல ஒரு வார்த்தை சரி! சவுந்தர்யா வானவில்தான்! திடீர்னு உன் கண் முன்னால வந்து நிக்கறா. அடுத்த நிமிஷமே காணாமப் போயிடறா! சரி அருண்... இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி தேடிக்கிட்டே இருக்கப் போறே? பிராக்டிகலுக்கு வாப்பா!"

"என் ஆயுசு முடியற வரைக்கும் தேடிக்கிட்டேதான் இருப்பேன். முதல்லே இந்த போட்டோக்களை எடுத்து பாக்கெட்டுக்குள்ளே வைச்சிட்டு கிளம்பு!"

நாகராஜன் ஒரு பெரிய பெருமூச்சோடு அகன்றான்.

ஈஸ்வரனுக்கு இரண்டாமாண்டு நினைவு நாள்!

அருண் அந்த நாளில் தன் தந்தையின் ஆத்மசாந்திக்காக ஏதாவதொரு அனாதை இல்லத்திற்கு உணவு வழங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

சென்ற வருடம் உதவும் கரங்களுக்கு வழங்கினான். இந்த வருடம் சேலத்தில் அவனுக்கு பிஸினஸ் விஷயமாய் ஒரு வேலை இருந்தது. ஆகவே அங்குள்ள "அன்னை தெரஸா ஆதரவற்றோர் இல்லத்திற்கு" உணவு வழங்க ஏற்பாடு செய்திருந்தான். அதைக் குறித்து நிர்வாகி தேவகியம்மாளிடம் போனிலேயே பேசி அனுமதி பெற்றான்.

தேவகியம்மாள் ஐம்பதை கடந்த மாது! சாந்தம் ... முகம்! நரை அவர்களுக்கு கம்பீரத்தை தந்தது. புன்... அமைதி பேச்சு!

அருண் ஆச்சர்யமாய் அந்தம்மாவையே பார்த்... கொண்டிருந்தான்.

"தம்பி, உங்களை மாதிரி எல்லோரும் இருந்தாங்கன்னா... இந்த பிள்ளைங்களுக்கு வயிறார உணவு போட... எவ்வளவோ பணக்காரங்க இருக்காங்க! விழா, பண்... நாட்கள் நண்பர்கள், உறவினர்கள்னு கூட்டம் கூட்டி பா... நடத்தறாங்க! அதுக்கு பதிலா உங்களை மாதிரி இந்த ... பிள்ளைங்களுக்கு வயிறார சாப்பாடு போட்டா எவ்வ... புண்ணியம் ஊகும்... பணக்காரங்களுக்கு மட்டும் என்... ஆண்டவன் தாராள குணத்தை தராமவிட்டாரோ தெரி... தேவகியம்மாள் இயலாமையை, ஆற்றாமையை ... நித்தார்.

"நீங்க சொல்றதும் வாஸ்தவம்தான்! ஆனா, எல்... பணக்காரங்களும் ஒரேமாதிரி இருக்கிறதில்லே! சில... தயாள குணத்தோடு உதவறவங்களும் இருக்கத்தா... செய்றாங்க!"

"சிலபேர்ங்கறது... பலபேரா மாறணும்... அதுதான் ... ஆசை!"

"இங்கேயுள்ள அத்தனை குழந்தைகளும் அனாதை... தானா?"

"ஊகும்... பத்து மாசம் சுமந்ததே பெரிய பாரம். இன்... எத்தனை காலத்துக்கு சுமக்கணும்னு இந்த ஆஸ்ரம வாச... வீசி எறிஞ்சிட்டு போய்டறாங்க! கிட்டத்தட்ட ஐநூறு ...



அப்படி எறியப்பட்டவங்க! அம்பது பேர் முதியவர்களும் இருக்காங்க! பிள்ளைகளுக்கு பாரம்னு விரட்டியடிக்கப் பட்டவங்க! சம்பளமே வாங்கிக்காம இந்த நிறுவனத்துக்கும், பிள்ளைகளுக்கும் உதவி செய்கிற நோக்கத்தோட, வேலை செய்யற பெண்கள் பத்து பேர் இருக்காங்க! அவங்களும் இங்கேயே தங்கிதான் வேலை செய்றாங்க!"

தேவகியம்மாள் சொல்லச் சொல்ல அருண் உருகிக் கொண்டிருந்தான்.

'எப்படியோ, தன்னால் இயன்ற சிறு உதவியையாவது இந்த இல்லத்திற்காக செய்ய முடிந்ததே' என்கிற நிம்மதி மனதிற்கு ஏற்பட்டது.

அருண் ஏற்பாடு செய்திருந்த உணவுப் பொட்டலங்கள் ஹோட்டலில் இருந்து குறித்த நேரத்தில் வந்திறங்கியது.

அவற்றை விநியோகிக்க எழுந்தான் அருண்!

"தனியே சிரமப்பட வேண்டாம் தம்பி! உதவிக்கு ஒரு ஆளை ஏற்பாடு செய்கிறேன்!" என்ற தேவகியம்மாள் அந்த அறையை விட்டு வெளியேறினார்.

அடுத்த சில நிமிடங்களில் உள்ளே வந்தார்.

"வாம்மா! இவரோடு உணவு பொட்டலம் விநியோகிக்க கூட இருந்து உதவி செய்!"

குரல் கேட்டு திரும்பிய அருண்... சேரை விட்டு ஸ்லோமோஷனில் எழுந்தான்.

அவளைப் பார்த்து 'வணக்கம்' சொல்ல கைகூப்பிய சவுந்தர்யா கூட திறந்த வாய் மூடாமல் அப்படியே நின்றுவிட்டாள்.

''க..வு..த்..தா..ர்..யா...!''

''அ..ரு..ண்...!''

''உங்க ரெண்டு பேருக்கும் ஏற்கனவே அறிமுகம் உண்டா
தேவகியம்மாள் ஆச்சர்யமாய் வினவிய வினாவிற்கு ப
சொல்லும் நிலையில் இருவரும் இல்லை.

நாகரீகமாய் அந்த அறையை விட்டு வெளியேறினார்.

அந்த ஜோடிப் புறாக்களின் நான்கு கண்க
கடந்துபோன நாட்களின் கசப்புக்களை பேசிக் கொண்
நாக்குகள பேச திணறின.

நெருங்கி வந்த அருண் தன் கரங்களை அவள் மு
நீட்டினான்.

கண்ணீரோடு புன்னகைத்தாள். இவ்வுலகிலேயே அ
என்பதை நிரூபிக்கும் விதமாக கன்னத்தில் உருண்டோ
கண்ணீரோடு வெளிப்பட்ட சிரிப்போடு அவன் கரங்கள
தஞ்சமடைந்தாள். அவன் சட்டை நனைந்தது. சவுந்தர்யாவி
னையும் நனைந்தது.

அவன் தேடிக் கொண்டிருந்த மலர் அவனுக்கு
கிடைத்துவிட்டது. 'அப்பாடா...' என்று நிம்மதி பெருமூச்
வெளியிட்டான். அந்த சத்தம் சவுந்தர்யாவின் காதிற்கு
தெளிவாய் ஒலித்தது!

★ ★ ★

# என் அ



1

அந்தி
அலுவலக
மக்கள் கூட்
ஸ்கூட்டர்க
கொண்டிரு

பிதுங்கி வழிந்த பஸ்ஸிலி
பிய்த்துக் கொண்டு இறங்கிய
முழுக்க நனைந்து விட்டிருந்தா

மணிக்கட்டைத் திருப்பி நே
வேக வேகமாய் நடந்தாள்.

சற்று தூரத்தில் விஸ்தார
கட்டிடங்களைக் கொண்டு
மருத்துவனை கண்களுக்குத்

நவநீதன் மருத்துவமனை!